# கல்கி




KALKI ஜூலை 4, 1954 4 அணா

# கல்கி பொருளடக்கம்

மலர் 13
இதழ் 49

1954 ஜுலை 4

ஜய ௵
ஆனி 20



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



## ஜஸ்மின் ரேயான் ஸில்க் –
## சகல திருநாள்களுக்கும்

புனிதமான நமது திருநாட்களும் பண்டிகை தினங்களும் நமது மாபெரும் நாட்டின் உயர்ந்த கலாசாரத்தையும் பண்பையும் குறிக்கின்றன. இம்மாதிரியான சுப தினங்களில் ஜஸ்மின் ரேயான் ஸில்க் துணியினால் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்து உற்சாகமடையுங்கள். ஜஸ்மின் மில்ஸாரின் புதிய மிஷினரியின் மூலம் உற்பத்தியான புதிய ரேயான் ஸில்க்குகள் நீண்ட காலம் உழைக்கிறது. விலையும் மலிவு. நம்பிக்கை வாய்ந்தது.

எல்லா ஜவுளிக் கடைகளிலும் கிடைக்கும்.

JASMINE MILLS LTD. BOMBAY

# ஜஸ்மின்

மில்ஸ் லிட்., பம்பாய்-16

I. 54. I – TAMIL

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 49

# முடி சூடா மன்னர் இருவர்!

பகை முற்றிய இரண்டு கட்சிகளுக்குள் உக்ரமான போர் மூண்டு, கணக்கு வழக்கின்றி உயிர்ச் சேதம் ஏற்பட்டு வருவதாக வைத்துக் கொள்வோம்.

அச் சந்தர்ப்பத்தில் ஒரு கட்சித் தலைவர்கள் மற்றொரு கட்சித் தலைவர்களிடம் சிக்கிக் கொண்டால், என்ன நேரும் என்பதைச் சொல்ல வேண்டுமா?

ஒன்று அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும்; இல்லாவிடில் அவர்கள் போர் முடியும் வரை பகைவர்களின் தயவில் சிறையிலே கிடந்து உழலும்படி நேரும்.

இதைத் தவிர, அத்தகையோருக்கு வேறு கதிமோட்சமே கிடையாது என்பதற்குச் சரித்திரத்தில் எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

சென்ற மகா யுத்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களும் இதையே நிரூபணம் செய்கின்றன.

எனினும், இதற்கு விதி விலக்காகச் சென்ற சில ஆண்டுகளுக்கு முன் உலகமே வியக்கும்படியான சம்பவம் நிகழ்ந்தது.

அச் சமயம் சீனாவிலே முடிசூடா மன்னராக விளங்கிய சியாங் கை ஷேக் கட்சிக்கும் சூ என் லாய் கட்சிக்கும் வெகு உக்ரமான உள்நாட்டுப் போர் நடந்து வந்தது.

அப்போது சிறைப்பட்ட சூ என் லாய் அதிர்ஷ்ட வசத்தால் சிறையிலிருந்து தப்பினார். தாடி வளர்த்து உருமாற்றிக் கொண்டார். ஒரு குகையில் பத்து வருஷ காலம் தலை மறைவாக வாழ்ந்து போரைத் தொடர்ந்து நடத்தினார்.

அவரை உயிருடனோ, அல்லது அவரது உடலையோ கொண்டு வருவோருக்கு ஒரு லட்சம் டாலர் வெகுமதி அளிப்பதாக சியாங் கை ஷேக் பிரகடனம் செய்திருந்தார்.

எந்தக் கட்சி வெற்றி பெறுவதாயினும் பல வருஷங்கள் வரையில் போர் நீடித்து நடப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை எல்லோரும் உணர்ந்தனர்.

எனவே, மேற்படி போருக்கு முடிவு காண்பதற்காக சூ என் லாயின் தளபதி மார்ஷல் சாங் குறுக்கு வழி ஒன்றைக் கண்டு பிடித்தார்.

அவர் வெகு துணிச்சலுடன் திட்டம் வகுத்தார். போர் முனையிலிருந்து வெளியேறினார். யாரும் எதிர்பாராத விதமாக சியாங் கை ஷேக் இருந்த கோட்டையைத் தாக்கினார். சியாங்கைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து சூ என் லாய் முன்னிலையில் நிறுத்தி விட்டார்!

அப்போது மார்ஷல் சாங் கூறிய யோசனையை சூ என் லாய் ஏற்றுக் கொண்டிருந்தால், சீனாவில் உள்நாட்டுப் போர் முடிந்திருக்கலாம்.

இப்போது சீனக் குடியரசு சர்க்காருக்குப் போட்டியாகப் பார்மோசாத் தீவில் சியாங்கை ஷேக் சர்க்கார் இருந்து வருகிறது அல்லவா? அந்த சர்க்கார் ஏற்படுவதற்கே வழியில்லாமல் போயிருக்கலாம்!

ஆனால் அக்காலத்தில் மார்ஷல் சாங் கூறிய யோசனையைப் பின்பற்ற சூ என் லாய் மறுத்து விட்டார். தம்மைப் பல விதத்திலும் கஷ்டப்படுத்திய சியாங் கை ஷேக் மீது அவர் வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்பவில்லை.

"கௌரவமான முறையில் சமாதானம் செய்து கொள்வோம், இல்லாவிடில் போரின் மூலம் முடிவு காண்போம்" என்று சியாங் கை ஷேக்கிடம் கூறி விட்டார்.

அவரைப் பத்திரமாக அவர் இருந்த இடத்துக்குத் திரும்பவும் கொண்டு போய் விட்டு விடும்படி, சூ என் லாய் தமது படைகளுக்குக் கட்டளை பிறப்பித்து விட்டார்.

இத்தகைய நேர்மையும் கண்ணியமும் வாய்ந்த, சமாதானத்தில் நாட்டம் கொண்ட சீன மக்களின் தலைவரும் சீனாவின் பிரதம மந்திரியுமான சூ என் லாயை வரவேற்கும் வாய்ப்பு சென்ற வாரம் இந்திய சர்க்காருக்கும் புது டில்லி வாசிகளுக்கும் கிடைத்தது.

* * * *

பாரத நாட்டின் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜியின் அழைப்புக் கிணங்க, ஜினிவாவிலிருந்து சீனாவுக்குச் செல்லும் வழியில் புது டில்லிக்கு விஜயம் செய்த சூ என் லாய்க்கு அங்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ஜாக்கிரதை!




***சீனப் பிரதமர் சூ என் லாய் சமீபத்தில் டில்லிக்கு விஜயம் செய்து இந்தியப் பிரதமர் நேருவுடன் மூன்று நாட்கள் அளவளாவிப் பேசியதைக் கண்டு போர் வெறியர்களுக்குக் கலக்கம் உண்டாகலாம்.***

---

சீனா, இந்தியா இவ்விரு தேசப் பிரதம மந்திரிகளும் பல மணி நேரம் சந்தித்து அளவளாவினர். அவர்களுடைய மந்திராலோசனை உலகத்தின் கவனத்தையே கவர்ந்தது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இரண்டாயிரம் வருட காலமாக இருந்து வரும் நட்பு உலக நாடுகளுக்கே உதாரணமாக அமைந்திருக்கிறது என்பதை நேருஜி எடுத்துக் கூறினார். ஒவ்வொரு நாடும் தானும் சுதந்திரமாக வாழ வேண்டும்; பிறரும் சுதந்திரமாக வாழ வகை செய்ய வேண்டும்; உலகத்தில் சமாதானம் தழைக்க அதுதான் வழி என்ற உண்மையை வலியுறுத்தினார்.

ஆசியாவின் தலைவிதி இனி அன்னியர்களின் கையில் இல்லை என்று முழங்கினார் சூ என் லாய்.

கொரியா யுத்தம் நின்று சமாதானம் ஏற்படுவதற்குப் பாரத நாடு செய்த தொண்டைச் சீனப் பிரதமர் வெகுவாகப் பாராட்டினார். இப்போது இந்தோ-சீனா போர் நின்று சமாதானம் ஏற்பட இந்தியா செய்து வரும் பெரு முயற்சியைக் குறித்துப் பெருமிதம் அடைந்தார்.

*   *   *

நேருஜிக்கும் சூ என் லாய்க்கும் மூன்று நாட்கள் வரையில் நடந்த சம்பாஷணைகளைக் குறித்து வெளியான கூட்டு அறிக்கையில், ஆசியாவிலும் உலகிலும் யுத்த பீதி ஒழிந்து அமைதி ஏற்பட வேண்டுமாயின், இந்தோ சீனாவில் நடந்து வரும் போர் நின்று சமாதானம் உண்டாக வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

எந்த முறைகளை அடிப்படையாகக் கொண்டு சமீபத்தில் திபேத் பிரதேச சம்பந்தமாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் சமரச ஒப்பந்தம் ஏற்பட்டதோ, அதே முறைகளை உலக நாடுகள் கையாளுமாயின், உலக சமாதானம் நிலைபெறுவதற்கு வழி உண்டாகும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டிருக்கிறது.

1. பரஸ்பரம் ஒரு நாட்டின் எல்லையையும் சுதந்திர உரிமையையும் மதித்து நடக்க வேண்டும்.

2. உலக நாடுகள் பரஸ்பரம் யுத்த ஆக்கிரமிப்பைக் கைவிட்டு விட வேண்டும்.

3. எந்த நாடும் மற்றொரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்னைகளில் தலையிடக் கூடாது.

4. ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வு பாராட்டாமல் சமத்துவமாக மதித்து, பரஸ்பரம் லாபகரமான முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

5. எந்த நாடும் தான் அமைதியாக வாழ்வதுடன், பிற நாடுகளையும் அமைதியாக வாழ விட வேண்டும்.

இந்தியா, சீனா பிரதம மந்திரிகளின் கூட்டு அறிக்கையில் மேற்படி கொள்கைகள் வலியுறுத்தப்பட் டிருக்கின்றன.

இந்தக் கொள்கைகளை உலக நாடுகள் பின்பற்றுமாயின், தற்போது உலகத்தை ஆட்கொண்

டுள்ள பகையும், போட்டா போட்டியும், போர் வெறியும் ஒழியும்; மாநில மக்கள் மறப் போரி லிருந்து விடுதலை பெற்று, என்றென்றும் மகிழ்ச்சி யுடனும் அமைதியாகவும் வாழ வகை உண்டா கும் என்பதில் ஐயமும் உண்டோ!

* * *

நேரு - சூ என் லாய் சந்திப்பு உலக சரித் திரத்திலேயே இதற்கு முன் நிகழ்ந்திராத முக்கிய சம்பவம் என்று கூறுவது மிகையாகாது.

இந்தியா ஜனநாயக ஆட்சி நிலவும் நாடு. ஆனால் சீனாவிலோ பொது உடைமையை அடிப்படை யாகக் கொண்ட ஆட்சி நடைபெற்று வருகிறது. அது எப்படியாயினும், நேருஜி பாரத நாட்டிலும், சூ என் லாய் சீன தேசத்திலும் மக்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்று அந்தந்த நாட்டின் முடிசூடா மன்னராக விளங்குகிறார்கள்.

ஜனசக்தி சம்பந்தப்பட்ட வரையில் உலக நாடு களுக்குள் சீனாவும் இந்தியாவும்தான் முதல் ஸ்தானம் வகிக்கின்றன.

உலகத்தின் ஜனத் தொகையில் சற்றேறக் குறைய பாதி இந்த இருநாடுகளிலும் இருக்கிறது.

இந்தியாவுடனும் சீனாவுடனும் நட்புக்கொண்டு இந்த இரண்டு நாடுகளின் வழியைப் பின்பற்ற இந்தோனேஷ்யா, பர்மா போன்ற நாடுகள் தயாராக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே, ஜன நாயக தர்மத்துக்கு இணங்க, உலகத்தில் உள்ள ஜனங்களில் பாதிப் பேருக்கு மேல் இந்தியா சீனா நாடும் சமாதான வழியைப் பின்பற்ற முன் வருவார்கள்.

இதன் பலனாக, உலகத்தின் விதியையே மாற் றும்படியான சக்தி ஆசியா நாடுகளுக்கு ஏற்படும்.

யுத்த பீதியி லிருந்தும் யுத்தத்தி லிருந்தும் உலகத்தை உய்வித்து, சமாதான வழியில் திருப்பும் வாய்ப்பு ஆசியா நாடுகளுக்குக் கிடைக்கும்.

உலகில் உள்ள ஜனநாயக வல்லரசுகள் ஆசியா நாடுகளுடன் ஒத்துழைக்க முன் வருமாயின், அதன் பலனாக உருவாகும் புதிய உலகத்தில் சமாதானமும் சந்தோஷமும் சுபிட்சமும் பொங் கும் என எதிர்பார்க்கலாம்.

# மாளவியா மனம் மகிழ்வார்

பாரத நாட்டில் உள்ள மிகச் சிறந்த கல்வி நிலையங்களில் காசி சர்வகலாசாலை மிகப் பெரியது; மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அரசியல் துறை யில் மாபெரும் தலைவராக விளங்கிய பண்டித மதன்மோகன் மாளவியா தமது நீண்ட வாழ் நாளில் பெரும் பகுதியைக் காசி சர்வ கலாசாலை யின் ஆக்கத்துக்காக அர்ப்பணம் செய்திருந்தார். அயர்லாந்தில் பிறந்து பாரத நாட்டுக்கு வந்து இந்த நாட்டையே தமது தாய்நாடாகக் கொண்டு தொண்டு புரிந்த பெஸண்ட் அம்மையாரால் தொடங்கப்பட்ட காசி இந்து கல்லூரியைப் பிற்காலத்தில் பண்டித மாளவியா ஏற்றுக் கொண்டு அதை மாபெரும் பல்கலைக் கழகம் ஆக்கினார். கோடிக் கணக்கில் பொருள் சேர்த்து அந்தக் கல்வி நிலையத்தைப் பல கலை பயிலும் கழகமாக வளர்த்து வந்தார்.

பாரத நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய சர்க்கார் தாங்களே அப்பெரும் கல்வி நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பை நேர்முகமாக ஏற்று நடத்தி வருகிறார்கள். ஆண்டுதோறும் சுமார் பல லட்சம் ரூபாய் அந்தக் கல்வி நிலையத்துக் காகச் செலவிட்டு வருகிறார்கள்.

ஸ்தாபனம் எவ்வளவுக்குப் பெரியதோ அவ்வள வுக்கு அதை நிர்வகிப்பதும் கடினமானது என்று சொல்ல வேண்டியதில்லை.

பாரத நாட்டின் பண்புகளில் ஒன்று, எவ்வளவு முக்கியமான பணியாக இருந்தாலும் அதை நடத்துவோருக்குள் ஒற்றுமைக் குறைவும் உட் சண்டைகளும் ஏற்பட்டு இடையூறு விளைதல் என்பதையும் பார்த்திருக்கிறோம்.

மாளவியாஜி ஜீவியவந்தரா யிருந்த காலத்தி லேயே காசி சர்வகலாசாலை நிர்வாகத்தைப் பற்றி இத்தகைய வதந்திகள் பரவத் தொடங்கி விட்டன. அவர் சொர்க்கவாசியான பிற்பாடும் இந்திய சுதந்திர சர்க்கார் அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட பிறகும்கூட அவ்வளவு திருப்திகரமான செய்திகள் நமக்குக் கிட்டவில்லை.

நாளது 1954-ம் ஆண்டில் காசி சர்வகலா சாலையின் நட்சத்திரம் மறுபடியும் உச்சத்தை அடைந்து ஜொலிக்கத் தொடங்கி இருக்கிறது.

ஸ்ரீ ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் காசி சர்வ கலாசாலையின் உப அத்யட்சகராக நியமிக்கப் பட்டிருக்கும் செய்தியை அறிந்தால் சொர்க்க வாசியான பண்டித மதன்மோகன் மாளவியா முன் எப்போதும் அடையாத மகிழ்ச்சியை அடைவார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் அவர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆசி கூறுவார் என்று சொல்லவும் வேண்டுமா!

ஒரு ராஜ்யத்தை நிர்வகிப்பதைக் காட்டிலும் முக்கியமான திருப்பணி ஒரு சர்வ கலாசாலை யைத் தக்கபடி நிர்வகித்து நடத்துவதாகும். அவ் வளவுக்கு அது கடினமான வேலை என்பதையும் நாம் பார்த்து வருகிறோம். அவ்வளவு முக்கிய மான பொறுப்புள்ள திருப்பணியை வகித்து நடத்துவதற்கு உரிய அறிவும் ஆற்றலும் மற்ற குணநலன்களும் பெற்றுள்ளவர் ஸ்ரீ ஸி. பி. ராமசாமி ஐயர் என்பதிலும் ஐயமில்லை.

ஆயினும் இந்த உண்மையைத் தெரிந்து காரி யத்தில் நடத்தி வடநாட்டுத் தலைவர்களுக்கும் வழி காட்டிய பெருமை நம் செட்டிநாட்டு ராஜா ஸ்ரீ முத்தையா செட்டியாருக்கு உரியதாகிறது.

காலஞ் சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமது பெரும் பணிகளில் மிகச் சிறந்ததாகத் திகழவேண்டும் என்ற நோக் கத்துடன் அண்ணாமலை பல்கலைக் கழகத்தை உண்டாக்கி வளர்த்தார். அதற்காகப் பல லட்சம் ரூபாய் செலவிட்டதோடு, ஒரு கோடி ரூபாய் நிரந் தர மூலதனமும் ஏற்படுத்தி வைத்தார். தந்தை யின் லட்சியம் பரிபூரணமாக நிறைவேற வேண்டு மென்ற நோக்கம் கொண்ட ராஜா முத்தையா செட்டியார் அவர்கள் பெரும் பிரயத்தனம் செய்து ஸ்ரீ ஸி. பி. அவர்களைச் சென்ற ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உப அத்யட் சகர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் செய்தார். அதுமுதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து சிறப் புற்று வருவதைக் கண்டு வருகிறோம்.

ராஜா முத்தையா செட்டியார் காட்டிய வழியை இப்போது ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரஸாத்தும், மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தும் பின்பற்ற முன் வந்ததைப் பாராட்டுகிறோம்.

அவர்களுடைய வற்புறுத்தலின் பேரிலேயே ஸ்ரீ சி. பி. ராமசாமி ஐயர் காசி சர்வகலாசாலையின் உப அத்யட்சகர் பதவியையும் ஏற்க இசைந்தார் என்பது நன்கு வெளியாகி இருக்கிறது. அப்படி அவர்களை வற்புறுத்திச் செய்த இந்த நல்ல காரியம் விரைவில் மிக்க பலன் அளிக்கப் போகிறது என்பதில் ஐயமில்லை. காசி சர்வ கலாசாலை எல்லாத் துறைகளிலும் சிறப்படைந்து உலகிலேயே சிறந்த கல்வி நிலையங்களில் ஒன்று எனப் புகழ் பெறுவதை நாம் விரைவில் காணலாம்.

இப்போது நமது கவலையெல்லாம் காசி சர்வ கலாசாலையின் லாபம் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தின் நஷ்டமாகிவிடக் கூடாது என்பது தான். இரண்டு சர்வ கலாசாலைகளையும் பொறுப் பேற்று நடத்துவது ஸ்ரீ சி. பி. ராமசாமி ஐயரின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தாகாது. தென் னாட்டிலும் வடநாட்டிலும் இந்த இரு பெரும் கல்வித் திருப்பணிகளை ஸ்ரீ சி. பி. ராமசாமி ஐயர் தொடர்ந்து நடத்தி வருதல் சாத்தியமாக வேண்டு மென்று விரும்புகிறோம்.

# தலைகீழ் ஆட்சிக்குக் கண்டனம்

கிழக்கு வங்காளத்தில் நெருக்கடி தீர்ந்தால் தான் கவர்னர் ஆட்சி முடிவடையும்; கவர்னர் ஆட்சி ஒழிந்து ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால் தான் நெருக்கடி தீரும் என்ற விபரீதமான நிலைமை இன்று உண்டாகியிருக்கிறது.


கிழக்கு வங்காளத்தில் எழுந்துள்ள நெருக் கடிக்கு யார் காரணம்? அங்கு தொண்ணூற் றைந்து சத விகித மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரர்களான பஸ்லுல் ஹக் மந்திரி சபை யினர் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டதற்கு யார் பொறுப்பு? கிழக்குப் பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி மறைந்து கவர்னரின் இராணுவ ஆட்சி ஏற்பட்டதற்கு யார் ஜவாப்தாரி?

அமெரிக்கப் பத்திரிகையின் பொய்க் கூற்றுத் தான் என்பது, பாகிஸ்தான் பார்லிமெண்டில் நடந்த விவாதங்களி லிருந்து வெளியாயிற்று. பஸ்லுல் ஹக்கின் வார்த்தைகளைக் காட்டிலும் அமெரிக்கப் பத்திரிகை நிருபரின் வார்த்தை களில் பாகிஸ்தான் சர்க்கார் அதிக நம்பிக்கை வைத்ததே கிழக்கு பாகிஸ்தான் நெருக்கடிக்குக் காரணம் என்று மேற்படி பார்லிமெண்டு அங்கத் தினர்கள் குறிப்பிட்டனர்.

கிழக்கு வங்காளத்துக்குச் சுதந்திரம் வேண்டும் என்று பஸ்லுல் ஹக் கூறவே இல்லை என்ற உண் மையை எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான் முதலிய பிரமுகர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

"பாகிஸ்தானிலிருந்து பிரிந்து கிழக்கு வங்கா ளம் சுதந்திரம் அடைய வேண்டும் என்பதைத் தாம் முற்றிலும் எதிர்ப்பதாக ஜனாப் பஸ்லுல் ஹக்கே கராச்சியில் என்னுடன் பேசிக்கொண் டிருந்தபோது நேரில் கூறினார். அவ்விதம் சுதந் திரம் அடைவதால் கிழக்கு வங்காளத்துக்கு நன்மை ஏற்படாது என்றும் ஹக் குறிப்பிட்டார். இதற்கு மாறாக, பாகிஸ்தானிலிருந்து கிழக்கு வங் காளத்தைப் பிரித்து ஒதுக்கிட வேண்டும் என்று பிரபல முஸ்லீம் லீகர்கள்தான் ஆர்ப்பாட்

## ஓட்டப் பந்தயம்!




கலாசாலைகள் திறந்து விட்டதால் மாணவர்கள் இடம் பிடிப்பதில் மும்முரமாக முனைந்திருக்கிறார்கள்.

# கொண்டாட்டம்தான்!



ஆடுகளுக்குக் கொண்டாட்டம்தான்! வன மகோத்சவ வாரத்தில் 10,000 செடிகள் நடுவதற்குச் சென்னை நகரசபை தீர்மானித்திருக்கிறது அல்லவா?

---

டம் செய்து வந்தார்கள்" என்று கான் அப்துல் கபார்கான் பாகிஸ்தான் பார்லிமெண்டில் குறிப்பிட்டார். கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் சர்க்கார் செய்தது போன்ற அக்கிரமம் ஜனநாயக உலக சரித்திரத்திலேயே நிகழ்ந்ததில்லை என்றும் கபார் கான் கண்டித்தார்.

முகமது அலி சர்க்கார் அமெரிக்க நிருபரின் பொய்க் கூற்றைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொண்டு விட்டார்கள். பெருவாரியான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஹக் மந்திரி சபையை வீழ்த்தி விட்டு, தங்கள் இஷ்டப்படி இராணுவ ஆட்சியை அமைத்துக் கொண்டு விட்டார்கள் என்ற உண்மையை மியான் இப்திகருதீன் அம்பலப் படுத்தினார்.

சர்க்காரை வன்மையாகக் கண்டித்த அங்கத்தினர்களின் நியாயமான வாதங்களுக்குச் சரியான பதில் கூற முடியாமல் திணறிய பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் முகமது அலி பழைய பல்லவியைப் பாடிச் சமாளிக்க முயன்றார். இன்னும் சில மாதங்கள் வரையில் கிழக்கு வங்காளத்தில் கவர்னர் ஆட்சியே நீடித்து வரும் என்று பாகிஸ்தான் பிரதமர் கூறியதிலிருந்து, அங்கு இன்னும் நெருக்கடி தீரவில்லை என்பது நன்கு தெரிகிறது அல்லவா! ஆம், பெரும்பான்மையோரின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, சிறுபான்மையோர் ஆட்சி புரியும் தலைகீழான ஆட்சி நடைபெறும் வரையில் கிழக்கு பாகிஸ்தானில் நெருக்கடி தீரும் என்று தோன்றவில்லை.

# உங்கள் ஊர்ப் பஞ்சாயத்து

கிராமப் பஞ்சாயத்துக்கள்தான் பாரத சுயராஜ்யத்தின் அடிப்படையாக இயங்க வேண்டும் என்று எல்லாரும் கூறுகிறார்கள். இந்த வாரத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் பஞ்சாயத்துச் சப் கமிட்டியார் "கிராமப் பஞ்சாயத்துக்களில் கட்சிகளும் கோஷ்டிகளும் ஏற்படக் கூடாது; அப்படி ஏற்படாமல் ஒருமுகமாகத் தேர்தல் நடந்திருக்கும் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும்" என்று தீர்மானித்திருக்கிறார்கள். தேர்தல் நடக்கும்போது ஒருமுகமாகத் தேர்தல் நடந்தாலும், பின்னால் கட்சிகளும் கோஷ்டிகளும் ஏற்படாமல் எப்படித் தடுக்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

கிராமப் பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் செயற்படும்படி செய்ய வேண்டுமானால், அதற்குரிய திட்டங்களையும் நன்றாக யோசித்து அநுபவ சாத்தியமான முறையில் அமைக்க வேண்டும்.

அப்படி அமைப்பதற்கு முன்னால், இப்போது பஞ்சாயத்துக்கள் எம்மாதிரி வேலை செய்கின்றன என்று தெரிந்து கொள்வது அவசியம்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை மாநகரில் மாகாணப் பஞ்சாயத்து மகாநாடு கூடிக் கலாட்டாவில் முடிவுற்றதைப் பற்றி நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

சென்னை மாநகரில் வந்து கூடியவர்கள் இவ்வளவு இலட்சணமாக நடந்து கொண்டிருப்பார்களானால், அந்தந்த ஊர்களில் கிராமப் பஞ்சாயத்துக்கள் எவ்வளவு இலட்சணமாக நடந்து வரும் என்பது பற்றிக் கவலை ஏற்படுவதற்கு இடம் உண்டாவது இயல்பு அல்லவா!

எனவே, நேர்முகமாகக் கிராமவாசிகளிடமிருந்தே கிராமப் பஞ்சாயத்துக்கள் இயங்கும் முறையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக

"உங்கள் ஊர்ப் பஞ்சாயத்து" என்ற கட்டுரைப் போட்டியை ஏற்படுத்தினோம்.

இந்தப் போட்டியில் பல கிராமவாசிகள் கலந்து கொண்டு கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள். அவற்றில் இரண்டு கட்டுரைகளை இந்த இதழி லேயே வெளியிட்டிருக்கிறோம்.

கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் ஒருவரே உற்சாகமாக எழுதி யிருக்கும் கட்டுரைக்கு முதல் இடம் தந்திருக்கிறோம்.

விஷயத்தின் முக்கியத்தை முன்னிட்டு இந்தப் போட்டிக்குக் கட்டுரை அனுப்ப வேண்டிய தேதியை ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி வரையில் தள்ளி வைத்திருக்கிறோம். அதாவது ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி வரையில் நமது காரியாலயத்துக்கு வரும் கட்டுரைகளில் வெளியிடத் தகுந்தவை யெல்லாம் வெளியிடப்படும்.

எல்லாக் கட்டுரைகளும் வெளியான பிறகு, பரிசுக் குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கப்படும்.

கட்டுரை எழுதி யிருப்பவர்களில் சிலர் தங்கள் ஊர்ப் பஞ்சாயத்து நிர்வாகத்தைப்பற்றிச் சிலாகித்து எழுதி யிருக்கிறார்கள்; பலர் குறை கூறியும் எழுதி யிருக்கிறார்கள்.

அந்தந்தக் கட்டுரைகளில் வெளியாகும் அபிப்பிராயங்கள் கட்டுரை எழுதியவர்களையே சாரும். அவற்றுக்கு இந்தப் பத்திரிகை ஆசிரியர் பொறுப்பாளியாக முடியாது.

யாரையும் மனம் நோகச்செய்வது நமது நோக்கமன்று என்பதை வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது நன்மைக்கு உகந்த முறையில் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை எப்படிச் சீர்திருத்தலாம் என்பதே இக் கட்டுரைப் போட்டி ஏற்படுத்தியதன் நோக்கமாகும்.

கட்டுரைகளில் காணப்படும் புகார்களுக்கு ஆதார பூர்வமாக மறுப்புக்கள் வந்தால், அவற்றையும் உசிதப்படி வெளியிடுவதற்குச் சித்தமாயிருக்கிறோம்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் அமுல் நடந்து நாடு முன்னேற வேண்டும் என்று விரும்பும் கிராமவாசிகள், — முக்கியமாகப் பஞ்சாயத்து அங்கத்தினர் அனைவரும், — நமது இந்த முயற்சியில் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

__அட்டைப் பட விளக்கம்__

# கடலின் மகிமை

ஆகா! நீலக் கடலே! உன்னைப் பற்றித்தான் யார் யார் எப்படி யெல்லாம் நினைக்கிறார்கள், தெரியுமா?

அதோ, கட்டுமரங்களைக் கரையில் சேர்க்கும் அந்தச் செம்படவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் தெரியுமா?

அவர்களுக்கு வகை வகையான கடல் மீன்களை வழங்கி, அவர்கள் வாழ்க்கை இனிதே நடத்த வசதி செய்து கொடுக்கத்தான் இருக்கிறாயாம். அதனால் அவர்கள் உன்னிடம் எவ்வளவு பக்தி வைத்திருக்கிறார்கள், தெரியுமா?

காற்றில் பட்டம் பறக்கிறதே, அதைப் பறக்க விடும் சிறுவன் அந்தப் புறம் இருக்கிறான்! அவனைக் கேட்டால் அவன் பட்டத்தைப் பறக்க விடுவதற்காகத்தான் கடல் குளிர் காற்றைப் பூமிக்கு அனுப்புவதாகக் கூறுகிறான்!

அதோ குழந்தைகளைத் தூக்கிச் சுற்றுகிறாரே, அவரையும் அந்தக் குழந்தைகளையும் கேட்டால் கடல் வழங்கியிருக்கும் மெத்தென்ற வெண் மணற் பரப்பே தாங்கள் ஓடி ஆடி விழுந்து புரண்டு விளையாடத்தானே என்கிறார்கள்!

அதோ கடலை நோக்கிய வண்ணம் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் அந்தத் தம்பதிகளைக் கேட்டால், அலை எழுப்பி ஓவென்று இடையறாது கடல் சத்தமிடுவதே தாங்கள் மனம் விட்டு வாய் விட்டுப் பேசுவதை அண்டை அயலில் இருப்பவர்கள் கேட்காமலிருக்கும் பொருட்டே யல்லவா என்று கூறுகிறார்கள்.

இதோ! அருகில், ஒருவரை யொருவர் விழுங்கி விடுபவர்கள் போல் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் இந்தப் புதுக் காதலர்களைப் பார்த்தீர்களா?

இவர்களைக் கேட்டால், 'கடலின் ஆழத்துடன் எங்கள் காதலின் ஆழத்தை ஒப்பிட்டுப் பார்த்தோம்! கடலைவிட எங்கள் உள்ளத்துக் காதல் அதிக ஆழமும் அகலமும் கொண்டது' என்றுதான் கூறுகிறார்கள்!

ஆனால் கவிஞர்களைக் கேட்டால் பின்வருமாறு சொல்கிறார்கள்.

மழைக்கு மூலமும் நீ கடலே—அதை
வாங்கி வைப்பதும் நீ கடலே!

வழுத்து மகிமையெலாம் கடலே—எவர்
மதித்து முடிக்கவல்லார் கடலே?

—கவிமணி

ஆம், கடலின் பெருமையைச் சொல்லி முடியாது! ஆயினும் நமது சித்திரக்காரர் சரவணன் இவ்வாற "கல்கி" அட்டைச் சித்திரத்தின் மூலம் கூற முயன்றிருக்கிறார்.

# காரசாரமான கடிதம்

கொழும்பு, ஜூன் மீ 23வ.

இந்திய அரசாங்கம் அதனுடைய சரித்திரத்திலேயே முதல் தடவையாக காரசாரமான கடிதமொன்றை இவ்வாரம் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இலங்கை இந்தியர் பிரச்னையில் இவ்வளவு காலமும் 'வழ வழா' என்று பேசியும் எழுதியும் வந்த டில்லி அரசாங்கத்தின் கடிதம் இலங்கை அதிகார வட்டாரங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதோடு மட்டுமல்லாமல், இந்திய வட்டாரங்களையும் ஆச்சரியக் கடலில் மூழ்கடித்திருக்கிறது.

இலங்கையின் சமீப கால நடவடிக்கைகள் டில்லி ஒப்பந்தத்துக்கு முரண்பட்டதாயிருப்பதையும், அதைக் கண்டு இந்தியா மிகுந்த மன வேதனையடைந்திருப்பதையும் சுட்டிக் காட்டி விட்டு, "யார் என்ன சொன்னாலும் நாடற்றவர்களாக்கப்படும் இந்திய வம்சாவளியினர் முற்றிலும் இலங்கையின் பொறுப்புதான். அவர்களுடைய பிழைப்பில் மண்ணடித்துப் பட்டினி போட இலங்கை முயற்சித்தால் அதன் பாரதூரமான விளைவுகளுக்கும் இலங்கையே ஜவாப்தாரி!" என்பதை இந்திய அரசாங்கம் இலங்கைக்கு எச்சரித்திருக்கிறது. இலங்கையின் கொடுமை தாங்காமல் நாடற்றவர்களும் இந்தியப் பிரஜைகளல்லாத மற்றவர்களும் சட்ட விரோதமாக இந்தியாவுக்கு வர முயற்சிக்கலாம். தென்னிந்தியர்கள் சட்ட விரோதமாக இலங்கையில் குடியேறுவதைத் தடுக்க இந்திய அரசாங்கம் எவ்விதம் உதவி புரிந்ததோ அதே போல இலங்கையிலிருந்து நாடற்றவர்களும் இந்தியப் பிரஜைகள் அல்லாதவர்களும் சட்ட விரோதமாக இந்தியாவுக்கு வராதபடி தடை செய்ய இலங்கை அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தி யுள்ளது. இலங்கையில் சட்ட விரோதமாகப் பலரும் குடியேறுவதாய்ப் புகார் செய்தது போக, இந்தியாவில் சட்ட விரோதமாகப் பலர் குடியேறக் கூடும் என்று புகார் செய்யும் அளவுக்கு நிலைமை மாறி யிருக்கிறது.

வாச பர்மிட்டுடன் இந்தியப் பிரஜைகளாக இலங்கையிலிருப்பவர்கள் விஷயத்தில் இலங்கை அரசாங்கம் தர்மநியாயத்துடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும்பதிவுப் பிரஜைகளுக்குக்குறைந்த பட்சம் ஆறு ஸ்தானங்களாவது பார்லிமெண்டில் அளிக்க வேண்டுமென்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட மட்டில் பதிவுப் பிரஜைகளுக்கும் வம்சாவளிப் பிரஜைகளுக்கு மிடையில் பித்திரபேதம் செய்யக் கூடாதென்றும் இந்தியா தெரிவித்துக் கொண்டுள்ளது. கடைசியாக இலங்கை அரசாங்கம் தர்மத்துக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டுமென்று இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தக் கடிதம் இலங்கை அதிகாரிகளுக்கு எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும் என்பதற்குச் சர்க்கார் கட்சியைப் பெரும்பாலும் ஆதரிக்கும் பத்திரிகைகள் உளறிக் கொட்டி யிருப்பது ஒரு சான்று. நாடற்றவர்களிடம் எங்களுக்கு அக்கறையில்லை யென்று சொல்லும் இந்திய அரசாங்கம் பதிவுப் பிரஜைகளின் பார்லிமெண்டு பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசுவானேன்! இது இலங்கையின் உள் நாட்டு விவகாரங்களில் அநாவசியமாகத் தலையிடுவதில்லையா! இந்தியாவின் இவ்விதத் தலையீடுகள்தான் டில்லி ஒப்பந்தத்தை மீறிய செயலாகும் என்று டெய்லி நியூஸ் பத்திரிகை எழுதி யிருக்கிறது.

இதற்கு இ. ஜ. கா. கூட்டுப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ நாயர் பதில் கொடுத்திருக்கிறார். இலங்கை இந்தியர் பிரச்னை உள் நாட்டுப் பிரச்னையென்று நாங்கள் எப்பொழுதுமே சொல்லி வந்திருக்கிறோம். பிரச்னையை டில்லிக்குக் கொண்டு போனது இலங்கை சர்க்காரே தவிர வேறு யாருமில்லை. இந்தியாவின் தலையீட்டை இலங்கை அரசாங்கமே வலுவில் விரும்பித் தருவித்துக்கொண்டது. இரண்டாவதாக, டில்லி ஒப்பந்தத்தில் பதிவுப் பிரஜைகளுக்கு பார்லிமெண்ட் பிரதிநிதித்துவமளிக்கும் விஷயம் இரு அரசாங்கங்களினாலும் கலந்து பேசப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அனுசரித்து இலங்கை அரசாங்கம் தான் பார்லிமெண்டரி பிரதிநிதித்துவ மசோதாவை இந்தியாவின் அபிப்பிராயத்தை அறிய அனுப்பி வைத்தது. இலங்கை கேட்டபடி இந்திய அரசாங்கம் அபிப்பிராயம் சொல்லியது தவறாகுமா! இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் இது தலையிடுவதாகுமானால் இந்தியாவின் அபிப்பிராயத்தை இலங்கை அரசாங்கம் கேட்பானேன்! இந்திய அரசாங்கத்தைக் கலந்து கொள்ளுவதாக ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு அதில் ஸர் ஜான் கொத்தலாவலை ஒப்பம் வைப்பானேன்! ஒப்பந்தத்தை இலங்கை ஒரு பெரிய கேலிக் கூத்தாக மதிக்கிறதா! இலங்கையின் ஒரு பிரதான தினசரி ஆங்கிலப் பத்திரிகை இவ்விதம் விவரம் புரியாமல் உளறுவது வெட்கக் கேடு!

இவ்வாறு ஸ்ரீ நாயர் சொல்லி யிருக்கிறார்.

நிற்க, அடுத்த மாதம் 10-ம் தேதிக்கு மேல் இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத் தலைவர் ஸ்ரீ கே. ஜி. ராவின் அழைப்பின்பேரில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ சட்டநாத கரையாளர் தலைமையில் ஒரு தூது கோஷ்டி இலங்கைக்கு விஜயம் செய்கிறது. இந்தத் தூதுகோஷ்டியினர் இலங்கை இந்தியர் நிலைமையை நேரில் ஆராய்ந்து தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதை அனுசரித்து த. கா. கமிட்டி காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ நேருவுக்கு ஒரு அறிக்கை யனுப்பும்.

இங்குள்ள இந்திய ஹைகமிஷனில் முதல் காரியதரிசி பதவியை வகிக்க இந்திய வெளிநாட்டிலாகாவைச் சேர்ந்தவரும் மைசூர் ராஜப்பிரமுகரின் சகோதரி கணவருமான ஸ்ரீ பிரத்யும்ன சிங் என்ற ஒரு மகாராஷ்டிரர் இவ்வாரம் வந்திருக்கிறார். இவருக்குத் தமிழ் அறவே தெரியாதாம். ஹைகமிஷனர் ஸ்ரீ தேசாய்க்கும் தமிழ் தெரியாது. இலங்கை இந்தியர்களில் 100க்கு 99 பேர்கள் தமிழர்களா யிருக்கும்பொழுது தமிழ் தெரியாதவர்களை ஹைகமிஷனில் உயர்பதவிகளிலே இந்திய அரசாங்கம் கண்மூடித்தனமாக நியமித்து அனுப்புவது பலருக்கும் மிகுந்த மனக்கசப்பை விளைவித்திருக்கிறது. முதல் காரியதரிசி பதவியை வகிக்கக் கூடிய தமிழர் யாருமே யில்லையா! என்று காங்கிரஸ் வட்டாரங்களே கேட்கின்றன. —ரஜனி



மிகச்சிறந்த
பொழுது போக்குப் படம்
பெண்
M.V.ராமன்
இப்பொழுது சென்னை
வெலிங்டன் • ஸ்ரீ கிருஷ்ணா
ராஜகுமாரி • உமா • லக்ஷ்மி
மற்றும் தமிழ்நாடெங்கும்
40 தியேட்டர்களில்.
AVM
புரொடக்ஷன்ஸ்

# எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து

நம் நாட்டில் இப்பொழுது ஏராளமான பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதனிடம் விரிவான அதிகாரங்களைக் கொடுத்து நல்ல முறையில் அதை நடத்த முடியும். அப்படி நடப்பதற்குப் பஞ்சாயத்தையும் அதைச் சேர்ந்த மக்களையும் தகுந்த முறையில் ஊக்குவிக்க சர்க்கார் தான் பாடுபட வேண்டும். தகுந்த முறைகளை அவர்களுக்கு எடுத்துக்கூறத் தக்க அதிகாரிகளை நியமித்து அவர்கள் கடமையை நன்றாக உணரச் செய்ய வேண்டும்.

தற்பொழுது நம் சர்க்காரில் வட்ட திட்ட இலாகா என்று ஒன்றைத் தோற்றுவித்து இருக்கின்றனர். அது சுவரை வைத்துக் கொண்டு சித்திரம் எழுதுவதாயில்லை. சுவரைப் பற்றி எண்ணாமல் சித்திரம் எழுத வர்ணங்களைத் தயார் செய்துகொண்டு ஏதாவது ஒரு பாழடைந்த சுவராய் இருந்தாலும் எழுதிவிட்டு வரவேண்டியது என்ற நிலையில் காரியங்களை நடத்துகின்றன.

பஞ்சாயத்து என்கிற சுவரில்தான் தேசிய திட்டங்களாகிய ஓவியங்களை வரையலாம். பஞ்சாயத்துச் சுவர் சரியாகப் பண்படுத்தாமல் இருக்கும்பொழுது திட்ட வர்ணங்களைத் தீட்டுவதற்கு வேண்டிய ஆயுதங்களை மிகவும் விலை உயர்ந்த ரகத்தில் வாங்கி வைக்கப்பட்டு அதற்குப் பராமரிப்புச் செலவு என்று அந்த ஆயுதங்கள் மெருகு கெடாமல் இருக்கப் பார்த்துக் கொள்வதற்காக அநேக ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்வதுபோல்தான் இருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் திட்டத்தை நிறைவேற்ற ஆயுதங்களாகிய அதிகாரிகள் எப்படி நியமிக்கப்பட்டு இருக்கின்றனர், அதேபோல் சுவராகிய பஞ்சாயத்தைச் சீர்திருத்த எந்த முறையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைக் கவனிப்போம்:

சுவர் சீர்திருத்த வேண்டியவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். சுமார் 150 கிராமங்கள் வரையில் அதிலுள்ள பஞ்சாயத்துக்களை நிர்வகிக்க ஒரு உதவி பஞ்சாயத்து அதிகாரி என்ற முறையில் ஒருவர் இருக்கிறார். அவர் சாதாரண என். ஜி. ஓ. அவருக்கு மேல் அநேக தாலூக்காக்களில் உள்ள பல நூற்றுக்கணக்கான பஞ்சாயத்துக்களை நிர்வகிக்க உதவி ஜில்லா பஞ்சாயத்து அதிகாரி என்பவரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களும் என். ஜி. ஓ. என்ற முறையில்தான் சர்க்காரில் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மேல் சுமார் ஏழு ஜில்லாக்களிலுள்ள பல ஆயிரக்கணக்கான பஞ்சாயத்துக்களை நிர்வகிக்க 'ரீஜினல் இன்ஸ்பெக்டர்' என்று ஒருவரை நியமித்திருக்கிறார்கள். அவர் ஒரு கெஜட் பதிவுள்ள அதிகாரியாவார்.

அவர்தான் ஆயிரக்கணக்கான கிராமப் பஞ்சாயத்தாகிய சுவர்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். அடுத்தபடியாக வர்ணத்தைத் தீட்டக் கூடிய ஆயுதங்களாகிய திட்ட அதிகாரிகளைப் பற்றிச் சற்று கவனிப்போம்.

சாதாரணமாக ஒரு உதவி பஞ்சாயத்து அதிகாரி நிர்வகிக்கக் கூடிய ஒரு எல்லையில் பாதிதான் இருக்கும் தற்பொழுதுள்ள வட்டம் என்பது. அதை நிர்வகிக்க ஏழு ஜில்லாக்களில் உள்ள பஞ்சாயத்துக்களை நிர்வகிக்கும் 'ரீஜினல் இன்ஸ்பெக்டர்' ஒரு கெஜட் பதிவுள்ள அதிகாரியோ, அது போன்ற அந்தஸ்துடைய ஒரு அதிகாரியோ ஒரு வட்டத்தை நிர்வகிக்கிறார்.

அதிலிருந்து சர்க்கார் நியமித்திருக்கும் திட்ட அதிகாரிகள் அதிக விலையில் வாங்கப்பட்ட கருவிகள் என்பதுடன் சீர்திருத்தப்படாத சுவரில் பயனற்ற ஓவியங்களாகிய திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள் என்றுதான் நினைக்க வேண்டி இருக்கிறது.

ஜனங்கள் கோரும் திட்டங்களுக்குப் பணம் இல்லை. அவரவர் உழைப்பால் அவரவர்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்று நம் சர்க்காரில் கூறிக்கொண்டு இதுபோன்ற அதிக ஊதியம் உள்ளவர்களைக் கொண்டு ஆடம்பரமான முறையில் திட்டங்களைப் பரப்ப வேண்டுமென்பதில்லை.

எங்கள் வட்ட திட்ட அபிவிருத்தி அலுவலகத்தைப் பற்றியும் அதற்கும் பஞ்சாயத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியும் இரண்டு உதாரணங்களைக் கூறுகிறேன்.

மக்களின் ஊக்கத்தினாலும், உழைப்பினாலும் பணத்தினாலும் அவரவர்களுடைய கிராமத்துக்கு வேண்டியதைச் செய்து கொள்ள முன் வர வேண்டும். அப்படிச் செய்ய முன் வருபவர்களுக்கு அதற்காக சர்க்காரில் ஒரு பகுதி பணத்தை மானியமாக அளிப்பது என்பதுதான் அந்தத் திட்டத்தின் முதல் நோக்கம். அந்த முறையில் ஜனங்களை ஊக்குவிப்பதற்காகத்தான் அந்த இலாகா நிறுவப்பட்டு வேலை செய்து வருகிறது.

எங்கள் வட்டத்தில் மேலே கண்ட திட்டப்படி தற்போது உள்ள அதிகாரிகளுக்குச் சம்பளமாகச் செலவழிவது மட்டும் திட்டத்தின் முழுத் தொகையிலும் தொண்ணூறு சத விகிதம் இருக்கும்.

அந்தத் திட்ட முறையில் சில மாறுதல்கள் செய்து அதிக பணம் ஜனங்கள் நன்மைக்காகச் செலவழிக்க வேண்டும் என்றால் அந்த முறையில் சில சீர்திருத்தம் செய்யலாம்.

1. கட்டுரையின் முற்பகுதியில் கூறியபடி பஞ்சாயத்துக்களை முதலில் சிறந்த முறையில் சீர்திருத்தம் செய்ய நல்ல அந்தஸ்தில் (ஜில்லாவுக்கு ஒரு கெஜட் பதவி உள்ளவர்) உள்ளவர்களை நியமிக்கலாம்.

2. திட்ட வேலைகளை நிறைவேற்ற ஜில்லா கலெக்டருக்குக் கீழ் தற்போதுள்ள அதிகாரிகளை நியமிக்க வேண்டியதில்லை. தற்பொழுதுள்ள ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் மேற்பார்வையில் அவைகளைச் செய்ய ஏற்பாடு செய்யலாம். சில ஜில்லாக்களில் சீ.டி. நிர்வாகம் பிரிக்கப்பட்ட இடங்களில் அவர்கள் சுலபமான முறையில் திட்டத்தை நடத்தலாம். அப்படி இல்லாத இடத்திலும் யுத்த காலத்தில் உணவு கொள்முதல் முதலிய காரியங்களைக் கவனித்து வந்ததை விட இத் திட்டத்துக்காகப் பாடுபட யாரும் தயங்க மாட்டார்கள். அவருடைய மேற்பார்வையில் தற்போதுள்ள கீழ் அதிகாரிகளைக் கொண்டு இத்திட்டங்களுக்குத் தனி சம்பளம் கொடுக்காமல் அதற்கான பிரயாணப் படிகளை மட்டும் கொடுத்து நடத்தலாம்.

இனி பஞ்சாயத்துக்கள்தான் நல்ல திட்டமான வேலையை ஊக்கமாக நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று ஏற்படக் கூடிய காலத்தில்

அவர்கள் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் உடனே ஆதரவுகள் கிடைத்தால்தான் முடிக்க முடியும்.

எங்கள் பஞ்சாயத்துடன் திட்ட இலாகா தற்போது எப்படிக் காரியங்களைச் செய்து வருகிறது என்பதைக் கேளுங்கள் :

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து 1951-ல் நிறுவப்பட்டது. எங்களூர் சுமார் 1,500 ஜனங்கள் உள்ள கிராமம். பஞ்சாயத்து ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து என்னை ஊர் ஜனங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். என்னுடன் இன்னும் ஆறு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் கிராம முன்னேற்ற விஷயத்தில் மிகுந்த கவனம் உடையவர்களாகவே இருக்கிறார்கள். அப்படியுள்ள இடத்தில் மேலே கூறப்பட்ட வட்டதிட்ட இலாகா அதிகாரிகள் நடந்து கொள்ளும் முறையைப் பாருங்கள்.

நாங்கள் எங்கள் கிராம நன்மைகளை மேன்மேலும் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1951-ம் ஆண்டு அப்போதிருந்த மேற்படி அபிவிருத்தி திட்ட அதிகாரிகளை நாடினோம். எங்கள் கிராமத்திலிருந்து கிழக்கு முகமாகச் சென்று முசிறி, துறையூர் சாலையை அடையச் சுமார் மூன்று மைல் தூரம் இருக்கிறது. அப்படிச் செல்லுவதற்கு ஆட்கள் கூட நடந்து செல்ல முடியாதபடி சாலை இருக்கிறது. அவைகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக சர்க்காரில் கொஞ்சம் பணம் கொடுத்தால் நாங்கள் ஆட்கள் பலத்தைக் கொண்டு ஒரு பகுதி வேலையாகச் செய்து மேற்படி சாலையைப் போட்டுக் கொள்ளுகிறோம் என்று எடுத்துரைத்தோம்.

அதன் பேரில் மேற்படி அதிகாரிகள் முசிறி, துறையூர் சாலையைப் பார்வையிட்டு அதற்குச் சுமார் இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டார்கள். கிராமத்தில் மூன்றில் ஒரு பாகத்தை வேலை மூலமாகச் செய்து முடித்துக் கொள்வதென்றால் மீதி மூன்றில் இரண்டு பாகத்தைச் சர்க்காரிலிருந்து கொடுக்கும் பணத்தைக் கொண்டு செய்து முடித்துக் கொள்ளலாம். ஆனால் பூரா தொகையையும் முதலில் கிராமத்தார்களாகப் போட்டு வேலையை முடித்த பிறகுதான் சர்க்காரிலிருந்து மூன்றில் இரண்டு பாக வேலைக்குரிய பணத்தைக் கொடுப்போம் என்று கூறினார்கள். அதன் பேரில் நாங்கள் எங்கள் கிராம ஆட்கள், பணம் முதலியவைகளைக் கொண்டு மேற்படி வேலையைச் செய்து வந்தோம். அவ்வப்பொழுது மேற்படி வேலையைச் செய்த விவரங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, செய்த வேலைகளை அளந்து கொள்ளும்படி செய்து, செய்த வரையிலும் உள்ள வேலைக்கு ஏற்பட்ட தொகைகளைப் பாகமாகிய மூன்றில் இரண்டு பங்கைப் பெற்று வந்தோம். அப்படி செய்து வந்ததில், சர்க்காரால் திட்டமிடப்பட்ட ரூ. 2800-விட அதிகமாகச் செலவாகும் என்பதை மேற்படி வேலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், நாங்களும் உணர்ந்தோம். அது சம்பந்தமான அதிகாரிகள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட தொகையை விட அதிகமானாலும் அப்படி அதிகமாகும் தொகையில் மூன்றில் இரண்டு பாகத்தைத்தான் சர்க்காரிலிருந்து கொடுப்போம் என்று தெரிவித்தார்கள். அதற்கும் சம்மதித்து நாங்கள் மேற்படி சாலை பூராவையும் 1952 நவம்பர் மாதத்தில் போட்டு முடித்தோம். உடனே அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேலையை முடித்த விஷயத்தைத் தெரியப்படுத்தினோம். அவர்கள் வந்து ரஸ்தாவைப் பார்வையிட்டு அவைகளை அளந்து கொண்டு "முதலில் சர்க்காரால் திட்டமிட்டப்படி ரூ 2,800-ல் மூன்றில் இரண்டு பாகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். மேற்கொண்ட தொகைக்குச் செய்துள்ள வேலைக்கு மேலாவின் அங்கீகாரம் பெற்று அதற்குள்ள பாகத்தைப் பிறகு கொடுக்கிறோம்" என்றார்கள். அதன்படி நாங்கள் 1952 நவம்பர் மாதத்துக்கு முன் முதலில் குறிப்பிட்டதில் மூன்றில் இரண்டு பாக வேலைக்குரிய பணத்தைப் பெற்றுக் கொண்டோம்.

1952 நவம்பரில் வேலையை முடித்து விட்டுச் சில நாட்களில் மேலாவின் அங்கீகாரத்தின் பேரில் மீதியுள்ள பணம் கிடைக்குமென்று எதிர்பார்த்தோம். சுமார் ஒரு வருடம் வரை பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரிலும் தபால் மூலமாகவும் எங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கேட்டுப் பார்த்தோம். ஒவ்வொரு தடவையும் மேலாவின் அங்கீகாரம் கிடைத்தவுடன் பணம் கிடைக்கும் என்று கூறி வந்தார்கள். அதை நம்பிக் கொண்டே இருந்தோம்.

1952 நவம்பரில் வேலையைப் பூராவும் செய்து முடிக்கப்பட்டும் 1954 மார்ச்சு வரையில் பணம் கிடைக்கவில்லை. திட்ட சம்பந்தமான அதிகாரியை நேரில் சந்தித்துப் பணம் கிடைக்காததின் காரணத்தை நேரில் அறிந்து வர அவரது அலுவலகத்துக்குச் சென்றேன்.

நான் யார் என்பதை நானாக அறிமுகம் செய்து வைத்துக் கொள்ளுமுன், அந்த அலுவலகத்திலிருந்த ஏனைய குமாஸ்தாக்கள் போன்றவர்கள், என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

பிறகு நானே அவரிடம் எங்களூரில் திட்ட சம்பந்தமான வேலைகளில் எப்படி ஊக்கமாக வேலை செய்து வருகிறோம் என்பதை அவரிடம் எடுத்துக் கூறிக் கொண்டும், மேற்படி திட்டத்தின் கீழ் நாங்கள் செய்த வேலைக்குச் சுமார் ஒன்றரை வருடமாகியும் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யவில்லை என்ற விஷயங்களைப் பற்றியும் சுமார் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

அதுவரையிலும் என்னை உட்கார்ந்து பேசும்படியோ அல்லது உட்காருவதற்கு வேண்டிய ஏதாவதொரு ஆசனம் கொண்டு வந்து போடும்படியான ஏற்பாடோ செய்யாமலே சர்க்காரில் பணம் எப்படி வாங்குவது என்ற முறை எங்களுக்குத் தெரியவில்லை என்று ஏளனமான முறையில் அதிகாரி பேசிக்கொண்டிருந்தார்.

கடைசியாக இன்னும் சில நாட்கள் கழித்து வந்தால் பார்க்கலாம் என்றார் அந்த அதிகாரி.

நான் மேற்படி அதிகாரியைப் பற்றிப் பிறகு விசாரித்ததில் அவர் கெஜட். பதிவுள்ள உயர்ந்த அதிகாரியாதலால் கிராமத்திலிருந்து வரும் சாதாரண ஆட்களுக்கு நாற்காலி போடக் கூடாது, நின்று கொண்டேதான் அவர்கள் இருக்க வேண்டும் என்பதாக உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். நம் நாட்டின் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மன நிலையை எண்ணிக் கண்ணீர் விட்டேன். அவரிடம் முறையிட்டதிலும் பயன் இல்லை.

செய்த வேலைக்கு ஒன்றரை வருடமாகியும் பணம் கிடைக்கவில்லை என்ற வருத்தத்துடன் எங்கள் ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு மேற்படி பண விஷயமாக 5—3—54-ல் ஒரு 'லாயர் நோட்டீஸ்' கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அந்த நோட்டீசுக்கு ஜில்லா கலெக்டர் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு பதில் வந்தது.

அதில் மேற்கொண்டு செய்த வேலைக்குப் பணம் கொடுக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஆனால் அது சம்பந்தப்பட்ட வட்ட திட்ட அதிகாரி அவர்கள் சொல்லுகிறபடி மேற்படி சாலை மழையினால் அறுக்கப்பட்டிருப்பதால், அதைச் சம்பந்தப்பட்ட இன்ஜினியர்கள் பார்த்தால் பணம் கொடுக்க அங்கீகரிக்க மாட்டார்கள்; அவைகளை வட்ட அதிகாரி கூறுவது போல் சரிசெய்ய வேண்டும்; அப்பொழுதுதான் மேற்படி வேலை செய்ததற்குப் பணம் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகக் கூறியிருந்தார்கள்.

நாங்கள் 1952 நவம்பரில் வேலையைச் செய்து முடித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அளவுகளை அளந்து கொள்ளும்படி செய்திருக்கிறோம். அப்படி யிருந்தும் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு கனத்த மழையினால் ஏற்பட்டிருக்கும் அநேக சிதைவுகளைச் சரி செய்வது என்றால் எங்களால் திரும்பவும் செய்ததையே செய்ய இயலாது. ஏற்கெனவே செய்ததற்குப் பணம் கொடுத்துவிட்டால் மேற் கொண்ட சிதைவுகளைச் செய்து முடித்து, அதற்கு ஏற்பட்ட தொகையைப் பெற்றுக் கொள்வதாக அறிவித்து கலெக்டருக்குத் தகவல் கொடுத்தோம். அதன் பிறகு கலெக்டர் அவர்களிடமிருந்து 10—6—54-ல் பதில் வந்தது. அதில் பழைய பல்லவியே இருந்தது.

திரும்பவும் அது சம்பந்தமாக எழுதினோம். இன்னும் பதில் வரவில்லை.

இப்பொழுது வேலை செய்து ஒன்றே முக்கால் வருடம் ஆகப் போகிறது. இன்னும் எவ்வளவு காள் கழித்து, செய்த வேலைக்குப் பணம் கிடைக்குமென்பது தெரியவில்லை.

இதுபோன்ற தாமதம் கிராம மக்களை எப்படித் திட்ட வேலையில் ஈடுபடச் செய்யும்!

அடுத்தபடியாக, கிராமப் பஞ்சாயத்துக்களைப் பயன்படுத்திக் கொண்டு மேற்படி வட்டதிட்ட அதிகாரிகள் எப்படிப் பொதுப் பணத்தை விரயமாக்குகிறார்கள் என்பதையும் கவனியுங்கள்.

மேற்படி வட்டதிட்ட அதிகாரிக்குக் கீழ் சில கிராமங்களுக்கு ஒரு கிராம சேவக் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படி எங்கள் கிராமத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் 20-3-54ல் எங்கள் கிராமத்துக்கு வந்தார். "சர்க்கார் எங்கள் இலாகா மூலம் சில காரியங்களுக்கு மானியமாகப் பணம் கொடுக்கிறார்கள். கிராமத்தார்களோ பஞ்சாயத்தோ ஒரு பாகத்தை ஏற்று, உங்கள் ஊரிலுள்ள வாசகசாலைக்குப் புஸ்தகங்கள், மேற்படி வாசகசாலையில் உட்காருவதற்கு வேண்டிய மரச் சாமான்கள், மற்றும் விளையாட்டுச் சாமான்கள் முதலியன வாங்கிக் கொள்ளலாம். அதற்காக ரூ. 130 பஞ்சாயத்திலிருந்து செலவு செய்ய ஏற்பாடு செய்தால், சர்க்காரில் கொடுக்கும் ரூ. 190 மானியமாகப் பெற்று ஆக ரூ. 320-க்கு மேலே கூறப்பட்ட சாமான்களை வாங்கிப் பயனடையலாம்" என்று எடுத்துரைத்தார்.


அதன் பிறகு 25-3-54ல் எங்கள் பஞ்சாயத்து நிதியிலிருந்து ரூ. 130ஐ எடுத்து மேலே கூறிய சர்க்கார் மானியத்தையும் பெற்றுச் சாமான்களை வாங்கிக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று எங்கள் வட்டதிட்ட அதிகாரி அவர்களுக்கு ஒரு தபால் எழுதினோம். அத்துடன் நாங்கள் பஞ்சாயத்து நிதியிலிருந்து ரூ. 130 செலவு செய்ய உறுதியாக இருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சியாக ரூ 130ஐ எங்கள் தாலுகா சர்க்கார் கஜானாவில் மேற்படி திட்ட அதிகாரி அவர்கள் கணக்கில் கட்டி, அதற்கான ரசீதையும் மேற்படி தபாலுடன் வட்ட திட்ட அதிகாரி அவர்கள் அலுவலகத்தில் எங்கள் பஞ்சாயத்துக் குமாஸ்தா மூலமாக நேரில் சேர்ப்பித்தோம். அதைப் பெற்றுக் கொண்டதற்கு ரசீதும் வாங்கி வைத்திருக்கிறோம்.

மேற்படி தபால் நகல் ஒன்றை அதே தேதியில் திருச்சி ஜில்லா கலெக்டர் அவர்கள் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

பிறகு சில நாட்கள் கழித்து மேற்படி திட்ட வட்ட இலாகா அதிகாரி அவர்களிடமிருந்து 12-4-54ல் எங்களுக்கு ஒரு ரிஜிஸ்டர் கடிதம் வந்தது. எங்கள் ஊருக்கு வேண்டிய சாமான்களை, அவருடைய அலுவலகத்தில் வாங்கி வைத்திருப்பதாகவும், நாங்கள் மூசிறி கஜானாவில் கட்டிய பணத்தைத் திரும்ப வாங்கிக் கொண்டு போய் மேற்படி அதிகாரி அவர்களிடம் கொடுத்துவிட்டு, சாமான்களை நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்; இல்லையேல் எங்களுக்காக அவர் வாங்கி வைத்திருக்கும் சாமான்களை வேறு கிராமத்துக்குக் கொடுத்து விடப்படும் என்றும், மேற்படி முறையில் தான் மற்ற பஞ்சாயத்துக்களும் சாமான்களை எடுத்துச் சென்றிருக்கின்றன என்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

உடனே நாங்கள் அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பஞ்சாயத்துக்களுக்கு மேற்படி திட்ட இலாகா அதிகாரி வாங்கி விநியோகம் செய்திருக்கும் சாமான்களைப் பார்த்தோம்.

மேற்படி சாமான்களை திட்ட அதிகாரி அவர்கள் வாங்கிக் கொடுத்த விலையைவிட கால் பாகம்





வேலூர் தேவஸ்தான இறை பணி மன்றத்தின் ஆதரவில் சேக்கிழார் விழா ஜூன்மீ 25உ சென்னை தியாகராய நகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சேக்கிழாரைப் பற்றித் திரு கிருபானந்த வாரியார் அவர்கள் மிக இனிமையாகக் கடல் மடை திறந்தாற்போல் சொற்பொழிவு நிகழ்த்திச் சபையோரை மகிழ்வித்தார். ஸ்ரீ ராஜாஜி அவர்கள் இந்த விழாவுக்கு விஜயம் செய்து சிறப்பித்தார்.

---

குறைத்தே வாங்கி யிருக்கலாம் என்பதை உணர்ந்ததுடன், சில இடங்களுக்கு ஏற்கெனவே அவ்விடத்திலுள்ள சாமான்களைத் திரும்பவும் அதிக விலையில் வாங்கிக் கொடுக்கப்பட்டு அதனால் அவ்விடத்துக்குப் பிரயோஜனமற்ற முறையில் இருக்கின்றன என்பதையும் அறிந்தோம்.

மேற்படி சாமான்களை வாங்கிக் கொண்டு வந்த சில பஞ்சாயத்துத் தலைவர்கள் நாங்கள் கோரிய படி பணமாகச் சர்க்காரில் கொடுத்திருந்தால் அவரவர்களுக்குத் தேவையான சாமான்களையும் அவரவர் கிராமத்துக்கு வேண்டியபடி வாங்கிக் கொள்வோம் என்பதாக மேற்படி திட்ட அதிகாரி அவர்களிடம் கோரினார்களாம். அதற்கு அந்த அதிகாரி அவர்கள் "நீங்கள் உங்கள் கிராமத்திலிருந்து கொடுக்கும் பணத்துக்குப் பெறுமானமுள்ள சாமான்கள் இருக்கின்றனவா இல்லையா என்பதைப் பார்த்துக் கொண்டு போங்கள். நான் கொடுக்கும் சாமான் வேண்டா விட்டால் வேறு ஊருக்கு மாற்றிக் கொடுத்து விடுவேன்" என்று அவர்களிடம் கட்டாயப் படுத்தியபின் பேரில் அவர்கள் வேண்டா விருப்புடன்தான் எடுத்து வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டோம்.

மேற்படி சம்பவத்திலிருந்து சர்க்கார் பணத்திலும் பஞ்சாயத்து நிதியிலும் இருந்து, திட்ட அதிகாரியால் வாங்கப்பட்ட சாமான்களில் சில சுரண்டல் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை உணரவேண்டி யிருந்தது.

எங்களுக்கு மேற்படி அதிகாரி அவர்களிடமிருந்து 12-4-54 தேதி அன்று கடிதம் கிடைத்த பிறகு, வேலியே பயிரை மேய்வதுபோன்ற காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை, மேற்படி திட்ட சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்று கருதினோம். அந்த நோக்கத்துடன் 15-4-54 தேதி மதுரையிலுள்ள கிராம நல இலாகா உதவி டைரக்டர் அவர்களுக்கு எங்கள் வட்ட அதிகாரி கையாளும் முறையைப் பற்றி ஒரு கடிதம் எழுதினோம்.

அப்படி அவருக்குக் கடிதம் எழுதி யிருப்பதாகவும் அதற்குப் பதில் அவரிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கும் வரையிலும் எங்கள் வட்ட திட்ட அதிகாரி அவர்கள், கடிதத்தில் கண்டபடி எங்களுக்காக வாங்கி வைத்திருப்பதாகக் கூறும் சாமான்களை வேறு ஊருக்குக் கொடுக்கக் கூடாது என்று ஒரு தபாலும் எழுதினோம்.

பிறகு அநேக நாட்கள் மதுரையிலிருந்து எங்களுக்குப் பதில் வரவில்லை என்ற காரணத்தால் 10-5-54 தேதி சென்னையிலுள்ள கிராம நல இலாகா டைரக்டர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினோம். அதில் எங்கள் பக்கம் விஜயம் செய்து, சில கிராமங்களில் திட்ட இலாகா அதிகாரிகள் செய்யும் முறை கேடானது என்று தோன்றும் விஷயங்களை நேரில் விசாரிக்க வேண்டும் என்றும் கோரி யிருந்தோம்.

அதற்கும் யாதொரு பதிலும் வரவில்லை. திரும்பவும் அவருக்கு 7-6-54 தேதி எழுதினோம். அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

நாங்கள் மதுரை உதவி டைரக்டர் அவர்களுக்கு எழுதி யிருந்த கடிதத்துக்கு 16-6-54 தேதியிட்ட பதில் கடிதம் ஒன்று வந்தது. அதில் அவர் கூறி யிருந்ததாவது:

நாங்கள் அவருக்கு எழுதிய கடிதத்தை எங்கள் வட்ட திட்ட அதிகாரிக்கு (நாங்கள் யார் பேரில் குறை கூறினோமோ அவருக்கே) அனுப்பி விசாரித்தாராம். வட்டதிட்ட அதிகாரிகளுடன் நாங்கள் ஒத்துழைக்க வில்லை; அதன் பேரில் அவர் எங்கள் கிராமத்துக்குக் கிடைக்க வேண்டிய மானியப் பணத்தைக் கொண்டு வாங்கிய சாமான்களை வேறு ஊருக்குக் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது; திட்ட இலாகாக்களில் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுடன் கிராமப் பஞ்சாயத்து நடத்துபவர்கள் நேரில் கலந்து திட்டங்களை நிறைவேற்றப் பாடுபட வேண்டும்; திட்ட இலாகா அதிகாரிகள் சர்க்காருக்குப் பண சம்பந்தப் பட்ட செலவுகளைச் செய்யப் பொறுப்பானவர் என்ற முறையில் காரியங்கள் செய்திருந்தால் அது தவறாகாது என்றும் கூறியிருந்தார்.

அதற்கு நாங்கள் 18—6—54-ந்தேதி ஒரு பதில் எழுதியுள்ளோம். நாங்கள் குறிப்பிட்ட காலத்

தில் பஞ்சாயத்துப் பணத்தை கஜானாவில் கட்டி அது விஷயத்தைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் மூலம் எழுதியும் அது எங்கள் கோரிக்கைப்படி நடக்கவில்லை. நாங்கள் திட்ட அதிகாரியிடம் எந்தவிதத்திலும் ஒத்துழைக்கவில்லை என்பதை நேரில் விசாரிக்க வேண்டும் என்றும், நான் மேலே கூறியபடி மனப்பான்மையுள்ள திட்ட அதிகாரி நேரில் சந்தித்து எப்படி திட்ட விஷயமான காரியங்களை நிறைவேற்ற முடியும் என்றும். அரசாங்கத்தின் பணத்துக்குத் திட்ட இலாகா அதிகாரிகள் எப்படிப் பொறுப்பானவர்களோ அதுபோல பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்களும் அதிலுள்ள பணத்துக்குப் பொறுப்பானவர்கள் என்பதை உணர்ந்து நாங்கள் நடந்து வருவதாகவும், நாங்கள் கோரிய விஷயத்தை நேரில் விசாரிக்க வேண்டுமென்றும் அக்கடிதம் மூலம் கோரியிருக்கிறோம்.

மேற்படி சம்பவங்களிலிருந்து என்ன தெரிகிறது எனில், சர்க்கார் அதிகாரிகள் செய்த தவறை மறைக்கச் சில வழிகள் இருக்கின்றன என்பது நன்கு புலனாகிறது.

நாங்கள் பணம் கட்டியிருந்தும் சாமான்கள் எங்கள் கிராமத்துக்குக் கிடைக்காமல் போயிற்று. கிராமத்துப் பொதுப் பணம் கிராமத்து மக்களுக்கு உபயோகமாக வழியில்லை.

சர்க்காருக்குப் பொறுப்பான முறையில் திட்ட அதிகாரிகள் நடப்பது உண்மையானால் முதலில் சாமான்களைக் கிராம ஜனங்களையோ அல்லது பஞ்சாயத்தையோ வாங்கும்படி செய்ய வேண்டும். அதன் பிறகு தகுந்த முறையில் சாமான்கள் வாங்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் திட்ட இலாகா அதிகாரிகள் பார்வையிட்டுச் சர்க்கார் மானியத்தை அவர்களிடம் கொடுக்க வேண்டும். அதை விட்டு, திட்ட அதிகாரிகளே அவர்கள் பணத்தைப் போட்டு அதிக விலையில் மோசமான சாமான்களை வாங்கி விநியோகிப்பது நேர்மையான முறையல்ல.

இதுபோன்ற காரியங்களில் ஊக்கமாக முன்னேற்ற வேலைகளைச் செய்து கிராமங்களை முன்னேற்ற மடையச் செய்ய வேண்டுமென்று விரும்புகிற பஞ்சாயத்துக்களுக்குத் தகுந்த ஊக்கம் சர்க்காரால் அளிக்கப்படவில்லை.

இப்படி சர்க்கார் கவனமற்ற முறையில் பஞ்சாயத்தின் கோரிக்கைகளைக் கவனிக்காமல் இருந்தால், நம் நாட்டு ஜனநாயகம் சீர்குலைந்து பஞ்சாயத்து ஆட்சி முறை வெறும் கேலிக் கூத்தாகி விடும்.

வலையெடுப்பு கிராமம்
25—6—54

தி. வெங்கடாசலம்
(பஞ்சாயத்துத் தலைவர்)

★

ஆறுமுகநேரி என்பது எங்கள் ஊர். லக்ஷ்மிமா நகரம் என்ற எங்கள் ஊரை ஒட்டிய கிராமத்தில் நீண்டகாலமாக ஒரு சிறிய பஞ்சாயத்து பணி செய்து வந்தது. அந்தப் பஞ்சாயத்து வீட்டு வரி, கக்கூஸ் வரி, தொழில் வரி, கடை வரி, வண்டி வரி என்றெல்லாம் வரிகளை மக்கள் மீது திணித்து. இரவில் மினுக் மினுக்கென்று கண்ணைச் சிமிட்டி எட்டு மணிக்குள் அணைந்து போகும் சில கோணக்கால் விளக்குகளையும் இருட்டில் வெளிச் செல்லும் மக்களின் கால்களைத் தட்டி நகங்களைப் பெயர்த்து எரியும் அமடுகுமடான தூசி படிந்த ரஸ்தாக்களையும் அவ்வூர் மக்களுக்கு வரப்பிரஸாதமாய்க் கொடுத்து வந்தது. வரி கொடுக்க முடியாத ஏழைகளின் வீடுகளில் எமகிங்கரர்போல் பஞ்சாயத்து பில் கலெக்டர், மேஸ்திரி, தோட்டி முதலானோர் படையெடுத்து, அவ் வேழைகளின் குடிசைகளில் பாத்திரம் பண்டங்களை ஜப்தி செய்து வெளிவரும் காட்சி சிறு வயதில் எனக்கு "காக்கை கோழிக் குஞ்சை தூக்கிப் போவது போல்" தோன்றிற்று. நல்ல வேளை! ஒரே தெருவின் மேற்கு வரிசையிலுள்ள எங்கள் சேரி கிராமத்து வீடுகளுக்கு இந்தப் பஞ்சாயத்துக் கொள்ளை நோய் வரவில்லை. ஏனென்றால் ஒரே தெருவிலுள்ள கிழக்கு வரிசையிலுள்ள வீடுகளின் கரம் பஞ்சாயத்து எல்லைக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தது. மேற்கு வரிசையிலுள்ள எங்கள் வீடுகள் பஞ்சாயத்து எமனிடம் விடுதலை பெற்றிருந்தது. அதனால் எங்கள் கிராமத்தார் பாக்கியசாலிகள் என்று பெருமிதம் கொண்டிருந்தோம்! அப் பாழும் எண்ணம் ஒழிந்தது. எங்கள் ஊரையும் அக் கொள்ளை நோய் பற்றிக் கொண்டது. அது எங்களைப் படாத பாடு படுத்துகின்றது.

மாரி என்னும் சின்னம்மை வியாதியை மைனர் பஞ்சாயத்துக்கு ஒப்பிட்டால் மஹாமாரி என்னும் பெரியம்மை நோயை மேஜர் பஞ்சாயத்துக்கு ஒப்பிடலாம். எங்கள் ஊருக்கு மேஜர் பஞ்சாயத்தே வந்து விட்டது. அது மட்டுமா! அந்தப் பஞ்சாயத்து சின்னம்மை நோயால் பீடிக்கப்பட்ட லக்ஷ்மிமா நகரத்தையும் எங்கள் ஊரைப் போல் சுகமாய் இருந்த கந்தசாமி புரம், ராணிமகாராஜபுரம், நத்தை குளம் ஆகிய தனிப்பட்ட பல ரீயின்யூ கிராமங்களையும் தன் வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டது. இப்பொழுது அப் புதிய பணம் விழுங்கிப் பஞ்சாயத்துக்குப் பெயர் ஆறுமுகநேரி பஞ்சாயத்து என்பது. அதன் நீளம் தென் வடலாக சுமார் 4½ மைல். அகலம் கீழ் மேலாக சுமார் 3 மைல். இதில் ஜனங்கள் வசித்து வரும் பிரதேசம் தென்வடலான பிரதேசம். அதுவும் துக்கடி, துக்கடியாக இருக்குமேயன்றித் தொடர்ந்த குடியிருப்பு இல்லை. பஞ்சாயத்தின் ஜனத்தொகை சுமார் பத்தாயிரத்துக் குட்பட்டதே. இந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் மூன்று ரெயில்வே நிலையங்கள் இருக்கின்றன என்றால் அதன் நீளத்தை ஊகித்துக் கொள்ளுங்கள்.

புதிய பஞ்சாயத்துக்கு வார்டு பிரித்து, வாக்காளர் ஜாபிதா தயாரித்து, பெட்டி வைத்து, ரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்தல் நடத்த வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டனர். அந்தக் கைங்கரியத்தை நடத்துவதற்காகச் சர்க்கார் ஒரு விசேஷ அதிகாரியை நியமித்து ஏற்கனவே வேலை செய்து வந்த லக்ஷ்மிமா நகரம் பஞ்சாயத்தின் சிப்பந்திகளை அவரிடம் ஒப்புவித்தனர். புதிய பஞ்சாயத்து அமைப்பில் அநுபவமில்லாத இந்த விசேஷ அதிகாரி பழம் பெருச்சாளிகளான லக்ஷ்மிமா நகரம் பஞ்சாயத்துச் சிப்பந்திகளிடம் புதிய பஞ்சாயத்து அமைப்பையும் நிர்வாகத்தையும் ஒப்புவித்து அச்சிப்பந்திகளின் கைப் பொம்மையாகச் சுழன்று வந்தார். ஏற்கனவே எங்கி வந்த லக்ஷ்மிமா நகரம் தவிர மற்ற மூன்று கிராமங்களிலுள்ள வீடுகளுக்கும் பழம் பெருச்சாளிகளின் (சிப்பந்திகளின்). இஷ்டப்படிக் கெல்லாம் தாராதரமும் தீர்வையும் நிர்ணயிக்கப் பட்டன. இதனால் எங்கள் பஞ்சாயத்தை வரிப்புலி பஞ்சாயத்து எனலாம். வரிப் புலியின் தேகத்தில் காணப்படும் வரிகளுக்குக் குறையாத எண்ணிக்கை கொண்டது எங்கள் பஞ்சாயத்தின் வரிகள். அவ்வரியை வசூலிப்பதிலும் எங்கள் பஞ்சாயத்து வரிப்புலிதான். சர்க்கார் விசேஷ அதிகாரிக்கு நிர்ணயித்த கால வரம்பு தவணை நெருங்கவே,

அவர் ஏனோதானோ என்று ஒரு வாக்காளர் ஜாபிதாவைத் தயாரித்துத் தேர்தலை நடத்தியதும் ஊரை விட்டுப் போனார்.

புதிய தேர்தலுடன் புதிய பஞ்சாயத்தில் இரு புதிய கட்சிகள் தோன்றின. பதவி ஏற்ற புதிய தலைவர் தமது மெஜாரிட்டி சகாக்களின் துணையுடன் எதிர்க் கட்சி அங்கத்தினரையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் அதிகாரத்தின் பேரால் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளாக்கினார். தம்மைச் சேர்ந்தவர்களுக்கு வரி வஜாக்களும் எதிர்க் கட்சியாளருக்குக் கூடுதல் வரி விதிப்புகளும் ஆக்ரமிப்பு நடவடிக்கைகளும் தாண்டவமாடின. சிப்பந்திகளின் எண்ணிக்கை அளவுக்கு மீறிப் பெருகியது. சிப்பந்திகளின் சம்பளம் போக மீத வருமானத்தைக் கொண்டு கூடுதலான சில கோணக்கால் விளக்குகள் போடப்பட்டன. சில துண்டு ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டன. வாசகசாலை வரியென்ற மற்றொரு புதிய வரியின் உதவியால் பஞ்சாயத்துக் காரியாலயத்தில் சில புதிய பத்திரிகைகள் வரவழைக்கப் படுகின்றன.

எங்கள் பஞ்சாயத்து ஆபீஸிலிருந்து காலையில் வேலைக்குப் புறப்படும் தோட்டிகள் பஞ்சாயத்தின் தெற்கு எல்லையை யடைந்து வேலை தொடங்குவதற்கு முன் மத்தியானம் ஆகி விடுகிறது. கடும் வெய்யிலில் கடுமணலில் நடந்த அலுப்பு அத்தோட்டிகளின் தலையைச் சுற்றுகிறது. அவர்கள் சிறிது பசியாறி களைப்பு மாறியவுடன் அவர்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டால்தான் இருட்டு முன் அவர்களுடைய வீட்டுக்கு வந்து சேரலாம். அந்த நிலையில் அவர்கள் செய்யக் கூடிய ஒப்பற்ற நகர சுத்திகரிப்பு என்னவாயிருக்கு மென்று நீங்களே யோசித்துக் கொள்ளலாம். சுத்திகரிப்பாளரின் வேலையை மேற் பார்வையிடச் செல்லும் மேஸ்திரி என்னதான் செய்ய முடியும்! எனவே எங்கள் பஞ்சாயத்து செய்து வரும் கைங்கரியம் ஆவன:

1. அரை வயிற்றுக் கஞ்சிக்குத் தாளம் போடும் ஏழைகளின் வரிப் பணத்திலிருந்து தாராளமான சம்பளத்தில் ஏராளமான சிப்பந்திகளைக் குடும்ப சமேதராக ஆயுள் காலம் வரை காப்பாற்றி வருதல். 2. ரஸ்தாவில் நிறுத்தியிருக்கும் விளக்குக் கம்பங்களில் இருட்டு நேரங்களில் தெரிந்து கொள்ள முடியாமல் மக்கள் மோதி மண்டை உடைவது. 3 வண்டிகளும் மனிதர்களும் ரஸ்தாவில் போவதால் ஏற்படக்கூடிய அபத்துக்களைத் தடுப்பதற்காக மக்கள் ரஸ்தாவைப் பரிசுத்த ஸ்தலம்போல் மிதிக்காமல் ஒய்யாரமாய் விலகிச் சஞ்சரித்தல். ஆகிய மூப்பெரும் காரிய சித்திகளை மக்களுக்குப் பஞ்சாயத்து சாதித்துத் தந்திருக்கிறது. அது மட்டுமா!


எங்கள் பகுதி சட்டசபை அங்கத்தினரின் தீவிர முயற்சியால் எங்கள் புதிய பஞ்சாயத்தின் தெருக்கள் அபிவிருத்திக்காகச் சுமார் கால் லட்ச ரூபாய் சர்க்காராலும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஐயோ பாவம்! சர்க்கார் கொடுத்த தவணைக்குள் அந்த நிதியில் ஒரு செப்புக் காசுகூடச் செலவிட வகை தெரியாமல் பந்தோபஸ்தாக அத்தொகை முழுவதையும் காருண்ய சர்க்காரிடம் அப்பஞ்சாயத்து திருப்பிக் கொடுத்து விட்டது.

சென்னை சர்க்கார் கிராமாந்திர குடி தண்ணீர் வசதிக்கென பரீட்சார்த்தமாக எங்கள் வரிப்புலி பஞ்சாயத்துடன் வேறு மூன்று பஞ்சாயத்துக்களை இணைத்துக் குழாய்த் தண்ணீர் விநியோக செய்யத் திட்டமிட்டிருக்கின்றனர். அதன் அமைப்பு செலவு முழுவதையும் சர்க்காரே ஏற்றுக் கொண்டு தண்ணீர் பங்கீடும் நடைமுறை செலவுகளை மட்டும் பஞ்சாயத்துக்களைச் செய்து வரும்படி கட்டளை யிட்டனர். அவ்விதம் பங்கிடும் செலவை அந்தந்தப் பஞ்சாயத்தின் வீட்டு வரியில் ஒரு குறிப்பிட்ட சத விகிதம் தண்ணீர் வரியாக விதித்து மக்களிடம் முன்னதாகவே வசூலித்து வரும்படி சர்க்கார் ஆலோசனை கூறினர். எங்கள் ஒப்பற்ற பஞ்சாயத்தைத் தவிர இதர மூன்று பஞ்சாயத்துக்களும் 25 சத விகிதத்துக்கும் மிகக் குறைந்த அளவில் தண்ணீர் வரி விதித்தன. ஆனால் எங்கள் காருண்ய பஞ்சாயத்து வீட்டு வரியில் நூற்றுக்கு நூறு சத விகிதத் தீர்வை ஏற்படுத்தி வசூலிக்கிறது. தண்ணீர்த் திட்டம் பூர்த்தியாகு முன் நாங்கள் ஐந்து வருஷத்துக்கு மேல் இவ்வித வரி கொடுத்து வர வேண்டியிருக்கு மெனத் தெரிய வருகிறது.

எங்கள் ஊரில் இப்புதிய பஞ்சாயத்துக்கு முன் சிவில் கிரிமினல் அதிகாரங்களுடன் ஒரு பஞ்சாயத்து கோர்ட் இயங்கி வந்தது. அதில் நேர்மை மிக்க தலைவர் ஒருவர் 12 வருஷம் சிவில், கிரிமினல் நீதி பரிபாலனம் செய்து மக்களின் பாராட்டுதலைச் சம்பாதித்தார். அவர் காலமானதும் நாம் குறிப்பிடும் புதிய பஞ்சாயத்தின் தலைவரே அம்மாஜி பஞ்சாயத்துக் கோர்ட்டின் தலைவரானார். ஆனால் தேர்தலில் தமக்கு அநுகூலமாக வாக்களித்தவர்கள் சார்பில் நீதி பரிபாலனம் இயங்கிற்று. அவரை எதிர்த்தவர்கள் மீது கிரிமினல் சிவில் வழக்குகள் சரமாரியாகத் தொடர்ந்தன. அதன் புகார் சர்க்காருக்கு எட்டியது. சர்க்கார் அந்த அநீதி ஆட்சியை ரத்து செய்து எங்கள் ஊரிலுள்ள சிவில், கிரிமினல் பஞ்சாயத்துக் கோர்ட்டை ஒழித்துக் கட்டினர். ஆனால் எங்கள் ஊர் வரிப்புலி பஞ்சாயத்து பழைய மாஜி தலைவரின் கீழ் சிவில் அதிகாரத்துடன் மீண்டும் இயங்கவே அவரது பழைய நீதிபரிபாலன முறையை மீண்டும் மக்கள் மீது செலுத்தினர். இத்தியாதி ஒப்பற்ற எங்கள் பஞ்சாயத்து, வரி விதிப்பிலும் பொது நல அபிவிருத்தியாலும் நீதிபரிபாலன நேர்மையாலும் மக்கள் ''அந்த நாளும் வந்திடாதோ'' என மறு தேர்தல் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தனர். நல்ல வேளையாகச் சமீபத்தில் அந்த நாளும் வந்தது. மறைமுக வாக்குப் பதிவு மூலம் தேர்தல் நடத்தியதால் மக்கள் பழைய பஞ்சாயத்து அங்கத்தினர்களையும், தலைவரையும் தலை நீட்ட விடாது தேர்தலில் தோல்வி யடையச் செய்தனர். தற்போதைய பஞ்சாயத்தின் புதிய தலைவர் உழைப்பாளி. நேர்மையானவர். மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். எக்ஸிகியூடிவ் ஆபீஸர்களென்னும் முட்டுக் கட்டைகளைச் சமாளித்து அப்புதிய தலைவரால் மேற்சொல்லிய சூழ் நிலையில் பஞ்சாயத்து மூலம் பொதுமக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்யக் கூடுமென்பதை மக்கள் காத்திருந்துதான் பார்க்க வேண்டும். சுருக்கச் சொன்னால் எங்கள் ஊர் பஞ்சாயத்துக்கு நாங்கள் இதுவரை செலுத்தி இருக்கும் வரியின் மொத்த தொகையைக் கண்டு பஞ்சாயத்து என்று ஒன்று இல்லாமலே எவ்வளவோ அற்புதமான காரியங்களைச் சாதித்திருக்கலாம். ஆனால் அந்தப் பெரும் தொகையைக் கொண்டு எங்களூர் பஞ்சாயத்து மூலம் நாங்கள் பல சிப்பந்தி குடும்பங்களையும், பல கண்ட்ராக்டர் குடும்பங்களையும் வருந்த விடாது கப்பம் கட்டிக் காப்பாற்றியது தான் நாங்கள் கண்ட பலன்.

திருநெல்வேலி
23—6—54

கஸ்தூரி




சென்னை ராஜ்யத்துக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஸ்ரீ சி. ரெங்கராஜு நாயுடு
9/1, கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்

# சக்கரவர்த்தித் திருமகன்

## 11. கொழுமுகத்துக் குழந்தை

மிதிலாபதியான ஜனகர் மிகவும் நல்ல முறையில் தம் தேசத்தை ஆண்டு வந்தார். தசரத சக்கரவர்த்திக்குப் பழைய மித்திரர். தசரதன் புத்திரப் பேறுக்காகச் செய்த பெரிய யாகத்திற்கு அரசர்களை அழைத்தபோது மிதிலாபதியிடம் தூதர்களை அனுப்ப வேண்டாம். மந்திரிகளே நேரில் போய் அழைக்க வேண்டும் என்று தனி உத்தரவிட்டான். ஜனகர் ஒரு ராஜ ரிஷி; சூரர்; எல்லா சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றவர்; வேத வேதாங்கங்களில் நிபுணர்; நியமம் காத்தவர்; பிரம்ம ஞானி; கடமைகளைச் செய்தே சித்தி யடைவதைப் பற்றி அருச்சுனனுக்கு எடுத்துச் சொல்லும் போது கண்ணன் ஜனகரைச் சிறந்த உதாரணமாக எடுத்துச் சொன்னான். சீதையை மகளாகப் பெறத் தகுதி கொண்ட மகான்.

ஒரு காலத்தில் ஜனக மகாராஜா, யாகம் செய்வதற்கென்று இடம் கண்டு அதைத் தாமே கலப்பை பிடித்து உழுதார். உழுது புதரும் பூண்டுமாக இருந்த பூமியைச் சமன் செய்து ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கும் போது மண்ணில் ஒரு திவ்ய ரூபமான பெண் குழந்தையைக் கண்டார். ஜனகருக்குக் குழந்தை யில்லை. தரையில் புரண்டு உடலெல்லாம் மண் பூசிக் கிடந்த அக் குழந்தையைப் பூதேவியே தமக்குத் தந்த வரம் என்று மகிழ்ச்சி பரவசமாகக் கையில் எடுத்துக் கொண்டு தம் பிரிய பார்யையிடம் சென்று, "இதோ, நமக்குக் கிடைத்த பெருந்தனம்! யாக பூமியில் இவளை அடைந்தேன். இவளே நம்முடைய சந்தானம்!" என்று குழந்தையைப் பட்டமகிஷியிடம் தந்தார். அவளும் அக் குழந்தையைத் தான் பெற்ற குழந்தையாகவே வளர்த்தாள். கம்பர் பாடி யிருக்கும் மிக அழகிய பாட்டை இவ்விடம் சொல்லலாம்.

பூதேவியை நாம் நேரில் பார்க்க முடியாது. உழுகின்ற கொழு முகத்தில் தன் அபார அழகைப் பச்சைப் பயிர்களின் வாயிலாகக் காட்டுகிறாள். உதிக்கும் சூரியனுடைய கிரணங்களுக்குச் சமமான பொலிவுடன் பூமாதேவி முளைக்கும் பயிர்களில் விளங்குகிறாள். உள்ளே மறைந்து நிற்கும் தேவியின் முழு அழகு நமக்குத் தெரியாது. அந்த பூதேவியே சீதையாக வெளிப்பட்டு ஜனகருடைய கலப்பைக் கொழு முகத்தில் தோன்றினாள். கடலைக் கடைந்த போது அமுதத்தோடு எழுந்த சீதேவியும் சீதையின் அழகைக் கண்டு வியந்து தொழுவாள் என்று பாடுகிறார்:

> உழுகின்ற கொழுமுகத்தின்
> உதிக்கின்ற கதிரின்ஒளி
> பொழிகின்ற புவிமடந்தை
> உருவெளிப்பட் டெனப்புணரி *
> எழுகின்ற தெள்ளமுதோ(டு)
> எழுந்தவளும் இழிந்(து)ஒதுங்கத்
> தொழுகின்ற நன்னலத்துப்
> பெண்ணரசி தோன்றினள்.

* புணரி-பாற்கடல்

பாட்டில் மொழிச் சிக்கனம் அதிகம். பொருளோ மிக அடர்த்தி. இது கம்பர் பாட்டுகளின் தனிப் பண்பு.

* * *

தெய்விகக் குழந்தையான சீதையை மிகவும் அன்போடு ஜனகரும் அவர் பிரிய பத்தினியும் வளர்த்தார்கள்.

விவாகத்துக் குரிய காலம் வந்தது. இவளை விட்டுப் பிரிய வேண்டுமே என்று ஜனகர் துக்கப் பட்டார். தெய்விகப் பெண்ணாகிய இவளை மனைவியாகப் பெறக் கூடிய அரச குமாரன் யார் என்று யோசித்து ஒருவரையும் காணாமல் வெகு காலம் ஜனகர் வருத்தப் பட்டார். அரசர்கள் பலர் வந்து கேட்டார்கள். ஆனால் அவர்களில் யாரும் சீதையைப் பெறும் தகுதி வாய்ந்தவராக ஜனகர் மதிக்க வில்லை. இந்த நிலையில் ஒரு நாள் ஜனகர் நிச்சயித்தார். முன்னொரு சமயம் மகாயாகம் செய்த காலத்தில் வருணன் ஜனகருடைய யாகத்தைப் போற்றி ருத்திர வில்லையும் இரண்டு அம்பறாத் தூணிகளையும் ஜனகருக்குத் தந்திருந்தான். அந்த வில்லானது மிகப் புராதன தெய்விகமான வில். அதைச் சாமான்ய ஜனங்கள் கையால் அசைக்கக் கூட முடியாது. எடுத்து, வளைத்து நாண் ஏற்றுவதைப் பற்றிச் சொல்லவே தேவை யில்லை! முடியாத காரியம். ஜனகர் அரச சமூகத்துக்குத் தெரியப் படுத்தினார்:

“என்னிடமிருக்கும் வருண தேவப் பிரஸாதமான இந்த ருத்திர வில்லை எந்த அரச குமாரன் வளைத்து நாண் பூட்டுகிறானோ அவனுக்கு என் மகள் சீதையைத் தருவேன். இதுவே என் மகளுடைய சுயம்வர நிபந்தனை.”

சீதையின் அழகைப் பற்றிக் கேள்விப் பட்டு, பல அரச குமாரர்கள் வந்து, வில்லைப் பார்த்துவிட்டு ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பி விட்டார்கள்.

## 12. சகரன்

விசுவாமித்திரர் தலைமையில் புறப்பட்ட ரிஷிகள் மாட்டு வண்டிகளில் சாமான்கள் ஏற்றி மிதிலை நோக்கி வடக்கே சென்றார்கள். ஆசிரம வனத்திலிருந்த பட்சிகள், மான்கள் எல்லாம் கூடவே சென்றதைப் பார்த்து விசுவாமித்திரர் அவற்றை அன்புடன் அங்கேயே நிறுத்தினார்.

சோண நதிக்கரை சேர்ந்ததும் மாலையாயிற்று. அங்கே அந்த இரவு தங்கினார்கள். அந்த இடத்தின் பூர்வ கதைகளை ராஜ குமாரர்களுக்கு முனிவர் சொல்ல இரவு சந்தோஷமாகக் கழிந்தது. அடுத்தநாள் காலை எழுந்து ஒரு நதியைத் தாண்டினார்கள். ஜலம் ஆழ மில்லாமலிருந்த படியால் நடந்தே தாண்டினார்கள். பிறகு நடுப் பகலில் புண்ணியநதி கங்கைக் கரையை அடைந்தார்கள். எல்லோரும் கங்கையில் ஸ்நானம் செய்து தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் முன்னோர்களுக்கும் தர்ப்பணம் செய்தார்கள். அங்கேயே ஆகாரம் சமைத்து, பூஜை செய்து, போஜனம் செய்தார்கள். எல்லோரும் விசுவாமித்திரரைச் சுற்றி உட்கார்ந்தார்கள்.

“முனிவரே! கங்கையின் வரலாற்றைச் சொல்ல வேண்டும்” என்று ராஜ குமாரர்கள் ஆவலுடன் கேட்க, முனிவரும் சொல்லப் புகுந்தார்.

* * *

பர்வத ராஜனான ஹிமவானுக்கும் மனைவி மனோரமைக்கும் அபூர்வ லட்சணம் பொருந்திய இரண்டு புதல்விகள் இருந்தார்கள். மூத்தவளாகிய கங்கா தேவியை தேவர்களின் பிரார்த்தனையின் பேரில் ஹிமவான் தேவலோகத்துக்கு அனுப்பிக் கொடுத்தான். இளைய குமாரி உமை, சங்கரனை விரும்பி, பெரும் தவம் புரிந்தாள். பரமசிவனும் திருப்தி யடைந்து உமா தேவியைத் தன் பத்தினியாகப் பெற்றான். ஹிமவானுடைய இரு பெண்களும் இவ்வாறு மிகப் புண்ணிய நிலையை அடைந்தார்கள். எல்லாப் பாவங்களையும் போக்கும் கங்கா தேவி தேவலோகத்திலேயே இருந்து வந்தாள்.

அயோத்தியாதிபதி சகரன் என்ற மகாராஜன் வெகு நாள் சந்தான மில்லாமல் வருந்தினான். கேசினி, சுமதி என்ற தன் இரு பத்தினிகளையும் அழைத்துக் கொண்டு இமயமலையில் தவம் செய்தான்.

பிருகு முனிவர் அவன் தவத்தைக் கண்டு மகிழ்ந்து சந்தானம் பெறுவாய் என்று வரம் தந்தார்.

"வீரனே! நீ மகத்தான சந்தானம் பெறுவாய். அபார கீர்த்தியும் பெறுவாய். உன் பத்தினிகளில் ஒருத்தி ஒரு புத்திரனைப் பெறுவாள். உன்னுடைய வம்சம் அவன் வழியாகப் பெருகும். இன்னொரு பத்தினி பலவான்களான அறுபதினாயிரம் புத்திரர்களைப் பெறுவாள்" என்று ஆசீர்வதித்தார்.

ராஜபத்தினிகள் முனிவரைப் பணிந்து "சுவாமி, யாருக்கு ஒரே மகனும் யாருக்குப் பல குமாரர்களும் தந்தீர்?" என்று கேட்டார்கள்.

"ஒருத்தி பெறும் ஒரே மகன் வழியாகத்தான் வம்சம் பெருகும். மற்றவள் பெறும் அநேக புத்திரர்கள் பலவான்களாக வளர்ந்து பெரும் புகழ் பெறுவார்கள். உங்களில் யாருக்கு எது இஷ்டம்?" என்று முனிவர் கேட்டார்.

மக்களின் ஆசை பலவிதம். கேசினியானவள் வம்சம் வளர்க்கும் ஒரு மகன் தனக்குப் போதும் என்றாள். சுமதியோ பலமும் கீர்த்தியும் அடையப் போகும் அநேக மக்களைப் பெற விரும்பினாள். "அப்படியே யாகட்டும்" என்று முனிவர் சொன்னார். வரம் தந்த முனிவரை வலம் செய்து வணங்கி இரு மனைவிமாருடன் அரசன் மிக்க திருப்தியோடு நகரத்துக்குத் திரும்பிப் போனான்.

கொஞ்ச காலங் கழிந்தபின் கேசினியானவள் அசமஞ்சன் என்ற மகனைப் பெற்றாள். சுமதி வடிவமற்ற ஒரு பிண்டத்தைப் பிரசவித்தாள். அந்தப் பிண்டம் பொரிந்து அதனின்று முனிவர் சொன்னபடி அறுபதினாயிரம் குழந்தைகள் உண்டானார்கள். குழந்தைக் கூட்டத்தைத் தாத்திரிமார்கள் நன்றாகப் பாதுகாத்து வளர்த்தார்கள்.

காலக்கிரமத்தில் குழந்தைகள் யௌவன நிலையடைந்து மிக்க அழகும் வீரமும் கொண்ட ராஜ குமாரர்களாக வளர்ந்தார்கள். மூத்த மனைவியின் குமாரன் அசமஞ்சன் வளர வளரக் குரூர குணத்தை யடைந்தான். ஊரிலுள்ள குழந்தைகளைப் பிடித்து ஆற்றில் மடுவில் போட்டு அவை தத்தளித்துச் சாவதைக் கண்டு சிரித்துச் சந்தோஷப் படுவான்.

இவ்வாறு பைத்தியம் பிடித்துப் போன அசமஞ்சனை ஜனங்கள் மிகவும் வெறுத்தார்கள்.

அரசனுடைய அனுமதியுடன் அவனை ராஜ்யத்தை விட்டே துரத்தி விட்டார்கள். ஆனால் அவனுக்குப் பிறந்த மகன் அம்சுமான் என்ற ராஜகுமாரன் மிகவும் குணசாலி. எல்லோருடைய அன்பையும் நன்மதிப்பையும் சம்பாதித்தான். சீலமும் அறிவும் பொருந்தியவனாக வளர்ந்தான்.

• • •

சகரன் ஒரு பெரும் அசுவமேத யாகம் செய்ய நிச்சயித்ததின் பேரில் அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்



யப்பட்டன. அசுவமேத யாகத்துக்குரிய குதிரையை ராஜகுமாரன் அம்சுமான் காத்து வந்தான். ஆனால் இந்திரன் ராக்ஷச வேஷம் பூண்டு குதிரையைக் கொண்டு போய் விட்டான்.

அசுவமேத யாகங்களைத் தடை செய்வது தேவர்களுடைய வழக்கம். இந்திரனுடைய பதவிக்குப் போட்டி ஏற்படும் என்கிற பயம். ஆயினும் தடைகளைத் தாண்டி யாகம் நடைபெற்று விட்டால் யாகத்தில் தரப் படும் அவிசுகளைத் தேவர்கள் பெற்றுத்தான் போக வேண்டும். அதன் மேல் யாகத்தைச் செய்தவன் யாகத்தின் பலனை அடைவான்.

குதிரை காணாமல் போயிற்று என்று அரசனுக்குத் தெரிந்ததும் மிக வருத்தப்பட்டு எப்படியாவது கண்டு பிடித்துக் குதிரையைக் கொண்டு வர வேண்டுமென்று சுமதி புத்திரர்களான அறுபதினாயிரம் ராஜ குமாரர்களையும் பூமண்டலம் முழுதும் தேடி வரும்படி அரசன் அனுப்பினான். "யாகக் குதிரையை இழந்ததால் யாகம் கெடுவதுமல்லாமல் சம்பந்தப்பட்ட எல்லோரையும் பாவம் சுற்றிக் கொள்ளும். ஆகையால் போய், திருடிப் போனவன் எங்கே மறைத்து வைத்திருந்தாலும் கண்டு பிடித்துக் குதிரையைக் கொண்டு வர வேண்டும்" என்று சகரன் வீரமும் சௌரியமும் கொண்ட தன் புத்திரப் பெருங் கூட்டத்துக்கு உத்தரவிட்டான்.

சகர புத்திரர்களும் மிக உற்சாகமாக உலகமெல்லாம் சுற்றி அட்டகாசம் செய்தார்கள். எங்கும் கிடைக்கவில்லை.

பூமியை வெட்டித் தோண்டினார்கள். எங்கும் வெட்டித் தள்ளி வெட்டித்

# புது டில்லியில் சாத்தூர் சங்கீதம்

சுப்புடு

சாத்தூர் சுப்பிரமணியத்தின் சங்கீதக் கச்சேரி 1944-ம் வருஷம் டில்லியில் நடைபெற்றது. அதைப் பற்றி விமர்சனம் எழுத வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விமரிசனத்தை "இதோடு என் அதிகப்பிரசங்கத்தை முடித்துக் கொள்கிறேன்" என்று முடித்திருந்தேன். 'கல்கி' ஆசிரியர் "அதிகப் பிரசங்கம் பலே ஜோர்!" என்று ஷொட்டுக் கொடுத்திருந்தார். இதைக் கிடைத்தற்கரிய பாக்கியமாகக் கருதி நான் சங்கீத விமரிசனங்கள் தொடங்கி எழுதி வந்திருக்கிறேன்.

1954-ம் வருஷம் நேற்று (ஜூன் 20 உ.) மறுபடியும் சாத்தூர் சுப்பிரமணியத்தின் கச்சேரி கேட்டேன், டில்லி கர்நாடக சங்கீத சபாவின் ஆதரவில்.

சாத்தூரின் சாரீர வசதி பிரமாதமானது. பல பல இடங்களில் படே குலாம் அலிகான் போல் 'பல்டி கிரவல்' சங்கதிகள் பேசும் சாரீரம். பல வருட சாதகத்தினாலும் மெருகேறியிருக்கும் சாரீரம்.

முக்கியமாகச் சுத்தமான கர்நாடக ஸங்கீதம் கேட்பதற்குச் சாத்தூரை நிச்சயம் நம்பலாம்.

நாட்டைக் குறிஞ்சி வர்ணம் சுகமாகத் த்வனித்தது. ஆரபியில் ஆதி சங்கரரின் பஜகோவிந்தம் நல்ல ரஸத்துடன் பாடப்பட்டது. இந்தப் பாட்டிற்கு ஸ்வரம் தேவையா என்ற சர்ச்சையை நான் துவக்க விரும்பவில்லை.

காம்போதி கர்நாடக சுத்தம். துளிக்கூட கமாஸ், அல்லது மேல்ஸ்தாயியில் செஞ்சுருட்டி சங்கதிகள் சேர்க்காமல் பாடினார். தொடர்ந்து வந்த 'ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே' கீர்த்தனம் எப்படி யிருக்க வேண்டுமோ அப்படி யிருந்தது. சம்பிரதாயப்படி "வாசவாதி"யில் நிரவல் ஸ்வரம். மேல்ஸ்தாயியி லிருப்பதால் சர்க்கஸில் ஏணிமீ தேறிக் கழைக் கூத்தாடுவது போன்ற [illegible]லிக்கும் பிரமை தட்டுகிறது. சாஹித்யத்தை இரு பாகமாய்ப் பிரித்து ஸ்வரம் ஜமாய்த்துத் தள்ளிவிட்டார். சபையோர்கள் நிறைய 'அப்ளாஸ்' கொடுத்தார்கள். அதுவும் தாளத்தோடு இருந்த தென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ராகம், தானம், பல்லவிக்கு ஷண்முகப் பிரியா அமைந்தது. இந்த ஷண்முகப் பிரியாவின் கர்நாடக உருவம் இன்னதென்று இதுவரை யாரும் நிர்ணயித்ததாகத் தெரியவில்லை. என்னப்பன் என்னையன், கந்தப்பனுக்குப் பிரியமான இந்த ராகத்தில் மலை நாட்டு தேசிகம் நிறையக் கலந்திருப்பது சகஜம்தான். எப்படிக் கையாண்டாலும் வளைந்து கொடுக்கும் இந்த ராகம் தமிழனின் சுபாவத்திற்கு ஓர் அறிகுறியா யிருக்கிறது. சாத்தூர் இந்த ராகத்தில் வாங்கின கரகோஷங்களுக்குக் கணக்கில்லை. மனு தர்மத்துக்கு இசைவாயிருக்கும் இந்த முருகப் பிரியாவை நாம் கர்நாடக நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்தாமல் விட்டு விடுவோம்.

மிஸ்ர ஜாதி திருபுடையில் பல்லவி இருபத்தோரு அக்ஷரங்களை வைத்துக் கொண்டு (ஏழு அக்ஷரம், ஒவ்வொன்றையும் மிஸ்ரம் செய்து கொள்ள வேண்டும்) சபையோரில் பெரும்பாலோரைத் திக்குத் தெரியாத காட்டில் அழைத்துச் சென்று பத்திரமாய்த் திரும்ப அழைத்து வந்தார்.

வயலின் வாசித்த லால்குடி ஜயராமனைப் பற்றி நான் அதிகம் சொல்லப் போவதில்லை.

பிற்காலத்தில் இந்த வாத்தியத்தில் தலை சிறந்து விளங்கப் போகும் இள வயலின் வித்வான்களில் மாஸ்டர் கிருஷ்ணனும், லால்குடி ஜயராமனும் முதல் இரண்டு ஸ்தானங்கள் வகிப்பார்கள் என்பது திண்ணம்.

ராமநாதபுரம் ஈஸ்வரனைப் பற்றிக் கர்நாடகம் சில ஆண்டுகளுக்கு முன் ரொம்ப லோக்கியமாய் எழுதி யிருந்தார். நேற்று மிஸ்ர ஜாதி திருபுடை பல்லவியில் வாசித்த தனி ஆவர்த்தனம் அக்கூற்றை மெய்ப் படுத்துகிறது.

கச்சேரி மிகப் பந்தோபஸ்துடன் நடந்தது? காற்றுக் கூடப் புக முடியாமல்!

இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தால், நேற்று 110 டிக்ரி சீதோஷ்ணம் என்றிருக்கிறது.


தன்னிப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கினார்கள். "நீதான் திருடினாய்! நீ தான் திருடினாய்!" என்று எங்கேயும் எல்லோரையும் குற்றம் சாட்டி, அதட்டி, தொந்தரவு செய்து வந்தார்கள். எங்கு தேடியும் அகப்படவில்லை. இதை அரசனிடம் சொன்னார்கள். துயரப்பட்ட அரசன், "நீங்கள் பூமியைப் பிளந்து, பாதாளம் புகுந்து பாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

தந்தை சொற்படி சகர குமாரர்கள் பூமியைத் தோண்டி பாதாளம் புகுந்து, பூமியைத் தாங்கி நின்ற யானைகளை நமஸ்கரித்து விட்டு, யாகக் குதிரையைத் தேடிச் சென்றார்கள். அங்கே வட கிழக்கு மூலையில் ஓரிடத்தில் தங்கள் குதிரையைக் கண்டார்கள்.


மகாவிஷ்ணுவாகிய கபிலர் அங்கே யோகத்திலிருந்தார். பக்கத்தில் யாகக் குதிரை தன் பாட்டுக்குப் புல் மேய்ந்து கொண்டிருந்தது. இதைக் கண்டதும், சகர புத்திரர்கள் "இதோ திருடன், குதிரையைத் திருடிவிட்டுத் தவ வேஷம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்" என்று கோபாவேசமாய்க் கபிலர் மேல் பாய்ந்தார்கள்.

யோகத்திலிருந்த கபில முனிவர் கண்களைத் திறந்து "ஹும்" என்று மூச்செறிந்தார். ராஜ புத்திரர்கள் அறுபதினாயிரம் பேரும் அங்கேயே சாம்பற் குவியலாய்ப் போனார்கள். இந்திரன் குதிரையைக் கொண்டுபோய்ப் பாதாளத்தில் அங்கே ஒளித்து வைத்திருந்தான். அதனால் இவ்விதம் சகர புத்திரர்கள் சாபமடைந்து மாண்டார்கள்.

## நட்சத்திரத் திருமணம்



நாட்டிய நட்சத்திரம் குமாரி கமலாவுக்கும் பிரபல கார்ட்டூனிஸ்ட் ஸ்ரீ ஆர். கே. லக்ஷ்மணன் அவர்களுக்கும் ஜுன் மீ 25உ சென்னை, கீழ்ப்பாக்கம், காலேஜ் பார்க்கில் திருமணம் சிறப்பாகவும் கோலாகலமாகவும் நடந்தேறியது. சென்னை நகரில் உள்ள பிரமுகர்களும், சங்கீத வித்வான்களும், சினிமா நட்சத்திரங்களும், நடன மணிகளும், கலா ரஸிகர்களும் திருமணத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்தனர். திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளுக்குக் 'கல்கி' மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ டி. சதாசிவம் வாழ்த்துக் கூறுவதையும், நட்சத்திரத் தம்பதிகள் புன்முறுவலுடன் நிற்பதையும் மேலே படத்தில் காணலாம். வாழ்க, கமலா - லக்ஷ்மணன்!



இந்த
நம்பிக்கை
வாய்ந்த
டிரேட் மார்க்
"HIS MASTER'S VOICE"
இன்று ரேடியோக்
களில் மிகச் சிறந்த
தையே குறிக்கிறது
CAR RADIO
Model 4300
Rs. 725/-
Model 5114
5 valve-AC
Rs. 370/-
6 Valve Models
5162 AC — Rs. 520/-
5261 AC/DC — Rs. 520/-
7 Valve Models
5118 AC. — Rs. 695/-
5218 AC/DC — Rs. 685/-
You cannot choose better than
"HIS MASTER'S VOICE"
THE GRAMOPHONE CO., LTD. Calcutta • Bombay • Madras • Delhi

# விதியின் கை

ரா. பாலகிருஷ்ணன்

அன்று அதிகாலையில் நான் குத்தாலம் ரயிலடிக்கு வந்து சேர்ந்தபோது என் மனக்கடலில் ஆயிரமாயிரம் சிந்தனைகள் அலைமோதின. டிக்கட் வாங்குவதற்காகப் பணத்தை எடுத்துக் கொண்டிருக்கையில் என் முதுகில் பலமாக ஒரு 'ஷொட்டு' விழவே திடுக்கிட்டுத் திரும்பினேன்.

"அட, பழி! நீ எங்கேடா இங்கே வந்தாய்!" என்றான் என் நண்பன் சுப்புடு. பல வருடங்களுக்குப் பிறகு அவனைப் பார்த்ததில் எனக்குப் பரம சந்தோஷம். சுப்பிரமணியனும் நானும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். ஹாஸ்டலில் இருவருக்கும் அடுத்த அடுத்த அறை. மிகவும் நெருங்கிப் பழகி வந்தோம். 'இண்டர்' முடிந்ததும் நான் சட்டக் கல்லூரியில் சேர்ந்தேன். சுப்புடு வைத்தியப் படிப்பில் ஈடுபட்டான். அதன் பிறகு அவனை நான் அடிக்கடி சந்திக்க இயலவில்லை. என் படிப்பு முடிந்ததும் நான் திருச்சிக்குத் திரும்பி விட்டேன். அவனுக்கு அப்போது இன்னும் இரண்டு வருடப் படிப்பு பாக்கி யிருந்தது. அதற்குப் பிறகு அவனை இன்றுதான் முதன் முறையாகச் சந்தித்தேன்.

"ஏண்டா! கேட்ட கேள்விக்குப் பதில் இல்லையே! எங்கே இந்தப் பக்கம் காற்று அடித்தது!" என்றான் சுப்புடு.

நான் சிரித்தபடியே, "இங்கே......கல்யாணத்துக்கு வந்தேன்......" என்று சொல்லும்போதே அவன் இடைமறித்து, "யாருக்குக் கல்யாணம்! ஆமாம்...... உன் கல்யாண சமாசாரம் என்னவாயிற்று! இன்னும் பிரும்மசாரிதானு!" என்றான்.

"என் கல்யாணம் தானப்பா! அதற்குத்தான் வந்தேன். அதுவும் இன்றைக்கு!" என்று நான் கூறியதும் அவன் சிரித்தான். சிரிக்காமல் என்ன செய்ய முடியும்! ஆரம்பத்திலேயே என் தகப்பனர் என் அபிப்பிராயத்துக்குச் செவி சாய்த்திருந்தால் என் நிலைமை இப்படிப் பிறர் பார்த்துச் சிரிக்கும்படி இருக்குமா!

"என்னடா உளறுகிறாய்! யாருக்குக் கல்யாணம் என்றால் 'எனக்குத்தான்' என்கிறாய்! குத்தாலம் ஸ்டேஷன் பிளாட்பாரத்திலே கல்யாணங்கள் கூட நடக்குமா!" என்றான் சுப்புடு.

"நான் சொல்லுவது அப்படித்தான் இருக்கும். விவரமாகச் சொல்லுகிறேன்; டிக்கட்டை வாங்கிக் கொண்டு வா. ஆமாம்; நீ எங்கே போகக் கிளம்பினாய் இப்போது!" என்றேன்.

"கும்பகோணம் மூன்று டிக்கட்" என்று சொல்லிப் பணத்தை எண்ணி வைத்தான் சுப்புடு. அவனுடன் பிளாட்பாரத்துக்கு வந்து கொண்டிருக்கும்போது விளக்குக் கம்பத்தடியில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவரும் அவரருகில் 'அப்ஸரஸ்' போன்ற ஒரு யுவதி உட்கார்ந்து கொண்டிருப்பதையும் கண்ணுற்றேன். பார்த்தவுடன் பரவசமடையச் செய்யும் அவள் எழிலில் மயங்கி ஒரு கணம் நின்றேன்.

"ஏண்டா. பழி! என் தங்கையைப் பார்த்ததும் அப்படியே சொக்கி விட்டாயே!" என்று என் காதருகில் மெதுவாகக் கூறிய சுப்புடு, "இதோ இவர்தான் என் தகப்பனர்" என்று அந்தப் பெரியவரைச் சுட்டிக் காட்டினன். நான் கரங்குவித்து "நமஸ்காரம்" என்றேன். அவன் தன் தகப்பனரைப் பார்த்து, "அப்பா! கல்லூரியில் படிக்கும்போது அடிக்கடி நான் பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பேனே—அந்த அரட்டை குப்புசாமி இவன்தான்! இப்போது கிரிமினல் லாயர். இவனுக்கு ஏற்ற தொழில்தான்!" என்று என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

வண்டி வந்ததும் அவர்களுடன் நானும் அதே பெட்டியில் ஏறிக் கொண்டேன்.

"யாருக்கோ கல்யாணம் என்று சொன்னயே—யாருக்கு!" என்றன், சுப்புடு.

"எனக்குத்தானப்பா, எனக்கேதான்! இன்று நடக்கவிருந்தது. ஆனல் தற்செயலாக நின்று விட்டது. உன் விலாசம் தெரிந்திருந்தால் பத்திரிகை அனுப்பி யிருப்பேன். தவிரவும், எனக்கு இதில் இஷ்டமேயில்லை. ஆகையால்தான்......" சொல்லிக் கொண்டே வரும்போது அந்தப் பெண்ணும் என்னையே கூர்ந்து கவனிப்பதைக் கண்ணுற்றேன்.

"அப்படியானல் நீ சொன்னதெல்லாம் வாஸ்தவமா! காலேஜில் படிக்கும்போது 'நிஜம்போலவே' பேசுவாயே, அந்த நீதியில் இருக்குமோ வென்று நினைத்தேன் முதலில். சரி, ஏன் கல்யாணம் தடைப்பட்டது! பெண் யார்! எல்லாம் விவாமாகச் சொல்லேன்" என்றான் சுப்புடு.

அவனிடம் சொல்லக் கூடாத ரகசியமென்னவிருக்கிறது! எந்த இடத்தில், எப்படி ஆரம்பிப்பது என்பதுதான் என் பிரச்னை. மனக அவ்வளவுக்குக் குழம்பி யிருந்தது சமீப நிகழ்ச்சிகளால். ரயில் தண்டவாளத்தைப் போல் என் சிந்தனையும் நீண்டு கொண்டே போயிற்று.

** ** **

"ஏண்டாப்பா! மங்களத்தின் பெண்ணுக்கு என்ன குறைச்சல்! கிளிபோல இருக்கிறாள்" என்றாள் என் தாயார்.

"ஒரு குறைச்சலுமில்லை. நான்தான் கிளிக்கூண்டாக மாற விரும்பவில்லை. கிளியை அதன் இஷ்டம்போல உல்லாசமாகப் பறக்க விடலாமே என்று தான் சொல்லுகிறேன்" என்றேன் நான்.

"ரொம்பப் படிச்சவன் நீ. விதண்டாவாதமாகவே பேசறே. எனக்கு அப்படியெல்லாம் பேசத் தெரியுமா! உனக்கு நல்லது என்று எண்ணித்தான் சொல்லுகிறேன். நிறையச் சொத்து இருக்கிறது. ஜானகியும் கண்ணுக்கு லட்சணமாயிருக்கிறாள். இன்னும் என்ன வேண்டும்!" என்று கேட்டாள் அம்மா.

கண்ணுக்கு லட்சணமா யிருக்கிறளாம்! யார் இல்லையென்றது! என் மனக ஏற்றுக் கொண்டால் தானே! சொந்தத் தமக்கையின் பெண்ணை மணந்து கொள்ள விருப்பமில்லை யென்று எவ்வளவோ மறுத்துக் கூறிய போதிலும், அம்மா எப்படியாவதுஎன் மனசை மாற்றிவிடத் துடித்தாள்.

"ஆமாம், அவன் ரொம்பப் பெரிய மனுஷன்; அவனைப் போய்க் கேள்! இந்தக் காலத்துப் பசங்களைப் போலப் பேசுகிறான். கடைசியிலே எல்லாம் சரியாய்ப் போய் விடும். நீ போய் வேலையைக் கவனி!" என்று அம்மாவுக்கு உத்தரவிட்டார், என்னுடைய தகப்பனர்.

என் அபிப்பிராயத்துக்குச் சிறிதும் மதிப்பே வைக்காமல் தமக்குத் தோன்றியதை விடாப் பிடியாகச் சாதித்துக் கொள்வது அப்பாவுக்கு நெடுநாளைய வழக்கம். அதை என் கல்யாண



விஷயத்திலும் அவர் அநுஷ்டிப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

''அவன் 'சரி' யென்று ஒரு வார்த்தை வாய் விட்டுச் சொல்லி விட்டால் நமக்குத் திருப்தியாயிருக்குமே!'' என்றாள் அம்மா.

''சொன்னால் தானாகும்! இஷ்டப்படாமலா திருச்சியிலிருந்து வந்திருக்கான்! திரும்பத்திரும்ப இதையே அவனிடம் பேசிக் கொண்டிருப்பானேன்! நாளைக்குச் சுமங்கலிப் பிரார்த்தனை; நீ போய் ஆகவேண்டியதைக் கவனி'' என்றார். என் முகத்தையே பார்த்த வண்ணம் நின்றாள் அம்மா.

''இஷ்டப்பட்டு வரவில்லை, அப்பா! இஷ்டமில்லையென்பதைத் தெரிவிக்கத்தான் வந்தேன். நேரில் வந்து சொல்லியாவது இதை நிறுத்தி விட முடியுமாவென்று பார்க்கத்தான் வந்தேன்'' என்று அழுத்தமாகவே கூறினேன். அப்பாவின் முகத்தில் கோபக் கனல் வீசியது.

''உன் நன்மையை உத்தேசித்துத்தான் சொல்லுகிறேன். வீணாக ஏன் தர்க்கம் செய்கிறாய்! இந்தச் சாமர்த்தியத்தை உன் தொழிலில் காண்பித்தாலாவது பிரயோசனமுண்டு'' என்று கர்ஜித்தார் என் தகப்பனார்.

'என் நன்மை' என்று அவர் கூறியது சரியல்ல. என் அக்காவின் கணவருக்குச் சமீபத்தில் ஓர் அதிர்ஷ்டம் அடித்தது. அவருடைய ஒன்று விட்ட அத்தை ஒருத்தி சமீபத்தில் கண்ணை மூடியதன் விளைவாக, அவளுக்கிருந்த ஏழு வேலி நிலம் அத்திம்பேர் கைக்கு வந்தது. அத்திம்பேருக்குப் பிள்ளைக் குழந்தை யில்லை. இரண்டே பெண்கள் தாம். ஜானகிதான் இளையவள். இனிமேல் பிறந்தால்தான் உண்டு. அந்த நிலத்தின் மீதுதான் அப்பாவுக்குக் கண். மாப்பிள்ளையின் சொத்து நம் குடும்பத்தை விட்டு வெளியே போய் விடக் கூடாது என்பதுதான் அம்மாவின் ஆசையும். ஆனால் ஜானகியை நான் என் தங்கைபோலவே பாவித்து வந்திருக்கிறேன், அது வரை. எனக்கும் அவளுக்கும் வயதில் அதிக வித்தியாசம்! நான் உயர்தரப் பள்ளியில் படிக்கையில் விடுமுறையின் போது அத்திம்பேர் வீட்டுக்குப் போகும்போதெல்லாம் ஜானகியை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு விளையாட்டுக் காண்பித்திருக்கிறேன். அதே ஜானகியை இன்று என் மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இதை அப்பா உணர்ந்தால் தானே!

''என் நன்மைக்காக நீங்கள் செய்யக் கூடிய காரியம் இந்தக் கல்யாணத்தை எப்படியாவது நிறுத்தி விடுவது ஒன்றுதான்'' என்று நான் துணிச்சலுடன் கூறி விட்டேன்.

''பேஷ்! உன் புத்தி விதானத்தை விழுந்து விட்

டதா, என்ன! நாளை எட்டாம் நாள் கல்யாணம். இன்று நீ கட்சி பேசுகிறாய் என்பதற்காக நிறுத்தி விட முடியுமா! ஞானியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கசக்கிறதாக்கும்" என்று சீறினார் அவர்.

கசப்பும் இனிப்பும் அவரவர்களுடைய மனப் பான்மையைப் பொறுத்த விஷயந்தானே! இந்தச் சாதாரண விஷயம் என் அருமை அப்பாவுக்கு ஏனோ தெரியவில்லை!

"சொந்த அண்ணா பெண்ணை யாராவது கல்யாணம் செய்து கொள்வார்களா! அப்படியானால் உடன் பிறந்த சகோதரியின் பெண்ணை மட்டும் எப்படிப் பண்ணிக் கொள்வது! தலைமுறை, தலைமுறையாக நமது சமூகத்தில் ஊறிப் போன பழக்கம் என்பதற்காக அது நியாயமாகி விடுமா! சாஸ்திரத்தில் விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்ற நியதிகூட, மிகவும் நெருங்கிய உறவினர்களுக் கிடையே விவாகம் நடைபெறக் கூடாதென்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டிருக்க வேண்டும். இதுவரை தங்கையென்று பாவித்துப் பழகி வந்திருக்கிற ஞானியை, இன்று நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றால்—அந்த மனமாற்றம் அவ்வளவு எளிதில் முடிகிறதாயில்லை. மேலும், ஞானி உலக மறியாதவள். அவளுடைய விருப்பம் என்ன என்பதும் யாருக்கும் தெரியாது. எல்லாவற்றையும் யோசிக்கும்போது இந்தக் கல்யாணம் அவ்வளவு சிலாக்கியமாய்ப் படவில்லை, எனக்கு" என்று என் மன நிலையைத் தெளிவுப் படுத்திக் கூறினேன்.

என் பதிலைக் கேட்டு அவர் திருப்தியடைய வில்லை. அதற்குப் பதில் அவருடைய கோபம் தான் அதிகரித்தது.

"சித்தமல்லி ஜோசியரே பார்த்துச் சொல்லி விட்டார், பேஷான பொருத்தம் என்று. அவர் வாயால் சொன்னது நானறிந்தவரையில் வீணானதில்லை. 'இந்தப் பெண்தான் இந்த ஜாதகனுக்கு' என்று அவர் சொன்னப் பிரகாரமேதான் நடக்குமே யொழிய நீ வீணாகக் கட்சி பேசி எங்கள் மனத்தைப் புண்படுத்துவதில் பிரயோசனமில்லை" என்று அவர் கூறியதைக் கேட்ட பிறகும் என் உறுதி தளராததைக் கண்டு அம்மாவுக்கு அழுகையே வந்து விட்டது.

எதற்கும் கட்டுப்படாத என் சுபாவம் அம்மாவின் கண்ணீருக்கு முன் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடும். தவிர என் தகப்பனாரிடம் எந்த விஷயம் பற்றியும் வாதாடலாம். ஆனால் சோதிடத்தில் அவருக்குள்ள நம்பிக்கைக்கு எதிராக ஒரு வார்த்தைகூட யாரும் பேசிவிட முடியாது. 'ஈசுவரன் விட்ட வழி' என்று அதோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன்.

** ** **

ஞானவாச ஊர்வலம் முடிந்து விட்டது. தஞ்சாவூரிலிருந்து வந்திருந்த 'பாண்டு' கோஷ்டி வெளுத்து வாங்கி விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். 'குண்டு' நாராயணன் சமையல் என்றைக்குமே பலே ஜோர் என்று சாப்பாட்டைப் பற்றி ரஸித்தனர் சிலர். அம்மாவும்—அப்பாவும் வெள்ளிப் பாத்திரங்களையும் புடவை துணிமணிகளையும் வேண்டியவர்களுக்குக் காண்பித்தும் பெட்டியில் திரும்ப வைத்துப் பூட்டுவதுமாக இருந்தனர். எதிலும் உற்சாகமின்றிப் பெயரளவுக்கு ஏதோ சாப்பிட்டுவிட்டு வாசற் பக்கம் எழுந்து வந்தேன். எதிர்வீட்டுத் திண்ணையில்—அதுதான் என் அத்திம்பேர் வீடு — ஒரு பெரியவர் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். ஆணும் பெண்ணுமாகப் பலர் அவருக்கு நமஸ்காரம் செய்து கொண்டிருந்ததைக் கண்டதும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. எதிர் வீட்டிலிருந்து எங்கள் ஜாகைக்கு வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்து வந்த ஒருவரை அழைத்து, "அந்தப் பெரியவர் யார்!" என்று விசாரித்தேன்.

அவர் இலேசாகச் சிரித்துவிட்டு, "என்ன மாப்பிள்ளை! தெரியாதா உங்களுக்கு! அவர்தான் உங்கள் அக்கா மாமனார். இன்றோடு அவருக்கு நூறு வயது பூர்த்தியாகிறது. பாக்யசாலி! ஒரு நோய் நொடியில்லாமல் வாழ்வில் யாதொரு குறையுமின்றி நூறு வருடங்கள் வாழ்ந்திருக்கிறார். நூறு வயதானால் பரமசிவனுக்குச் சமானம் என்று சொல்லுவார்கள். அத்தகைய ஒரு பெரியவரின் ஆசீர்வாதம் லகுவில் கிடைக்கக் கூடியதா!" என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டார் அவர்.

நான் கடைசியாக அத்திம்பேர் வீட்டுக்குப் போனது எட்டு வருடங்களுக்கு முன்பு. அந்தத் தடவை பெரியவர் கிராமத்திலில்லாததால் நான் அவரைக் காண முடியவில்லை. ஆகவே அவரை உடனடியாக நான் அடையாளம் கண்டு கொள்ளாமற் போனது ஆச்சரியமில்லை. ஆனால் நான் அந்தத் திண்ணையை அணுகியதுமே அவர் என்னைத் தெரிந்து கொண்டு, "குப்புவா, வா! சௌக்கியந்தானே! கல்யாணமா! ரொம்ப சந்தோஷம். திருச்சியிலே 'வக்கீல் வேலை' எப்படியிருக்கிறது!" என்று விசாரிக்கத் தொடங்கியதும் எனக்கு ஒரே திகைப்பாயிருந்தது.

"சௌக்கியந்தான் மாமா!" என்று சுருக்கமாகக் கூறிவிட்டு அவரை நமஸ்கரித்தேன்.



"தீர்க்காயுசா இருக்கணும்!" என்று மனப்பூர்வமாக ஆசி கூறினார், நூறு வயது வாழ்ந்தவர். என் உள்ளத்துக்கு அந்த ஆசி மிகவும் ஆறுதலளித்தது. ஆயினும் என் நெஞ்சை அழுத்திய வேதனை மட்டும் நீங்கியபாடில்லை.

ஜானகியின் கல்யாணத்தை இரண்டு வருடங்களுக்காவது தள்ளிப் போட வேண்டுமென்று முதலில் அவர் அபிப்பிராயம் தெரிவித்ததாகக் காதில் விழுந்தது. அவர் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து 'ஓய்வுபெற்று'க் கிட்டத் தட்ட ஐம்பது வருடங்களாகப் பென்ஷன் வாங்கிக் கொண்டு வருகிறார். சர்க்கார் உத்தரவு, சட்டம் இவைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் அவருக்கு அலாதி மோகம்; பெருமைகூட. ஜானகியின் கல்யாணப் பேச்சை எடுத்ததுமே "சாரதா சட்டத்தை மீறிக் குழந்தைக்குக் கல்யாணம் செய்ய என்னடா அவசரம்! ஜானகிக்குப் பதின்மூன்று வயசு கூட ஆகவில்லையே!" என்று அத்திம்பேரிடம் சொன்னாராம். அந்தக் கடைசி நிமிடத்திலும் பெரியவரிடம் என் மனத்திலுள்ளதைக் கூறத் துடிதுடித்தேன். அவர் அபிப்பிராயத்தை அறிய விரும்பினேன்.

அருகிலிருந்தவர்கள் அங்கிருந்து கிளம்பியதும் பெரியவரிடம் மெதுவாக விஷயத்தைப் பிரஸ்தாபிக்கத் தொடங்கினேன்.

"மாமா! இந்தக் கல்யாண விஷயமாக உங்களிடம்......" என்று நான் ஆரம்பித்த போது, "குப்பு! நீ இங்கேயா இருக்கே!" என்று என்னைத் தேடி வந்து கொண்டிருந்தார் என் தகப்பனார்.

"காலை வரைக்கும் நீ இந்த வீட்டுக்கே வரக் கூடாது. நல்லகாலம், திண்ணையோடு நின்றாயே! உம், கல்யாணத்தன்றுதான் நீ மாமனார் வீட்டுக்குள் நுழையலாம்" என்று சொல்லி என்னை என் ஜாகைக்கு அழைத்தார்.

"இதோ வந்து விட்டேன், அப்பா!" என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன். பெரியவர் அப்போது என்னைப் பார்த்து, "எல்லாம் ஈசுவர சங்கல்பம்போல நடக்கும். நாமாக எதைச் செய்துவிட முடியும்! எதை நிறுத்திவிட முடியும்! கவலைப்படாதே போ. எல்லாம் சுபமாக முடியும்" என்று கூறினார்.

"அதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். கேட்க மாட்டேன் என்று ஏதேதோ உளறுகிறான். இப்போது நீங்கள் சொன்ன புத்திமதியாவது அவனுக்கு ஏற்கிறதா பார்க்கலாம்" என்று பெரியவரைப் பார்த்துச் சொல்லி விட்டு நகர்ந்தார், என் தகப்பனார். நானும் வேறு வழியின்றி அவரைப் பின் தொடர்ந்தேன்.

படுக்கையில் போய்ப் படுத்து ஒரு மணிக்கு மேல் ஆகியும் நித்திராதேவி என்னை நெருங்கப் பயந்தாள். மறுநாள் நான் வேறொரு தேவியின் கரம் பிடிக்க வேண்டியவனாயிற்றே என்று நினைத்தாளோ என்னவோ! திடீரென்று ஏதோ சப்தம் கேட்டது. சிலர் 'தட தட' வென்று இங்கு மங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். எதிர் வீட்டிலிருந்து "டிரைவரைக் கூப்பிடு" என்று பல குரல்கள் எழுந்தன. ஊர்வலத்துக்கு வந்திருந்த கார் தயா

# அரியதோர் இசை விருந்து!

ஈ. கிருஷ்ணய்யர்

ஜூன் 20உ திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் ஹாலில் ஸ்ரீ பார்த்தசாரதி சபையார் ஏற்படுத்தி யிருந்த மாயவரம் ராஜம் அய்யரின் கச்சேரியைக் கேட்டு மகிழ்ந்தேன். லயமும் குழைவும் கொண்ட சாரீரம் படைத்தவர். மேல் பஞ்சமம் வரை இரண்டு ஸ்தாயிகளில் தங்கு தடையில்லாமல் நினைத்தபடியெல்லாம் வெகு சரளமாய் உதவும் சாதகச் சிறப்புக் கொண்டவர். ஞான பாவமும் கற்பனைப் பொழிவும் வியக்க வைத்தன. உணர்ச்சியுடன் பாடினார். கேட்போரின் மனத்தில் உணர்ச்சியை எழுப்பினார். குரலில் அசாத்திய உதவியிருந்தாலும் அவரது சங்கீதத்தில் நல்ல பண்பீடு தென்பட்டது. ஒவ்வொரு கற்பனைப் பிடியும் தெளிவுடன் தனி பாணி யழகும் கொண்டிருந்தது.

ஆபோகி வர்ணத்துடன் தொடங்கிய கச்சேரி இறுதிவரை களைகட்டி ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்தது. கிருதி பாகத்தில் சாவேரி, ஸ்ரீரஞ்சனி, ஹரி காம்போதி, கல்யாணி ராகங்களை விரிவாயும் வனப்பு வடிவங்களாயும் சித்தரித்தார். அவைகளில் ஆங்காங்கே பிர்க்கா வேலைப் பாடுகளுடன் குளிர்ந்த கார்வைகளும், காலாக்கான கமக இழைப்புகளாலான அணியலங்காரங்களும் பொருத்தமாய் அமைந்திருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக கம்பித கமகப் பிரயோகங்கள் மனத்தை அள்ளின. அவ்வழகு, குறிப்பாய் கல்யாணியில் மேல் தூக்கி யிருந்தது. கிருதிகளும் அவைகளில் அமைந்த நிரவல் ஸ்வரப்ரஸ்தாரங்களும் லயப் பிடிப்புடன் கச்சிதமாயும் வின்யாசமாயு மிருந்தன. 'ஸொகஸுகா' கிருதியின் சங்கதி அடுக்குகளும் 'எந்தரா நீதனு' உருப்படியில் கோத்த நிரவல்களும் ராக பாவம் ததும்பிக் கனஜோராய் விளங்கின. பல்லவி ராகமான தோடியும் விரிவாயும் கோர்த்தியாயும் வெளி வந்தது. இறுதியில் கேட்ட சுருக்கமானதோர் ராக மாலிகையில், ரஞ்சனியும் மோஹனமும் வசீகரமா யிருந்தன. ராகங்களிலும் உருப்படிகளிலும் விழுந்த பல அபூர்வப் பிடிகள் கேட்போரை வியக்க வைத்துக் கரகோஷம் பெற்றன. மொத்தத்தில் மாயூரம் ராஜமய்யரின் கானம் பிருகவும் லய காலாக்கும், உணர்ச்சி யெழுப்பும் பாவமும் நிறைந்த அரியதோர் இசை விருந்தளித்தது.



மாயூரம் ராஜம்

சென்னை சேதுராமய்யா வயலினிலும், மைலாட்டூர் ராமச்சந்திரன் மிருதங்கத்திலும் திறம்பட பக்கவாத்தியம் வாசித்துக் கச்சேரியைப் போஷித்தார்கள்.

ராக எதிர்வீட்டு வாசலில் வந்து நின்றது. நான் எழுந்து வாசலுக்கு வந்தேன். விஷயம் பூராவும் ஒருவாறு விளங்கியது. திடீரென்று பெரியவருக்கு வயிற்றைக் குமட்டியது போலிருந்ததாம். அத்திம்பேர், சோடா வாங்கி வரச் சொல்லி ஆளை யனுப்பினார். சோடா வருமுன்பே கிழவருக்குப் பிரக்ஞை தவறி விட்டது. ஊர்வலத்துக்கு வந்த கார், டாக்டரை உடனே அழைத்து வர உதவியது.

நாடியைப் பரிசோதித்து விட்டுச் சூள் கொட்டினார், டாக்டர்.

"எப்படி யிருக்கு டாக்டர்!" என்றார் கவலையுடன் அத்திம்பேர்.

"விடிந்தால் முகூர்த்தமாயிற்றே! அதுவரை தாங்குமா!" என்றார் என் தகப்பனார்.

"காலையில் ஆறு மணிக்கு ஒரு முகூர்த்தம் இருக்கு. அதிலேயே வேண்டுமானால் தாலி கட்ட ஏற்பாடு பண்ணி விடலாம்" என்றார் புரோகிதர். அவரவர்கள் கவலை அவரவர்களுக்கு!

"என்னால் ஆகக் கூடியது ஒன்றுமில்லை. கிழவர் முகத்தைச் சரியாகப் பாருங்கள்" என்று சொல்லி விட்டு நகர்ந்தார், டாக்டர். அப்போதுதான் உண்மை விளங்கியது. கிழவர் மண்டையைப் போட்டு அரை மணிக்கு மேலிருக்குமென்று விஷயம் தெரிந்தவர்கள் விவரித்துக் கூறினார்கள். மங்கல ஒலி முழங்க வேண்டிய இடத்தில் அபஸ்வரமான ஓலந்தான் கேட்டது!

"நூறு வயசு இருந்ததே. இந்தக் கிழம்—இன்றைக்கா இப்படித் தலையைச் சாய்க்கணும்!" என்று அங்கலாய்த்தாள் ஒரு கிழவி.

"எல்லாம் ஈசுவர சங்கல்பம்போல் நடக்கும். நம் செயலில் என்ன இருக்கிறது!" என்று பெரியவர் சற்று முன்பு கூறிய வார்த்தைகள் என் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தன.

அப்பாவும் அம்மாவும் மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களுக்காகத் தங்கி விட்டனர்—சம்பந்தி என்ற முறையில். அப்பாவுக்குச் சித்தமல்லி ஜோசியரின் மீதிருந்த நம்பிக்கை அந்த நிமிடமே நசித்து விட்டது! இவ்வளவு பெரிய அபசகுனத்துக்குப் பின்னும் அவர் பிடிவாதம் தளராமலிருக்குமா! எனக்கு அங்கு என்ன வேலை! நான் கிளம்பி விட்டேன் — நூறு வயது வாழ்ந்த வரை மனமார வாழ்த்திய வண்ணம்.

** ** **

நான் திருச்சி வந்து சேர்ந்த ஒரு மாதத்துக்கெல்லாம் அப்பாவிடமிருந்து மூலையில் மஞ்சள் தடவப் பெற்ற ஒரு கடிதம் வந்தது.

"சி. குப்புவுக்கு, ஆசீர்வாதம். மாயவரத்திலிருக்கும் ஓய்வு பெற்ற தாசில்தார் ரகுபதியின் பெண்ணை உனக்கு நிச்சயித்திருக்கிறேன். இந்தத் தடவை நான் உன் அபிப்பிராயப்படித்தான் செய்யப் போகிறேன். நீ சௌகரியப்பட்டபோது வந்து பெண்ணைப் பார்த்து விடு. உனக்குச் சம்மதமானால் மேற்கொண்டு ஆகவேண்டியதைச் செய்கிறேன். நீ எப்போது வருகிறாய் என்பதைத் தெரிவிக்கவும். உன் அன்புள்ள, அப்பா."

நான் எழுத என்ன விருக்கிறது! ஓய்வு பெற்ற தாசில்தார் ரகுபதியின் பெண்ணை நான் இனிமேல் தானா பார்க்க வேண்டும்! அன்று குத்தாலம் ஸ்டேஷனில் பார்த்து உள்ளம் பூரித்த 'அப்ஸரஸ்' தான், அவள். ஆம், நண்பன் சுப்புடுவின் தங்கை! ஈசுவர சங்கல்பம் என்பதன் பொருள் அப்போதுதான் விளங்கியது எனக்கு.

# வட்ட மேஜை

## நெசவாளியின் குரல்

“ கைத்தறி நெசவாளர் நிலை உயர்த்தப்பட வேண்டும். அவர்களுக்காக சர்க்கார் பல லட்சக் கணக்கான ரூபாயை ஒதுக்கி யிருக்கின்றனர். நல்ல காலம் அவர்களை எதிர்நோக்கி நிற்கின்றது" என்று சென்ற ஏப்ரல் மாதத்தில் அகில இந்தியக் கைத்தறி வாரக் கொண்டாட்டத்தின் போது பேசிய யாவரும் இனிக்க இனிக்கப் பேசினர். அதைக் கேட்டு, கைத்தறி நெசவாளர்களாகிய நாங்களும் பரவசமடைந்தோம். ஆனால் இன்று, இரண்டு மாதங்களுக்குப் பிறகு, உண்மையில் எங்கள் நிலை உயர்த்தப்பட்டதா! எங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எங்களுக்காகச் செலவழிக்கப்பட்டதா! நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றதா என்ற ஐயப்பாடு இன்று ஒவ்வொரு கைத்தறி நெசவாளரின் உள்ளத்திலும் உதிக்கின்றது.

சென்ற ஏப்ரல் மாதத்தில் நிலவியிருந்த எங்கள் நிலைமைக்கும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு இன்று இருக்கும் நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் தாழ்ந்த நிலைமை தெளிவாகத் தெரியும். இப்பொழுது தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. சரக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. கூலி குறைக்கப் பட்டுவிட்டது. தறியைத் தொடர்ந்து நடத்துபவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் நூல் விலை உயர்வு ஒன்றே. கைத்தறித் துணி உற்பத்தியில் பிரதான பங்கு நூலுக்கு உண்டு. 3 கெஜம் அளவுள்ள துணியின் விலையில் 2 கெஜம் துணியின் விலை நூலாகவும், மீதி 1 கெஜம் துணியின் விலை சாயம், கூலி, லாபமாகவும் பிரிக்கலாம். ஆகவே நூல் விலையைக் கட்டுப்படுத்தாமல் கைத்தறித் துணிக்கு விமோசனம் தேட முடியாது.

மத்திய அரசாங்கத்தாரால் எங்களுக்கென ஒதுக்கப்பட்ட பல லக்ஷக்கணக்கான ரூபாயிலிருந்து இதுவரையில் நன்மை ஏதும் கிட்டியிருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே, இந்த நிதி தேய் பிறைச் சந்திரனைப் போலத் தேயத் தொடங்கி விட்டது.

கைத்தறித் துணிக்கு 0-1-6 விலையில் தள்ளிக் கொடுத்துக் கைத்தறித் துணி விற்பனையை அதிகப்படுத்தியதன் மூலம் கைத்தறியாளர்களுக்குப் பலன் கிட்டவில்லையா என்று சிலர் நினைக்கக் கூடும். இந்த அபிப்பிராயம் தவறு. ஏனெனில் அந்தத் தள்ளுபடி தொகையை அனுபவித்தவர்கள் வியாபாரிகள். தள்ளுபடிச் சலுகை கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்குப் பாதகம் தேடிவிட்டது. மேற்படி சலுகை கொடுப்பதை மீண்டும் சர்க்கார் அமுல் செய்ய வேண்டும் என்று வியாபாரிகள் விரும்புகின்றனர். அதனால் தான் அவர்கள் இப்பொழுது கைத்தறித் துணியை வாங்க முன் வரவில்லை. ஆனால் கைத்தறி நெசவாளர்களாகிய எங்களுக்குக் கைத்தறித் துணி விற்பனையானால் தான் வாழ்வு. ஆகையால் இந்த நிதி கைத்தறியாளர்களின் வளர்ச்சிக்குப் பயன்பட்டதாகக் கூற முடியாது.

இந்த நிலைமையில் கைத்தறியாளர்களின் எதிர்காலம் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. நூல் விலை ஏற்றத்தாலும் துணி விலை வீழ்ச்சியினாலும் துணித் தேக்கத்தாலும் நெசவுத் தொழில் பாதிக்கப்பட்ட இந்த அவல நிலையைப் போக்கக் கைத்தறியாளர் நிதியைப் பயன்படுத்தி நூல் விலையைக் கணிசமாகக் குறைத்து எங்களுக்கு நம்பிக்கை ஊட்ட சர்க்கார் முன்வர வேண்டும்.

குடியேற்றம்
15—6—54 ஏ. ஏ. கோவிந்தராஜன்

★

## எங்கே விற்கிறார்கள்?

எழுதும்பொழுதே சிரிப்பு வருகிறது. சின்னக் குழந்தையிடம் உனக்குச் சிங்கார நடை போடத் தெரியுமா என்று கேட்டால் எப்படியிருக்கும்!

நான் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவன்; டைப்ரைட்டிங் ஹையர்கிரேட் பாஸ் செய்தவன். மேல் படிப்பு தொடர முடியாதவன். ஆகவே வேலை தேடும் படலத்தில் மும்முரமாக இறங்கினவன்.

வேலைக்காக 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்'சின் உதவியை நாடினேன். 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்'சில் என்னையும் சிலரையும் அநேக முறை, அநேக இடங்களுக்கு, பாழாய்ப் போன 'இண்டர்வியூ'வுக்கு அனுப்பினார்கள். போனேனும். முதலில் எழுதியிருக்கிறபடிதான் அங்கே எல்லாம் கேட்டார்கள்.

முதற் கேள்வியாக "முன் அனுபவம் உண்டா!" என்றுதான் எல்லா இடங்களிலும் கேட்கிறார்கள். முதலில் ஏதேனும் ஓர் இடத்தில் வேலை கொடுத்தால் தானே வேலை தேடுபவனுக்கு முன் அனுபவம் உண்டாகும்! ஆகவே முன் அனுபவம் இல்லாததினால் என்னைப் போன்றவர்கள் முகத்தில் கரி பூசப்பட்டு வெற்றிகரமாகத் திரும்ப வேண்டியிருக்கிறது வேலையில்லாமல்.

பள்ளியிலிருந்து வெளியே வந்து பசி தீர வேலை தேடும் என்னைப்போன்ற இளம் வாலிபர்களிடம் முன் அனுபவம் உண்டா என்று கேட்டால் அது என்ன சந்தையில் விற்கும் சரக்கா, பொட்டலம் போட்டு வாங்கி வர!

இந்த மாதிரியான கேள்விகள் ஒழிய வேண்டும், அல்லது முன் அனுபவம் விற்கும் இடத்தை என்னைப் போன்றவர்களுக்குக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு வேலை உண்டு, வாழ்வு உண்டு.

திருநெல்வேலி
16—6—54 தி. சா. வெங்கடராமன்

★

## போட்டி விளம்பரங்கள்

தற்பொழுது எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் போட்டியைப் பற்றிய விளம்பரங்களாகவே இருக்கின்றது. பிரபல பத்திரிகையிலிருந்து சாதாரண பத்திரிகை வரைக்கும் இந்தப் போட்டி இருக்கின்றது. சில பத்திரிகைகள் தங்கள் சொந்தப் போட்டியை விளம்பரப் படுத்துகின்றன. மற்ற சில பத்திரிகைகள் பணத்துக்கு ஆசைப்பட்டு மற்ற கம்பெனிகளுடையதை விளம்பரங்கள் செய்கின்றன. பத்திரிகைகள் மக்களுக்கு நன்மை செய்வதை விட்டு விட்டு இப்படி மக்களைத் தீய வழிக்கு இழுத்துச் செல்கின்றன.

மேற்கண்டவைகளுக்கு நேர் எதிரிடையாகக் 'கல்கி' ஒன்றுதான் இருக்கிறது. நானும் பல வருடங்களாகச் சேர்ந்தாற்போல் 'கல்கி' யைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். ஒரு இதழிலாவது போட்டி விளம்பரத்தை நான் பார்த்தது கூடக் கிடையாது. மக்களைப் போட்டிகளினின்றும் விடுவிக்கப் பாட்டுக்களாகவும், கார்ட்டூன்

களாகவும் 'கல்கி'யில் வெளியிட்டுத் தீய வழி களில் இறங்காமல் செய்கிறது. மக்களுக்கு உதவி புரியும் 'கல்கி' நீடூழி வாழ்க!

பாளையங்கோட்டை
20—6—54 எஸ். கிருஷ்ணன்

[தங்களுடைய வாழ்த்துக்கு வந்தனம். போட்டிப் பந்தயங்களையும் விளம்பரங்களையும் வெளியிடுவதைச் சர்க்கார் சட்டம் எதுவும் தடைசெய்யவில்லை. ஆகையால் மேற்படி பந்தயங்களையும் விளம்பரங்களையும் வெளியிடும் மற்றப் பத்திரிகைகளை நாம் குறை கூற முடியாது. —ஆசிரியர்.]

★

## கவனக் குறைவு

நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை 51-ம் வருஷம் மார்ச்சு மாதம் எழுதினேன். ஆங்கிலத்தில் போதிய மார்க் இன்மையால் தவறிவிட்டேன். பிறகு 51-ம் ஆண்டு அக்டோபரில் எழுதினேன். அப்பொழுதும் ஆங்கிலத்தில் மார்க்குக் குறைவு தான். 53-ம் வருஷம் மார்ச்சில் எழுதினேன். அதிலும் தோல்வியுற்றேன். நானும் சர்டிபிகேட்டை வாங்கி ஒருபுறம் வைத்துவிட்டுக் கொழும்புக்கு வந்து விட்டேன். 24—1—54-ல் எஸ். எஸ். எல். ஸி. பாஸாகி விட்டது. "உன்னுடைய சர்டிபிகேட்டை அனுப்பு" என்று ஆபீஸிலிருந்து கடிதம் வந்தது.

நான் அனுப்பினேன். திரும்பி வந்தபொழுது, மார்க்கைப் பார்த்தேன்.

| | 53-ல் | திரும்பிய மார்க் |
| --- | --- | --- |
| ஆங்கிலம் | 27 ... | 43 |

ஆங்கிலத்தில் 16 மார்க் குறைத்துப் பதிவு செய்து இருக்கிறார்கள். அதனால் எவ்வளவு கவனக் குறைவுடனும் பையன்களின் வாழ்க்கையைப் பாதிக்குமே என்று சிறிதும் சிந்திக்காமலும் பதிவு செய்கிறார்கள். இப்படிச் செய்ததினால்தான் முதலில் நான் தோற்றதாக அறிவிக்கப் பட்டிருந்தது. 20—6—54 'கல்கி'யில் என் சகாக்களைப் பற்றி எழுதி யிருந்தீர்கள். நானும் அப்படி வாழ்நாளை வெறுக்க எத்தனித்தேன். ஒரே ஒரு அன்பு வார்த்தையால் என்னை எல்லாக் கவலைகளையும் மறக்கச் செய்து விட்டார் என் அப்பா.

கொழும்பு
19—6—54 எஸ். பி. பழனி

★

## திரையில் கல்யாணம்!

இப்பொழுது திரையிடப்பட்டு வரும் தமிழ்ப் படங்களுள் பெரும்பாலான படங்களில் கலியாணக் காட்சி வராத படங்களே கிடையாது. அப்படிக் கல்யாணக் காட்சியைக் காட்டுவதில் தான் அந்தப் படம் பிடிப்பவர்களுக்கு எவ்வளவு சிரத்தை! உண்மையான கலியாணக் காட்சிகூடத் தோற்றுப் போகும்படி மணப் பந்தலை அலங்கரிக்கிறார்கள். அக்கினி வளர்த்தல், மந்திர உச்சாடனம், கெட்டி மேளம் எல்லாவற்றுக்கும் மேலாக அந்தத் தாலி கட்டும் காட்சி இருக்கிறதே அது அபாரம்! நிஜக் கலியாணங்களில் கூட மணமகன் இவ்வளவு பக்தி சிரத்தையாக "மாங்கல்ய தாரணம்" செய்வார் என்று கூற முடியாது. ஈகவர இருப்பை, அக்கினி சாட்சி, மாலை மாற்றல், பெரியோர்கள் ஆசீர்வாதம் எல்லாம் மிகவும் எதார்த்தமாகவே நடத்துகிறார்கள்.

ஒரு நடிகர் எத்தனை நடிகைகளின் கழுத்தில் தாலி கட்டுகிறாரோ! ஒரு நடிகை எவ்வளவு

நடிகர்களிடம் தாலி கட்டிக் கொள்கிருரோ! பாவம்! இதிலிருந்து இந்த நடிக, நடிகைகளுக்குத் தாலி கட்டுவதும், மண வினையும் சர்வ சகஜமாகி விட்டிருக்கும்! இவர்களுக்கு மணவினையும் ஒரு நடிப்புக் காட்சியாகி விட்டிருக்குமே!

இந்து தர்மத்தில் மணவினை, அதிலும் 'மாங்கல்ய தாரணம்' ஒரு புனிதமான சம்பவமாகும். அதை இந்துக்கள் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றி வந்திருக்கிருர்கள். அந்த மதிப்பும் புனிதத் தன்மையும் ஏன் இப்படித் திரைப் படங்களின் மூலம் சீரழிய வேண்டும்!

இதிலிருந்து மணவினையின் பெருமைக்கே இழுக்கு ஏற்படுகிறது அல்லவா!

தாலி கட்டுகிற ஒரு காட்சியை மட்டுமாகிலும் கொஞ்சம் மறைமுகமாகக் காட்டினால் என்ன! அந்தக் காட்சியைக் காட்டாமலேயே தம்பதிகளாகி விட்டார்கள் என்பதைக் காட்ட முடியாதா!

சென்னை
19-6-54 கே. ஜயலக்ஷ்மி

★

## மாருத கருத்து

ஜூன் மாதம் இருபதாம் தேதி 'கல்கி' இதழில் தேர்வு முறை என்ற தலையங்கத்தின் கீழ் முப்பத்தி ஒன்றாம் பக்கத்தில் உள்ள தங்கள் குறிப்பைப் படித்தேன்.

பரீட்சை என்னும் படுபாதகத்தைப் பற்றிய தங்களது புரட்சிகரமான கருத்து ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக மாருமல் உள்ளது என்பது முற்றிலும் உண்மையே.

"யார் எழுதுகிருர்!" என்ற கேள்வியைப் போடாமல் தங்களது எழுத்துக்களைப் படிப்பவர்கள் கண்டிப்பாக இதை உணருவார்கள்.

ஒருவேளை 'கல்கி' எழுதுகிருரே என்பதற்காகச் சிலருக்குக் கசக்கலாம். அவர்களைப் பற்றி நமக்குக் கவலை யில்லை.

விஜயவாடா
20—6—54 கே. சி. லட்சுமிநாராயணன்

★

## உரம் விற்பனை

சிந்திரி உர வியாபாரம் நடந்த சுமார் ஆறு மாதங்களுக்கு அதிகமாக சர்க்கார் இடையூறின்றி இருந்தது. எல்லா வியாபாரிகளும் தருவித்துப் போட்டா போட்டியில் சொற்ப லாபத்துக்கு விற்று வந்தார்கள். அநேகர் சொற்ப லாபத்துக்கும் விற்க முடியாமல் நஷ்டத்துக்கும் வாடிக்கைக்காரர்களான விவசாயிகளுக்குக் கடனுகவும் விற்று வந்தார்கள். எல்லா விவசாயிகளுக்கும் அவர்களின் வாடிக்கைக்காரர்களிடம் கடனுக வாங்கவும் வசதி இருந்தது.

இப்படி நடந்து வந்த வியாபாரத்தில் சர்க்கார் தலையிட்டார்கள். தாலுக்காவுக்கு ஒரு வியாபாரி வீதம் நியமிக்கப் போவதாகத் தெரிவித்தார்கள். சமீப காலங்களில் உர உப்பு விவசாயிகளுக்கு அத்தியாவசியமான, ஒரு தேவையுள்ள பொருளாகி விட்டது. ஆகவே வியாபாரிகள் தங்களுக்கு எப்படி, யாரைப் பிடித்தால் கிடைக்கும் என்று பார்த்துச் சிபாரிசுக்குப் போவதுடன், எப்படியாவது இதில் ஒரு ரூ. 5000 செலவாகி விட்டாலும், ஒரே வியாபாரியாகையால் தாம் இரண்டு மாதத்தில் செலவழித்ததைப் பார்த்து விடலாமென்ற நோக்கத்தில் போட்டி போட்டார்கள்.

ஒரு சில அதிர்ஷ்டசாலிகளுக்குக் கிடைத்தது. (அதிர்ஷ்டசாலிகள், ரூ. 2500, 3000 செலவுசெய்து தான் அதிர்ஷ்டத்தைப் பெற்றதாகச் சொல்கிருர்களாம்.) கிடைத்த அதிர்ஷ்டசாலிகள் தற்சமயம் மூட்டை ஒன்றுக்கு மூன்று ரூபாயிலிருந்து நான்கு ரூபாய் வரை கறுப்பு மார்க்கெட்டில் விற்கிருர்கள். சீசன் வந்ததும் மூட்டை ஒன்றுக்கு பத்து ரூபாய் வீதம் பார்த்து விடலாமென்று திடமாக இருக்கிருர்கள். காரணம், ஒரு நபரிடம் தான் உரம் உள்ளது. அவர்கள் எப்படியும் கறுப்பு மார்க்கெட்டில் விற்பார்கள்.

இவ்வித கறுப்பு மார்க்கெட்டுக்கும், லஞ்ச ஊழலுக்கும் சர்க்கார்தான் காரணமென்றால், என் போன்ற ஒரு காங்கிரஸ்காரனுக்கு வெட்கமாக உள்ளது.

இவ்வித மானக்கேடான முறைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். மத்திய சர்க்கார் சர்க்கரை 'டெண்டர் பாரம்' கேட்டு எல்லா இடங்களுக்கும், யார் கேட்டாலும் கொடுக்கிற மாதிரி கொடுத்தால், வியாபாரிகளிடையே போட்டா போட்டி ஏற்பட்டு, வரைமுறைந்து, மூட்டை ஒன்றுக்கு எட்டணு லாபத்தில் விற்பார்கள். விவசாயிகளுக்கும் சர்வ வினியோகமாகும். இதைச் சர்க்கார் செய்வதன் மூலம், கறுப்பு மார்க்கெட்டும் ஒழியும். இதன் மூலம் லஞ்சமும் ஒழியும்.

கோவில்பட்டி
20-6-54 பி. கே. சூரியநாராயணன்

# அவர் உபதேசம்



பி.வி.ஆர்

செல்லம்மா போன பிறகு விட்ட இடத்தில் நினைவுப் பந்தலை விரிக்க ஆரம்பித்தேன். நினைக்க நினைக்க என்னுடைய நிலையை நானே நம்ப முடியவில்லை, நெருங்கிய பந்துவின் மரணத்தைக் கண்டும் நம்ப முடியாததைப் போல. நம்ப முடிந்ததோ முடியவில்லையோ, உண்மையாக நிகழ்ந்து விட்ட நிகழ்ச்சி மனதில் இடம் பெறாமற் போய்விடுமா?

நினைவுப் பந்தலில் எட்டுக் கால்கள், முதல் காலிலிருந்து நாலாவதுவரை எல்லாம் ரம்யமாகத் தோன்றின. இல்லற வாழ்வின் இன்ப நாட்கள், வெதும்பும் நிலையில் கூடக் கார் வானத்தின் வில்லாகத்தானே தோன்றுகின்றன! ஆனால் அந்தக் கணநேர இன்ப உணர்ச்சி அடுத்த கணத்தில் முன்னாகக் குத்துகையில், துன்ப நினைவுகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம் என்ற உண்மைதான் மேலெழுகிறது. துன்பத்திற்கு ஆறுதலுண்டு. ஆனால் குலைவுண்ட இன்பத்துக்கு ஆறுதல் ஏது?

"உடைகள் உள்ள பீரோவை உங்கள் அறைக்குக் கொண்டு வரலாமா?" என்று கேட்டாள் சமையல்காரச் செல்லம்மா.

எனக்கு என்ன சொல்லுவது என்று புரியவில்லை. அவளையே ஒரு கணம் வெட்ட வெளியை ஆராய்வது போலப் பார்த்தேன். அந்த ஒரு கணத்தில் பழைய பழைய நாட்களெல்லாம் என்னுள் ஓடியோடிப் போயின. ஒன்றிலிருந்து ஒன்றாக, சங்கிலி சங்கிலியாக நினைவு ஓடுகையில் எப்படிப் பேச எழும்?

"உ....ம்... என்ன கேட்டாய்?"

"அதுதான் உடைகள் வைத்திருக்கும் பீரோ. உங்கள அறைக்குக் கொண்டு வரலாமா என்று கேட்டேன்" என்று செல்லம்மா கூறினாள். அவள் குரலில் ஒரு அழுத்தம். இரண்டாம் முறை சொல்ல வேண்டியிருக்கிறதே என்ற வெறுப்பு.

முகத்தைப் பார்த்தேன். ஈரமற்ற உதடுகள் குவிந்து இருந்தன. அவள் என்னையே வெறிச்சென்று பார்த்த வண்ணம் நின்றாள்.

"எனக்கு இனிமேல் எதற்கு அது?"

"சொன்னாத்தானே தெரியும்!" அதிகாரத்தின் சாயைகூட அவள் குரலில் தொனித்தது. நேற்றையவரையில் தலைநிமிராதவள், ஒரு தடவை உரக்கப் பேச ஆயிரம் தடவை யோசிப்பவள் எப்படி மாறி விட்டாள்? காலத்தின் போக்கில் பிறக்கும் மாறுதல்களை உணருகையில், கண்கூடாக அனுபவிக்கையில் இரத்தம் எப்படிக் கொதிக்கிறது?

நான் ஒன்றும் பேசவில்லை. பேசத் தோன்றவில்லை. சுருள் சுருளாகக் குவிந்து குவிந்து கிடக்கும் புகைக்கு வெளியே சுவாலையின் முழு உருவமும் எப்படித் தெரியும்?

மணியைப் பார்த்தேன், ஒன்பது அடித்து விட்டது; வயிறு இரைந்தது, 'எதையாவது அள்ளிப் போடு!' என்று. ஆனால் வாய்க்கு ஒன்றுமே வேண்டியிருக்கவில்லை. சமையலறைப் பக்கம் போகவே பிடிக்கவில்லை.

"அவர் வர நேரமாய் விட்டது!" என்று இடையிடையே முணு முணுத்துக் கொள்ளுகையிலேயே, "அவர் எப்போது வந்தால் என்ன, சாப்பிட்டாலென்ன?" என்ற எண்ணங்களும் தோன்றின. இதெல்லாம் செல்லம்மாவின் பொறுப்பு என்றுதான் விட்டு விட்டேன்.

அவரை நினைக்கையிலேயே எனக்கு அவரைப் பற்றி எல்லாம் புதுமையாகத் தோன்றின. எட்டு ஆண்டுகளாகப் பார்த்துப் பார்த்துப் பழகிப் போன அவருடைய பழமையில் எனக்கு ஏனோ புதுமை உதயமாகி விட்டது. நாளைக்கு அவர் யாரோ? நான் யாரோ? அவருடைய மனைவியாக இருந்தவள் நான், என்ற எண்ணம் நாளைக்கு எழும்போது, அது எத்தகைய உணர்ச்சியைக் கிளப்பி விடும்? அதை நினைக்கையில் எனக்கே அர்த்தமில்லாமல் சிரிப்பு வந்தது. கணவனைப் பிரிந்து போவது என்பது என்ன வெறும் இடம் பெயருவது போலவா?

உட்கார்ந்திருக்கையிலேயே கூடத்தில் இருந்த அலமாரி என் கண்ணில் பட்டது. எவ்வளவோ ரகம் ரகமான புஸ்தகங்கள்.

உம். இவருடைய தத்துவ ஆராய்ச்சி கடைசியில் என்னையா குலைக்க வேண்டும்?

அலமாரிப் புஸ்தகங்களை யெல்லாம் கட்டுச் சாம்பராக்கி விடலாமா என்ற எரிச்சல் தான் உண்டாகியது. எல்லாம் விஷக் காகிதங்கள்! விஷ எழுத்துக்கள்!

அலமாரிக்கு மேலே ஒரு பெரிய படம். கூர்மையான மூக்கும், பெரிய விழிகளுமாக, அடர்ந்த புருவங்கள் நன்றாகத் தெரிய அவர் புன்முறுவலித்துக் கொண்டிருந்தார். சிறிய உதடுகளின் இனம் சிரிப்புடன் சற்றுத் தாழ்ந்த பார்வையுடன் துடைத்து விட்டாற் போன்ற பளிங்கு முகத்தோடு நான் அருகில் இருந்தேன். அலமாரியும் படமும் ஒரே இடத்தில் எப்படிப் பொருத்தமற்று விளங்குகின்றன?

படத்தைப் பார்த்த போது, படம் எடுத்த நாள் நினைவுக்கு வந்தது.

"புஷ்பா!......இன்றைக்குச் சரியாக ஒரு வருஷம் ஆகிறதல்லவா, நமக்குக் கலியாணமாகி?" என்று அவர் கேட்டார்.

"ஆமாம்...நம் விவாக வாழ்க்கையின் இரண்டாம் பிறந்த நாள்......"

"இதன் ஞாபகார்த்தமாக......" என்று அவர் காரில் அழைத்துக் கொண்டு போனார். மறு நாள் பெரிய போட்டோ கூடத்தில் தொங்கியது.

மூன்றாவது பிறந்த நாளன்று இருவரும் உபயோகிக்கும்படியாக ஒரு பெரிய கருங்காலி மரத்தினால் செய்யப்பட்ட 'பீரோ'வை வாங்கினார். தகப்பனார் வைத்து விட்டுப் போன கரையாதசொத்து ஒவ்வொரு வருஷம் ஒவ்வொரு சின்னத்தைக் கொண்டு வந்தது.

சின்னங்களும் வருஷங்களும் நினைவில் தோன்றி மறைகையில், எட்டாவது ஆண்டு பிறந்த நாள் நினைவுக்கு வந்தது.

அன்றைக்கு, என் கணவர் "புஷ்பா...... நாளையிலிருந்து நீ எங்கு போவதானாலும் நடந்து தான் போகணும்......" என்றார்.

"ஆ... என்ன?"

"ஆமாம்......நமது மோட்டாரை விற்று விட்டேன்......"

"ஏன்?"

"நமக்கு எதற்கு மோட்டார்? சில அநாவசியங்களை அவசியங்கள் என்று நினைத்துக் கொள்ளுகிறோம். அது மாற வேண்டும்!"

"உங்களுக்கு......" என்று மேலே தொடர முடியாமல் தயங்கினேன்.

"பைத்தியம் பிடித்து விட்டது என்று தானே சொல்ல விரும்புகிறாய்?" என்று அவர் சொல்லிச் சிரித்தார்.

நாட்கள் சென்றன. தம்முடைய அறையில் ஒரு சிறு மேஜையையும் இரண்டு மூன்று நாற்காலிகளையும் தவிர, மற்ற சோபாக்களையும், மின்சார விசிறிகளையும் ஒதுக்கி விட்டார்.

"நீங்கள் செய்கிறது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை......" என்றேன்.

"புஷ்பா, இதில் புரியாமல் இருப்பதற்கு ஒன்றுமே யில்லையே? நல்ல காற்று இருக்கையில் மின்சார விசிறி எதற்கு? சோபா சோம்பேறித் தனத்தை அதிகமாக்கும் போதை!"

"நாளைக்கு 'நீயும் அவசியமில்லை' என்பீர்கள் போலிருக்கிறதே!" என்றேன்.

விளையாட்டு வினையாயிற்று. ஆனால் அதன் கருத்தை அன்று உணராத நான் அவருடைய போக்கை நாளா வட்டத்தில் உணர்ந்த போது, பைத்தியக்காரியாகி விட்ட நிலையில் இருப்பதைக் கண்டு கொண்டேன். என்ன விபரீதமான போக்கு, அவர் போக்கு? அவருக்கு உள்ளமில்லையா?—மனைவியின் உள்ளத்தை அறிந்துகொள்ளச் சக்தியில்லையா?—இவ்வளவெல்லாம் படிக்கிறார்...பேசுகிறார்... உலக விவகாரங்களைப் பல மேடைகளில் அலசுகிறார்......சொந்த விஷயத்தில் அவரது உள்ளக் கண் மூடிவிட்டதா?

என் மனசு நெகிழ நெகிழ அவர் மனசு வஜ்ரமாகிக் கொண்டு வந்தது.

** ** **

செல்லம்மா மீண்டும் வந்தாள். என்னைப் பார்த்ததும், "மணி பத்து ஆகப் போகிறது!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"சாப்பிட வரவில்லையா?"

"எனக்குச் சாப்பாடு வேண்டாம்!"

செல்லம்மாவின் ஈரமற்ற உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன. முகத்தின் வெறுப்பை உள்ளிழுக்க முயன்று கொண்டே, "இதை அப்போதே சொல்லியிருக்கலாம்!" என்று மட்டும் கூறிவிட்டு அகன்றாள்.

'அப்பா! இவளுக்கு என்ன ஆத்திரம் என்மீது?' என்று எனக்கு எரிச்சல் உண்டாகியது. அடுத்த கணம், 'இன்றைக்கு இவளே இப்படி வார்த்தைகளைக் கொட்டினால் நாளைக்கு நான் சமூகத்தில் என்னென்ன வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்குமோ?' என்ற பயம் உண்டாயிற்று. என்ன தான் தோப்பு



பச்சைத் தோப்பாக இருந்தாலும் பூவும் இலையுமற்ற மரம் பளிச்சென்று தெரியத்தானே தெரிகிறது? அந்த மரத்திற்குக் கிடைக்கும் இகழ்ச்சி என்னைவிட்டு விடுமா?

சமூகத்துக்கு உண்மையில் கண் இல்லை. குடும்பமும் குடித்தனமுமாக இருந்து அட்டூழியங்கள் செய்பவர்களையெல்லாம் மறந்து, ஒழுங்காக வாழும் தனிப் பிறவிகள் மீதே குற்றம் கண்டுபிடிக்கத் துடித்துக் கொண்டிருக்கும். "... அவளா, யாரோ புஷ்பாவாம். அடுத்த வீட்டுக்கு வந்து இரண்டு மாதமாகிறது......இந்த இளம் வயதில் ஒருவனுக்கு இவளைத் தள்ளி வைக்கப் பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்று சில பெண்கள் பேச அந்த வார்த்தைகளை மானசீகமாகவும் நினைக்க எனக்குத் தெம்பு இருக்குமா?

அவருக்கு,—தத்துவ நூல்களைப் படித்துப் பெற்ற விவேகத்தின் பலனாக மனைவி தேவையற்ற பொருளாக இருக்கலாம்; தோன்றலாம். ஆனால் பெண்ணுக்கு என்னதான் படிப்பும் முன்னேற்றமும் இருந்தாலும் தனியாக இருந்து என்ன செய்வாள்? செய்ய முடியும்? ஆணுடன் சம உரிமைக்குப் போராடினாலும், சில உரிமைகளைப் பகிர்ந்து கொள்ளுகையில் தன்னுடைய நலனுக்காக அவள் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறதே? அதில்தானே அவளுக்கு வாழ்க்கை இன்பமே இருக்கிறது? இதெல்லாம் மனத்தில் மோதினபோது அன்று எங்களுக்குள் நடந்த பேச்சு வார்த்தை நினைவுக்கு வந்தது.

"என் போக்கு உனக்கும் உலகத்துக்கும் விசித்திரமாக இருக்கலாம், புஷ்பா! ஆனால் நான்தான் என் வாழ்வை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டியவன்!"

"இருக்கலாம். அதனால் இன்னொருத்தியின் வாழ்வு அழிவதை நினைக்கவில்லையா?"

"அதை என்னால் தடுக்க முடியாது. ஒருவனுக்கு நல்லது கிடைக்கும்போது இன்னொருவனை அது பாதிக்கிறது!"

"அப்போ என் துயர வாழ்வின் மீது உங்கள் ஏகாந்த நிம்மதி நிலைக்க வேணுமா?"

"ஏன் துயர வாழ்வு என்கிறாய், புஷ்பா! உனக்கு என்று ஒரு வீடு; மாதா மாதம் அபரிமிதமாகச் செலவு செய்யப் பணம்..."

"நீங்கள் இல்லாமல் அவைகளெல்லாம் எனக்கு எதற்கு?" என்று ஆத்திரத்தோடு கேட்டேன்.

அவர் வாய் திறவாமலிருந்தார்.

"சமூகத்தில் என்னுடன் உங்கள் பெயருக்கும்......" என்று இழுத்தேன்.

"அதனால் என்ன...என்னவோ பேசட்டும். மனிதன் என்ன நாணலா, சமூக வெள்ளத்துக்குத் தலை சாய்ந்து கொடுக்க? அவன் தனக்குள்ள சுய உரிமையை உபயோகிக்கத் தைரியமற்றவனாகிவிட்டால் அப்புறம் அவன் வெறும் உயிருள்ள பிண்டம்தான்."

"எட்டு வருஷ காலமாக..." என்றேன் அவரைப் பார்த்துக் கொண்டே.

"ஆமாம் புஷ்பா...நான் பெரிய பிசகு செய்து விட்டேன். அதை இனிமேல் சொல்

னிப் பயன் அல்லை...'' அவருடைய அடர்ந்த புருவங்கள் ஒளியில் பயங்கரமாகக் கூடின.

''இப்போது இரண்டாவது தவறு செய்கி றீர்கள்!'' என்றேன்.

''எனக்குத் தெரியாதா, இப்போது எது தவறு என்று?'' என்று சொன்னார்.

எனக்கு என்ன வழி, பேசாமல் படுக்கை யில் புரண்டு அழுவதைத் தவிர? அவருக்கு என்மீது வெறுப்பு இல்லை என்பது எனக்குத் தெரிந்ததுதான். தன்மீது தனக்கே உண் டான வெறுப்பின் அடிப்படையில் எழுந்த உணர்ச்சிக்கு நான் பலி ஆகிறேன் அவ்வளவு தான். லட்சோபலட்சம் மனிதர்களில் ஒரு மனிதனின் மனம் மட்டும் ஆராய்ச்சியில் கண் மூடித்தனமாகச் சென்று விட்டால் அவன் சொந்த விவகாரங்களுக்கு நாசம்தான். என் கணவர் செய்த தத்துவ ஆராய்ச்சி என்வரை யில் அந்த முடிவை நோக்கித்தான் சென்றது.

நினைக்க நினைக்க வாழ்வில் உள்ள நம் பிக்கை தளர்ந்து கொண்டுதான் வந்தது. எதை ஆதாரமாகக் கொண்டு நம்பிக்கைச் சுவரை எழுப்புவது? எனக்குத் தாயாரா, தகப்பனாரா? அவர்களே இருந்தாலும் தான் என்ன? யாருக்குமே ஒரு நிலை வரை யில்தான் தாயார், தகப்பனார், பந்த மெல் லாம். அந்தப் பந்தக் கயிறெல்லாம் காற்றில் தேய்ந்து தேய்ந்து மங்கி விடுகிறது, அறியா விட்டாலும்.

காலத்தினாலும் அழிக்க முடியாத பந்தம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருந்தும், அது என் விஷயத்தில் ஏமாற்றத்தை அளிக்கப் போகிறது. பந்தத்தின் ரம்யம் இருக்காது. ஏமாற்றம், அதன் மேல் தோன்றிய எரிச்சல் பிறகு நானாவட்டத்தில் அணுவாகத் தோன் றிப் பெருகும் விரக்தி, இந்தச் சுமை யெல் லாம் ஒரு நாள் என்னுடைய தோள் மீது விழும்போது எப்படி நிமிர்ந்து நிற்பேன்?

கடிகாரத்தைப் பார்த்தேன். மணிபத்தரை. எங்கோ நுங்கம்பாக்கத்தில், சென்னைக்கு வந்த ஒரு ருஷ்யரைப் பார்க்கப் போயிருக் கிறார். என்னுடைய வாழ்வுப் பாதையைச் சீராக்க அவர் என்னைக் கை விட்டாலும், என்னுடன் அளவளாவுவதில் குறைவில்லை.

''புஷ்பா, அந்த அலமாரி முழுதும் உள்ள புஸ்தகங்களெல்லாம் ஒருவர் எழுதினது தான்'' என்றார். சொல்லும் போது அவ ருடைய முகத்தில் புன்னகை ததும்பியது. இதில் அவருக்கு என்ன பெருமையோ?

நான் ஒன்றும் பதில் பேசவில்லை.

''அது எப்படியோ போகட்டும்... அவர் இன்றைக்குக் காலையில் இங்கே வந்திருக் கிறார்...நாளைக்குக் கொழும்பு போகிறார்.''

''உ...ம்''

''இன்றைக்கு இரவு எட்டு மணிக்கு அவ ரைப் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறேன்...'' அவரது கூர்மையான மூக்கு ஏனோ பெருமை யில் சிவந்து மின்னியது.

''நேரே பார்த்து, தத்துவ அறிவைக் காரியத்தில் எப்படிக் காட்டுவது என்று தெரிந்து கொள்ளவா?'' என்று கேட்க என் மனம் துடித்தது. ஆனால் சந்தர்ப்பங்கள் வேறு விதமாகத் திரும்பி விட்டனவே?

அவர் அந்த ருஷ்யப் பேராசிரியரைப் பார்த்திருப்பார். என் வாழ்வை மேலும் குட்டிச் சுவராக்க இன்னும் ஏதாவது யோசனை கூற முடியுமா என்று இருவரும் யோசித்திருப்பார்கள், இப்படியெல்லாம் நான் எண்ண ஆரம்பித்தேன். இது வரை பார்த்திராத அந்த மேனாட்டு மனிதர் மீது எனக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. என்னுடைய துயர வாழ்வுக்கு அவர்தானே சிருஷ்டி கர்த்தா?

அவர் வரும்போது மணி பன்னிரண்டு. இத்தனை நேரமாக உட்கார்ந்திருந்த சோபா விலேயே சாய்ந்து அரைத் தூக்கத்தில் இருந்தேன். என்னதான் துக்கமோ சந்தோ ஷமோ அபரிமிதமாகப் போனாலும் தூக்கம் வருவதற்குத் தடை ஒன்றும் இருப்பதில்லை.

''புஷ்பா!'' என்று அவர் எழுப்பினார்.

பிறகு அவர் என் முன் இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு நின்ற கோலமும் பேசின வார்த்தையும் மனசில் பதிந்து விட் டன. என் அறைப் பக்கம் பகலிலேயே எட்டிப் பாராதவர் அல்லவா அவர்?

''நீங்களா? வந்துவிட்டீர்களா?'' என்றேன்.

''ஆமாம்...நீ நாளைக்குக் காலையில்தானே ஊருக்குப் போகிறாய்?''

''ஆமாம்......இப்போதே போய்விட வேண்டும் என்கிறீர்களா?'' என்றேன்.

''இல்லை......தள்ளிப் போட முடியுமா?''

''ஊருக்குப் போவதையா?''

''ஆமாம்......காலவரையறையின்றி நிரந் தரமாகத் தள்ளிப் போட்டு விடு......''

பார்வையின் தீட்சண்யத்தில் என் முகம் தளர்ந்து விட்டது. அவருடைய கண்களில் தான் என்ன ஒளி!

ஒருவாறு சமாளித்துக் கொண்டே என் கணவர், ''பேராசிரியரைப் பார்த்தேன்... மூன்று மணி நேரமாகப் பேசிக் கொண்டிருந் தேன்...முழுக்க முழுக்க என்னையும் உன்னை யும் பற்றித்தான்! உன்னோடு வாழும் வாழ்க் கையில்தான் பூரணத்வம் இருக்கிறது என் பதை அழகாக எடுத்துக் காட்டி விட்டார்'' என்று அவர் முகம் களையுடன் விளங்கியது.

''ஓ! அவர் உபதேசமா?''

''அவரைப் பற்றி அறியப் போனவன் என்னைப் பற்றியே அறிந்து கொண்டேன்.''

என்னைத் துறந்துவிடுவதாகத் தீவிரமாகச் சொல்லிக்கொண்டிருந்த என் கணவர், திடீ ரென்று எப்படி மனம் மாறினார்? பத்திரி கைச் செய்தியைப் பார்த்த பிறகுதான் விஷயம் விளங்கியது.

மறு நாள் மாலைப் பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரமாகி யிருந்தது.

''......என்ற ருஷ்யப் பேராசிரியர் இன்று காலை கொழும்புக்குத் தம் மனைவியுடனும் குழந்தைகளுடனும் பிரயாணமானார்.''

# அகத்தின் அழகு

**கி. ரங்கராஜன்**

ஊராருக்கு அது ஒரு பெரிய புதிராகத் தான் இருந்தது. "போயும், போயும் அந்தக் கரிக்கட்டைதானா அவனுக்கு வாய்க்க வேண்டும்? அந்த அவலட்சணத்தை மனைவியாகப் பெறுவதற்கு அவன் என்ன பாவம் செய்தானோ?" என்றெல்லாம் நண்பர்களும் உறவினர்களும் சொன்னார்கள். சொல்லி வருந்தினார்கள். ஆனால் சுந்தரராமன் அவர்கள் கேலிப் பேச்சுக்களை லட்சியம் செய்யவில்லை. வேண்டுமென்றேதான் அந்தக் கரிப் பெண் ருக்மிணியை விரும்பி விவாகம் செய்து கொண்டான். அவன் நினைத்திருந்தால் எத்தனையோ ஊர்வசி போன்றவர்களும், திலோத்தமை போன்றவர்களும் அவன் காலடியில் விழுந்திருப்பார்கள். அவ்வளவு அழகு படைத்தவன் அவன். பெயருக்கு ஏற்ற சர்வாங்க சுந்தரனாக இருந்தான். சிவப்புக்கும் வெளுப்புக்கும் இடைப்பட்ட மேனி நிறமும், பருவ முறுக்கும், செழிப்பும் உடையவனாய் ஒருதரம் பார்த்தவர் கண்களையும் மனத்தையும் திரும்பத் திரும்ப இழுக்கும் தோற்றப் பொலிவும் உள்ளவன். அத்துடன் கைநிறையச் சம்பாதிக்கும் உத்தியோகமும் இருந்தது. கேட்பானேன்!

அத்தகைய வடிவழகன் வேண்டுமென்றே அந்தக் கரிப் பெண் ருக்மிணியைக் கைப்பிடித்ததில் ஊராருக்கு ஆச்சரியமாக இருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. ருக்மிணிக்கும் அது ஆச்சரியமாகத்தான் இருந்திருக்கும். இளையாளாக வாழ்க்கைப்பட்டாலும் நல்ல கணவனைத்தான் அடைந்தாள்.

சுந்தரராமன் முதல் மனைவி லக்ஷ்மி, லக்ஷ்மி விலாசத்துடன் இருந்தாள். முதன் முதலாக அவன் அவளைப் 'பெண் பார்க்க'ப் போனபோது,

"சொல்லும் தன்மைத்தன்றது ;
குன்றும் சுவரும் நின்
கல்லும் புல்லும் கண்டுருகப்
பெண்கனி நின்றான்"

என்ற பாட்டுத்தான் அவன் ஞாபகத்துக்கு வந்தது. எத்தனையோ சீர் செனத்திகள் செய்து அவளைச் சுந்தரராமனுக்குக் கொடுத்தார்கள் அவள் பெற்றோர்கள். தன்னளவு பாக்கியம் படைத்தவன் இந்த உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது என்று நினைத்தான் அவனும். விவாகம் ஆகிச் சில வாரங்களுக்குள் அவளுடன் அவன் தனிக் குடித்தனம் ஆரம்பித்ததை இன்று நினைத்தாலும் அவனுக்குப் புல்லரிக்கும்.

காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு அவன் திரும்பி வரும்போது ஒருநாளாவது அவன் வெறுங் கையோடு வந்ததில்லை. அவளுக்காக அவன் வாங்கி யிருந்த துணிமணிகளை இன்று கணக்கு எடுத்தாலும் ஒரு ஜவுளிக் கடையே வைக்கலாம். எத்தனை சோப்புக்கள்! எத்தனை தைல பாட்டில்கள்! கணக்கிடவே முடியாது. விவாகமான அன்றைக்கே, தன் நெஞ்சத்திலே ஒரு பீடம் கட்டி, அதில் அவளை அமர்த்தி, போற்றிப் பூஜித்து வரத் தலைப்பட்டான்.

ஆனால் விதி என்று ஒன்று இருக்கிறதே, அது எந்தெந்த வேளைகளில் எப்படி எப்படி வேஷம் போட்டுக்கொண்டு வரும் என்பதை அவன் கண்டானா?

விவாகமாகி நாலைந்து மாதங்களுக்குள் லக்ஷ்மி—அவன் இதய ராணி—அவன் கட்டி வைத்த அந்த வண்ணச் சிம்மாசனத்தினின்று ஒவ்வொரு படியாக, தானே கீழே இறங்கிக் கொண்டு வந்தாள். அவளிடம் அவன் காட்டிய அன்புக்கும் காதலுக்கும், அவள் வட்டியும் முதலுமாக, கோபத்தையும், வெறுப்பையும், ஆத்திரத்தையும்தான் காட்டினாள்.

"சினிமாவுக்கா? — நான் வரவில்லை."

"கோவிலுக்கா? — என்னால் முடியாது."

"இந்தப் புடவையைத்தானே உடுத்த வேண்டும் என்கிறீர்கள்? முடியவே முடியாது. என் அழகுக்கு அதோ அந்தக் கொடியில் இருக்கிறதே - சாயம் போன புடவை—அதுதான் ஏற்றது" என்பாள்.

"ஏன்? உன் அழகுக்கு என்ன குறைவு? ராஜாத்தி மாதிரி இருக்கிறாயே!" என்பான் சுந்தரராமன்.

"நான் அழகாகவா இருக்கிறேன்? நானும் என் அழகும். இந்த அழகு இல்லாவிட்டால் நீங்கள் என்னை விரும்ப மாட்டீர்கள் அல்லவா?" என்றெல்லாம் வாதாடுவாள்.

அவன் கூடாது என்பதைத் தவறாமல் செய்வாள். அவன் விரும்பியதை மறந்து கூடச் செய்ய மாட்டாள். இறங்கின கழுத்து ஜாக்கெட் அணிந்து, ஆறு கஜம் புடவை உடுத்தி, அவளை அழகு பார்க்கச் சுந்தரராமனுக்கு ஆசைதான். தனிக் குடித்தனம் வைத்த புதிதில் என்றோ ஒருநாள் அவனுக்கு அந்த வாய்ப்பு ஏற்பட்டது. மீண்டும் அந்த ஆசை நிறைவேறவே இல்லை.

அவளுடைய அந்த மனமாற்றத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் மனம் நோகக் கூடாது, அவள் துன்பப்படக் கூடாது என்று நினைத்து அவன் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவளுக்கு நரக வேதனையாகவும், வெறுப்பு விளைவிப்பதாகவும் இருந்ததன் மர்மத்தை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. எப்பொழுது மணி ஐந்து ஆகும், எப்பொழுது வீட்டுக்குப் போவோம் என்று பதறிய காலம் மாறி, மணி ஆகி விட்டதே வீட்டுக்குத் தொலைய வேண்டுமே என்ற கவலை தான் அவனுக்கு இப்பொழுது.

நான்கு வருஷங்கள் கழிந்தன. கடைசியாகச் சுந்தரராமனுக்கும் விடிவு காலம் வந்தது. அவன் விரும்பிய அந்த 'விடிவு' லக்ஷ்மியின் உடல் நோய் ரூபத்தில் வந்தது. எந்தச் சிகிச்சைக்கும் கட்டுப் படாமல், அந்த நோய் அவளைக் கொன்று விட்டது.

கிரியைகள் முடிந்து சில நாட்கள் தாம் ஆயின. அதற்குள் பெண்களைப் பெற்றவர்களில் பலர் அவனை 'வரன் பார்க்க' வந்து விட்டார்கள். நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு அவனை முற்றுகை இடத் தொடங்கினார்கள்.

"எனக்கு விவாகமே வேண்டாம். விவாகம் செய்து கொண்டு குடித்தனம் பண்ணினது போதும்" என்று சொல்லித் தட்டிக் கழித்தான் சுந்தரராமன்.

ஆனால் அவர்கள் விடவில்லை. "உங்கள் விலாசம் சொல்லுங்கள், நான் பெண்ணை வந்து பார்க்கிறேன்" என்று சிலருக்குச் சொன்னான். அவர்கள் கொடுத்த விலாசத்துக்கெல்லாம் போய் அந்தப் பெண்களைப் பார்த்தான். கூடிய வரையில் அவர்கள் எல்லாம் அழகிகளாகவே இருந்தார்கள்.




முன்பு ஒரு பெண்ணை, அவள் அழகுக்காக ஆசைப்பட்டு விவாகம் செய்து கொண்டான். அந்த அநுபவத்தால் அவன் அடைந்த பலன், அவனுக்கு யாருமே அவர்களில் பிடிக்கவில்லை. கடைசியாக யாரும் எதிர்பாராதபடி ருக்மிணியை மணம் செய்து கொண்டான்.

ஆரம்பத்தில் ருக்மிணிக்குச் சற்று பயமாக இருந்தது. தன்னுடன் தன் கணவன் எப்படிப் பேசுவாரோ, தன்னை எப்படி நடத்துவாரோ என்று கவலைப் பட்டாள். நாளாக நாளாக அந்தக் கவலை, பயம் எல்லாம் மறைந்து போய் அவனுடன் கலகலப்பாகப் பேசும் அளவுக்கு வந்தாள்.

சுந்தரராமன் அவளை மிக மிகப் பிரியமாக நடத்தினான். சினிமாவுக்கும், கடற்கரைக்கும், கோவிலுக்கும் அழைத்துக் கொண்டு போனான். வழியில் எதிரே வருபவர்கள் தங்களைப் பார்த்து, தங்கள் இருவரின் அழகையும் விழியால் எடை போட்டுப் பார்ப்பதை அவன் குறிப்பாகக் கவனித்தான்.

ஒரு சமயம் தனக்கு, தான் கனவிலும் நினைக்காதபடி அப்படி ஒரு வடிவழகன் கணவனாகக் கிடைத்தானே என்று ருக்மிணி மகிழ்ந்தாலும், ஒரு சமயம் தான் அவருக்கு ஏற்ற மனைவி இல்லை என்று நினைத்து மிகவும் வருந்துவாள்.

தன்னுடைய அழகின்மையை அவள் உணர்ந்து வருந்துகிறாள் என்று அறியும் போது சுந்தரராமனுக்கும் சிறிது வருத்தமாக இருக்கும். "அடி, அசடே! நீ இப்படி எல்லாம் வருந்தலாமா? உடல் அழகுதான் அழகா? அந்த அழகுதான் எதனோடு சேர்த்தி? உள்ளத்தின் அழகு அல்லவா வேண்டும்? அந்த அழகு உனக்குப் பரிபூரணமாக இருக்கிற போது நீ பெருமையல்லவா பட வேண்டும்?" என்று அவளைத் தேற்ற முயல்வான்.

இப்படியாக ஆறு மாதங்கள் எப்படியோ இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன. சிறுகச் சிறுக அவர்களின் வாழ்க்கையில் ஏதோ ஒன்று குறுக்கே வந்து, சுந்தர ராமனைப் பரிகசிப்பது போல இருந்தது. "அட, முட்டாள்! முன்பு யாரோ ஒருத்தி ஏடாகூடமாக நடந்து விட்டாள் என்றால், உலகத்திலே அவளைப் போன்ற அழகான பெண்களும், அதே விதமாகத்தான் இருப்பார்களா? அவர்களை எல்லாரையும் தூர ஒதுக்கித் தள்ளிவிட்டு, எங்கோ கேட்பாரற்றுக் கிடந்த ஒரு குரூபியை விவாகம் செய்து கொண்டு வந்து விட்டாயே?" என்று யாரோ அவன் இதய அடித்தளத்தில் நின்று கேட்பது போல இருந்தது.


அவனுடைய மனம் இதை விட்டுக் இதை தாவத் தொடங்கியது. "நான் முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டேனா?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் சுந்தரராமன்.

அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. அன்று ஒரு நாள், ஏதோ ஒரு வெள்ளிக் கிழமை. எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்காக ருக்மிணி நகைகள் எல்லாவற்றையும் கழற்றி விட்டு, இடையில் பழைய துணி ஒன்றை உடுத்திக் கொண்டு, வெந்நீர் அறையில் உட்கார்ந்திருந்த அந்தக் காட்சி அவன் நினைவுக்கு வந்தது. "ஐயோ! இந்த அவலட்சணத்தையா பிடித்துக் கொண்டு வந்தேன்!" என்று பளிச்சென்று ஏங்கியது அவன் மனம். அந்தச் சமயத்தில் லக்ஷ்மி அப்படியா இருந்தாள்! நகைகள் அணிந்த போது காணும் அழகைவிட, அணியாத போது காணும் அழகுதானே அதிகமாக இருக்கும்! அவன் நினைத்துப் பார்த்தான். முன்பு அப்படித்தான் ஒரு நாள், ஏதோ சற்று குட்டையான சோளி ஒன்றை அணிந்து முதுகின் கீழ்ப் பாகமும், விலாப்புறமும் தெரியும்படியாகக் கண்ணாடி முன் நின்றவண்ணம், நெற்றியில் புரண்ட கூந்தலை விஷமம் செய்தபடி அவள் நின்று கொண்டிருந்த அந்தக் காட்சி! அடாடா, அதுமாதிரி ஒரு பெண்ணை அவன் எங்கே இனிமேல் பார்க்கப் போகிறான்! அவன் உள்ளம் தவித்தது; அழகுக்காக அலைபாய்ந்தது. அன்று அவனை அவன் மனைவி ஒதுக்கித் தள்ளினாள். இன்று இவன் வேறொரு பெண்ணை மணந்து கொண்டு அவளைத் தன்னாமல் தள்ளிக் கொண்டிருக்கிறான்.

நாளுக்கு நாள் ருக்மிணியிடம் அவன் உள்ளத்தில் ஊறி விட்ட வெறுப்பு படர்ந்து வளர ஆரம்பித்தது. அவன் அவளை விரும்பித்தானே மணம் செய்து கொண்டான்? குரூபி என்று அறிந்துதானே அவளை வலிய மணந்தான்? அவளும் அவனிடம் அன்பும் பக்தியும் சேர்ந்த உள்ளத்துடன் தானே பூஜித்துக் கொண்டு வருகிறாள்? அப்படியிருக்க அவனுக்கு அவளிடம் திடீரென்று வெறுப்பு ஏற்படக் காரணம்? வேறொன்றும் இல்லை; அவள் கறுப்பு.

அவனுக்கு அவளிடம் ஏற்பட்ட வெறுப்பை மாற்றிக் கொள்ள நினைத்தான்; முடியவில்லை, தவித்தான்; ஏங்கினான். இறுதலைக் கொள்ளி எறும்பாகத் துன்புற்றான். யார் செய்த பாக்கியமோ, திடீரென்று ஒரு நாள் அவன் மாமனாரிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் தனக்கு அது சமயம் உடல் சௌக்கியக் குறைவாக இருப்பதால், மகளைப் பார்க்க வேண்டும் என்று விரும்புவதாயும், முடிந்தால் அவளை அழைத்து வருமாறும் எழுதியிருந்தார். அடுத்த ரயிலில், ருக்மிணியை அவள் பிறந்தகத்துக்குக் கொண்டு விட்டு வந்தான் சுந்தரராபன்.

ஒரு வாரம், பத்து நாளாயிற்று. எதை எதையோ நினைத்துக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது சுந்தரராமனின் உள்ளம்.



## துயர் தீருமா?

**நா**ன் ஒரு ஆபீஸ் குமாஸ்தா. எனக்குக் கிடைக்கும் சொற்ப வருவாயில் இரண்டு வயது வந்த பெண்கள், உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் ஒரு பையன் ஆகியோர் அடங்கிய குடும்பத்தை நடத்த வேண்டி யிருக்கிறது. இந்த நிலையில் எங் கிருந்தோ ஆபீஸ் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு ஆடிட்டர் வந்து விடுகிறார். வந்து விட்டால் இவர்களுக்குச் சாப்பாடு, டிபன், காப்பி முதலியவைகளை யெல்லாம் நாங்கள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். போதாக் குறைக்கு இவர்களுடன் வரும் முகாம் குமாஸ்தாக்களுக்கும் நாங்கள்தான் சாப்பாடு, சிற்றுண்டி முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இவர்கள் பிரயாணத்துக்கான செலவையும், மற்றப்படி தங்கி யிருக்கும் நாட்களுக்குத் தினப் படியையும் பெற்று வருகின்றனர். இப்படிப் பெறும் ஊதியத்தை மிச்சப்படுத்த என்னைப் போன்ற ஏழைக் குமாஸ்தாக்களின் தலையில் கை வைக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இவர்கள் ஊருக்குத் திரும்பிச் செல்லும் பொழுது குழந்தைகளுக்குப் பழங்கள் வாங்கிக் கொடுத்தனுப்ப வேண்டும். இப்படி யெல்லாம் செய்து இவர்களைத் திருப்தி செய்யா விட்டால் நாங்கள் வேலையில் செய்திருக்கும் சிறிய குற்றத்தைப் பெரிதாக்கி வேலைக்கு உலை வைத்து விடுகின்றனர். அம்மாதிரி ஆடிட்டர்கள் மட்டுமல்ல, துரைத்தனத்தின் எல்லாப் பகுதிகளிலும் வெளியூர்களில் 'முகாம்' என்று போட்டுக் கொண்டு வரும் சிறிய, பெரிய உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலோர் இப்படித்தான். ஏன்! கலாசாரத்தைப் போதிப்பதாகச் சொல்லப்படும் கல்வி நிலையங்களில்கூட இப்படித்தான். மாவட்டக் கல்வி அதிகாரிகள் என்ற நிலையைப் பயன்படுத்தி அல்லலுறும் ஆசிரியர்களைச் சுரண்டுபவர்கள் எத்தனையோ பேர். இம்மாதிரியான குறுகிய நோக்கம் ஒழிந்து என்னைப் போன்ற ஏழைகளின் துயர் என்று தீருமோ!

திருப்பத்தூர்
8-5-54

எஸ். கணபதி

முதல் மனைவியின் ஞாபகம் எழுந்தது. அவள் இருந்த வரையில் அவளுக்கும் சுகமில்லை. தனக்கும் சுகமில்லை. என்னமோ கொஞ்ச நாள் இருந்தாள். தாமரை இலைத் தண்ணீர் போல இருந்தாள், போய் விட்டாள். முயன்றிருந்தால், அவளைப் போல இல்லா விட்டாலும், சுமாராக ஒரு அழகி அவனுக்குக் கிடைத்திருப்பாள். என்னமோ, ஒரு அவசரத்தில் ஏதோ ஒன்றைப் பெண் உருவத்தில் பிடித்து வந்து விட்டான். அவன் மனம் குழம்பியது. காமிரா அறையில் லக்ஷ்மியின் பெட்டி புதுமை கலையாமல் இருந்தது. பெட்டி இருந்தது. பெட்டிக்கு உடையவள் போய் விட்டாள். அந்தப் பெட்டியும் அதனுள் இருந்த அத்தனை பொருளும் இப்பொழுது வேறொருத்திக்குச் சொந்தமாகி விட்டது!

அவனுக்கு என்ன தோன்றிற்றோ, ஆணியில் மாட்டியிருந்த சாவியை எடுத்துப் பெட்டியைத் திறந்தான். உள்ளே என்னென்னவோ கிடந்தன. அருமையாக அவளுக்கு அவன் வாங்கியிருந்த சாமான்கள் எல்லாம் இருந்தன. எல்லாவற்றையும் எடுத்துக் கீழே பரப்பினான். அடியில் ஒரு கவர் ருக்மிணியின் விலாசத்துக்கு இருந்தது. தபால் முத்திரையைக் கவனித்தான். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டதாகத் தெரிந்தது. யார் எழுதியிருக்கிறார் என்று அறியும் எண்ணத்தோடு பிரித்தான்.

பிரியசகி!


"உன் கடிதம் கிடைத்தது. உனக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை என்பதை அறிய வருந்துகிறேன். இந்த நாளில் எது இருந்தாலும் எது இல்லாவிட்டாலும் பெண்களுக்கு அழகு மிக அவசியம் என்பது தெரிகிறது. அழகுள்ள பெண்களைத்தான் ஆண் உள்ளம் விரும்புகிறது. நான் அழகியாகவே இருப்பதால்தான் 'அவர்' என்னை விரும்புகிறார். என் அழகு நிரந்தரமானதா? திடீரென்று எனக்கு வைசூரி போட்டு, என் முகமெல்லாம் அம்மை வடுக்கள் நிறைந்து கண் பார்வையும் இழந்து விட்டேன் என்றால், அப்பொழுது அவர் உள்ளம் என்னை நாடுமா? அவரிடம் எனக்கு நிறைய அன்பு உண்டு. ஆனால் சில சமயம் என்னை—என் அழகை அவர் புகழும்போது எனக்கு என்னமோ வேதனையாகத்தான் இருக்கிறது. நான் என்ன செய்யட்டும்? ஒவ்வொரு நாளும் என் மேனி நிறத்துக்காக, அவர் வாங்கி வரும் துணிமணிகளைப் பார்க்கும் போது உன் நினைவுதான் வருகிறது.

ஐயோ! நம் தோழி அழகியாகப் பிறக்கவில்லையே! அவளை எந்த ஆண் மகன் மணக்க வருவான் என்று ஏங்குவேன். உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகிறேன். எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு பெண் குடியிருந்தாள். சுமாரான அழகு. ஒரே மாதம் ஜ"ரமாகக் கிடந்தாள். தலையில் ஒரு மயிர் பாக்கியில்லை. அத்தனையும் உதிர்ந்து போய் எலும்பும் தோலுமாகி விட்டாள். அது அவள் குற்றமா? அதற்காக அவள் புருஷன் அவளைத் தள்ளி வைத்து விட்டானாம். அது மாதிரி ஜ"ரமோ, வேறு எதுவோ எனக்கும் நேரலாம். அப்பொழுது இவர் எப்படியிருப்பார்? ருக்மிணி, அதை என்னால் நினைக்க முடியவில்லையடி! நீ வருந்தாதே! உனக்குப் புற அழகு இல்லை, வாஸ்தவம். ஆனால் அக அழகு உனக்கு நிரம்ப உண்டு. அந்த அழகுக்கு ஆசைப்பட்டு நிச்சயமாக ஒரு சுந்தர புருஷன் வருவான். தைரியமாக இரு.

அன்புள்ள, லக்ஷ்மி."

சுந்தரராமன் கைக் கடியாரத்தைப் பார்த்தான். மணி இன்னும் மூன்று ஆகவில்லை. வேகமாகப் போனால் ரயில் கிடைத்துவிடும். இரண்டு நாளோ, நான்கு நாளோ அங்கேயிருந்து, கையோடு ருக்மிணியைக் கூட்டி வந்து விடுவது என்று கருதிப் பிரயாணத்துக்குச் சித்தமானான். அவனது வாழ்க்கையில் அன்று ஒரு புது சகாப்தம் ஆரம்பமாயிற்று.


அடடா! நீங்கள் அதே பழைய முறை டூத்பேஸ்டையா இன்னும் உபயோகித்து வருகிறீர்கள்? இதோ நவீன விஞ்ஞானம் உங்களுக்கு அதிக சிறப்பானதொரு டூத்பேஸ்ட் வழங்குகிறது!
உங்கள் பற்களுக்கு இச்சிறந்த பராமரிப்பு அவசியம்
அற்புதமான 'கோலினஸ்' நுரை உங்கள் வாயின் ஒவ்வொரு மூலை முடுக்குகளுக்கும் க்ளோரோபில்லை எடுத்துச் செல்கிறது. சாதாரண டூத்பேஸ்ட் எதுவும் இவ்வளவு செய்யமுடியாது!
க்ளோரோபில் மற்றும் 'கோலினஸ்' நுரை — தந்த சுகாதாரத்திற்கு சிறந்த மார்க்கம்!
உங்கள் பணத்திற்கு அதிக பயன் தருவது கூட! பிரஷ்ஷில் அரை அங்குல அளவே தேவை. இன்றே க்ளோரோபில் சேர்ந்த 'கோலினஸ்' வாங்குங்கள்!
'கோலினஸ்' புன்னகையில்
K
Kolynos
Chlorophyll
ஆரோக்கியம் ததும்புகிறது
இலவசம் குழந்தைகளுக்கு
'நகைமுகனும் அவனுடைய பிராணிசகபாகளும்' என்ற சுவையான சித்திரக்கதைக்கு இப்பொழுதே எழுதுங்கள்; உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை மட்டும் அனுப்பினால் போதும்:
நகைமுகன், டிபார்ட்மெண்ட் 38,
த. பெ. 541, பம்பாய்
நகைமுகன், 'கோலினஸ்' சிறுவன்
CK 9377



# அமுதாவின் அதிர்ஷ்டம்

சம்பந்தம்

ஏதோ பெண் பிரியமாய்ப் படிக்கிறாளே என்று அமுதாவை நெடுகப் படிக்க வைத்துக் கொண்டே போய் விட்டார் ஸ்டேஷன் மாஸ்டர் தியாகு. அதற்கேற்றாற் போல் அவருக்கும் பட்டணப் பாங்கான ஸ்டேஷனாகவே கிடைத்துக் கொண்டிருந்ததால் சௌகரியமா யிருந்தது. ஆனால் கடைசியில் அவள் கலியாணத்துக்கு மாப் பிள்ளை தேடும் பொழுதுதான் 'ஏண்டா இப்படிப் படிக்க வைத்தோம்!' என்றாகி விட்டது.

ஒரு வரனா, இரண்டு வரனா! இதோடு அரை டஜன் வரன்கள் ஆகி விட்டன. அவ்வப்போது ஏதோ முடிந்து விட்டாற் போலிருக்கும்! கடைசி யில் அது குதிராமல் போவதற்கு அமுதாவே காரணமாகி விடுவாள்.

அன்று அவளைப் பார்க்க வந்த வரன் வசந்தன். மிகவும் நல்ல பையன். சமீபத்தில்தான் ஸ்டேஷன் மாஸ்டர் தேர்வு ஆகிப் பயிற்சியிலிருந்தான். படித்த பையன்; அவனுக் கென்ன சங்கோசம்! ரொம்பவும் சரளமாய்ப் பேசிப் பழகினான். அமு தாவுக்குப் பாடத் தெரியுமா, ஆடத் தெரியுமா என்றெல்லாம் அவன் கேட்கவில்லை. பரீட்சை எந்த வருஷம் பாஸ் பண்ணினாள் என்றெல்லாம் விசாரித்தான். "அட! அந்த வருஷமா! மனோன் மணீயத்தைத்தானே அந்த வருஷம் உபபாடமாக வைத்திருந்தார்கள்!" என்று கேட்டான்.

"ஆமாம்!" என்றாள் அமுதா.

"யார் எடுத்துக் கொண்டது! மூத்தையா தானே!" என்று கேட்டான்.

அதற்கும் 'ஆமாம்' என்றுதான் பதில் சொன் னாள் அமுதா.

"எனக்குத் தெரியுமே! சக்கைப் போடு போடு வார் சார், அவர்! கேட்டுப் பாருங்களேன்!" என்றான் ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்து.

"ஆமாம், அப்பா! அவர் ரொம்ப நன்றாக விளக்கிச் சொல்லுவார்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் அமுதா.

"என் சித்தியின் பெண் அந்த வருஷம்தான் தேறினாள். அதனால்தான் இதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று சொல்லி விட்டு, "சரி, கல் யாணம் எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்!" என்று நேர்ப் பேச்சிலேயே இறங்கி விட்டான் வசந்தன். அதைக் கேட்ட தியாகுவின் வயிற்றில் பால் வார்த்தாற் போலிருந்தது.

அப்பொழுது அமுதா கொண்டு வந்து வைத்த சூடான காப்பியை ஒரே வாயில் ஊற்றிக் கொண்டு கனைத்துக் கொண்டான் வசந்தன். தியாகுவும் காப்பியைக் குடித்து விட்டு எதற் காகவோ உள்ளே போக எழுந்தார். "உட் காருங்கள், ஸார்! உங்களை ஒன்று கேட்க வேண்டும்" என்றான் வசந்தன். அப்படியே அவரும் உட்கார்ந்து விட்டார். "ஏன், சார்! சமீபத்தில் நடந்த மதனபள்ளி ரயில் விபத்தைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே! கடைசியில் மூலகலசெருவு ஸ்டேஷன் மாஸ்டர் மேலே நட வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களாமே! அது நியாயமா! உங்களுக்கு எப்படிப் படுகிறது!" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"ஏன்! விசாரணைக் கப்புறந்தான் அப்படிச் செய்திருக்கிறார்கள்" என்றார் தியாகு. உடனே வசந்தன் ஆவேசமாகப் பேச ஆரம்பித்து விட் டான். அவன் மூலகலசெருவு ஸ்டேஷன் மாஸ்ட ருக்காகவும், தியாகு ரயில்வே மேலிடத்துக்காகவு மாக இருந்து கொண்டு பலத்த வாக்கு வாதங்கள் புரிய ஆரம்பித்து விட்டார்கள்.

அமுதாவுக்கு அது துளிக்கூடப் பிடிக்கவில்லை. எனவே, காதைப் பொத்திக் கொண்டு தன் அறைக்குள்ளே போய் விட்டாள்.

சற்று நாழிகை கழித்து ஸ்டேஷனில் விழுப்புரம் பாசஞ்சர் வருவதற்கு நேரம் ஆகிவிடவே தமது வேலையைக் கவனிக்க ஓடினார் தியாகு. அவர் பின்னோடு வசந்தனும் சென்று விட்டான். அப்பொழுதுதான் அந்த வீட்டில் பெரும் மழை பெய்து ஓய்ந்தாற் போலிருந்தது.

"மாப்பிள்ளை பலே சமர்த்தராய்த்தான் இருப்பார் போலிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அறையை எட்டிப் பார்த்தாள் அமுதாவின் அம்மா. அங்கே அமுதா ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு வருத்தமே உருவாக உட்கார்ந்திருந்தாள். அதைக் கண்டதும் திக்கென்றது அவளுக்கு. உடனே "ஏன் அமுதா, என்னவோ மாதிரி யிருக்கிறாய்! உனக்குத்தான் நல்ல மாப்பிள்ளையாகக் கிடைத்து விட்டாரே!" என்று அமுதாவின் தலையை வருடிக் கொண்டே அன்பு நிறைந்த குரலில் கேட்டாள் தாயார்.

"போ, அம்மா!" என்று அவள் கரத்தை விடுவித்துக் கொண்டே சொன்னாள் அமுதா.

"ஏன், அம்மா! உனக்குக் கூடவா தெரியாது! நம் குடும்பமேதான் ஒரு ரயில்வே குடும்பம்! நானும் ஒரு ஸ்டேஷன் மாஸ்டரைத்தானா மணக்க வேண்டும்? நான் மாட்டவே மாட்டேன். ரயில்வேகாரனைத் தவிர வேறு யாராயிருந்தாலும் சரி..." என்று கூறிய அமுதா மேஜைமேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

அதைக் கேட்ட அவள் அம்மாவுக்கு அப்படியே நாடியனைத்தும் ஒடுங்கிவிட்டன. அதி உயரமாகக் கட்டியிருந்த அவளது மனக் கோட்டையை இப்படி ஒரு நொடிக்குள் தகர்த்தெறிந்தால் அவளுக்கு எப்படி யிருக்கும்! "அப்படியா சேதி!" என்று கேட்டவள் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

வண்டி போக விட்டுத் தியாகு வீட்டுக்கு ஓடி வந்தார். "இந்த வரனைப் பற்றி அமுதா என்ன சொல்லுகிறாள்!" என்று ஆவலாகக் கேட்டார்.

"அவள் ஒரே பிடிவாதமாகத்தா னிருக்கிறாள். ரயில்வே வரன் யாராயிருந்தாலும் சரி, ஏறெடுத்துக்கூடப் பார்க்க மாட்டாளாம்!"

"என்ன! நல்லவனாயிற்றே இவன்! ஏன், அமுதா! அப்படியா சொன்னாய்!" என்று கேட்டார் தியாகு.

"ஆமாம், அப்பா! நீங்களேதான் பாருங்களேன்! இதோடு எத்தனை வரனாயிற்று! எல்லாரும் உங்கள் ரயில்வேயில்தான் இருக்கிறார்கள். இவரையுந்தான் ஸ்டேஷன் மாஸ்டர் என்கிறீர்கள் ரயில்வே இலாக்கா என்றாலே எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!" என்றாள் அமுதா.

"அத்தனைக்கு ஆகிவிட்டதா, உனக்கு! உன்னைச் சொல்லி பிரயோஜனமில்லை. உன்னைப் படிக்க வைத்தேனே, அந்த என் புத்தியை அடிக்கணும்!" என்று சொல்லிக் கொண்டே தலையில் அடித்துக் கொண்டார் தியாகு.

அதற்குப் பிறகு அவர் அமுதாவினிடத்தில் அதிகமாகப் பேசவுமில்லை.

அமுதா சொல்லிக் காட்டியது போல், அவர்கள் குடும்பத்து மனுஷ்யர்கள் அத்தனைபேரும் ரயிலில்தான் உத்தியோகம் பார்த்து வந்தார்கள். அவள் சித்தப்பா ஒரு என்ஜின் டிரைவர்; பெரியப்பா ஒரு கார்டு. மாமா செக்ஷன் கண்ட்ரோலர். பெரிய மாமாவின் பிள்ளை பிளாட் பாரம் போர்மேன். சித்தியின் பிள்ளை டிக்கட் பரிசோதகன்.

அதனால் அவள் எங்கு சென்றாலும், அவர்கள் வீடு என்னவோ ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே தான் இருக்கும். எப்பொழுதும் ரயில் சப்தந்தான். இன்னும் சில சமயங்களில் கூட்ஸ் வண்டிகளை அவிழ்த்துக் கொண்டும் மாட்டிக் கொண்டும் இருப்பார்கள். அது வேறு 'தடார், தடார்' என்று சப்தம் கேட்ட வண்ணமாகவே யிருக்கும்.

இன்னும் அண்டை வீடு, பக்கத்து வீடு என்று வரிசையாக இராது. மூலைக்கு ஒரு வீடாய்க் கட்டி விட்டிருப்பார்கள். ஆனால் எல்லோரும் ஒரே கிணற்றில்தான் வந்து தண்ணீருக்கு முட்டிக் கொள்ள வேண்டும். அந்தந்த வீட்டுக்காரரும் இரவில் வேலை என்று சொல்லிப் போய்விடுவார்கள். வீட்டில் ஆண்பிள்ளைத் துணையில்லாமல் பயந்து கொண்டே தூங்க வேண்டும் பெண் பிள்ளைகள்.

எப்பொழுதாகிலும் ஊருக்குள் இருக்கும் தன் சினேகிதி வீட்டுக்குச் செல்வாள் அமுதா. அப்பொழுதுதான் அதன் வித்தியாசம் நன்றாய்ப் புலப்படும் அவளுக்கு. வீதியில் பண்டம் பாடிகள் விற்றுக் கொண்டு போகும். தெருக் குழந்தைகள் கும்பலாய்க் கூடி விளையாடுவார்கள். அண்டை வீடு, பக்கத்து வீடு என்று ஒருவருக் கொருவர் எத்தனையோ பிரியமாய்ப் பழகிக் கொள்வார்கள். அந்த வீட்டில் விசேஷம், இந்த வீட்டில் விசேஷம் என்று மாடியி லிருந்தபடியே வீதியை எட்டி எட்டிப் பார்ப்பார்கள். அதை



யெல்லாம் பார்த்து விட்டு, "நம் வீடு இத் தெருவிலுள்ள ஒரு வீடா யிருக்கக் கூடாதா!" என்று ஏங்குவாள் அமுதா.


இதைக் கூட ஒரு விதமாய்ச் சகித்துக்கொண்டு விடுவாள் அவள். அவள் வீட்டிலும் சரி, மற்ற உறவினர் வீட்டிலும் சரி, அவரவர்கள் பேசிக் கொள்ளும் பேச்சு உண்டே, அதுவும் ரயில்வே பேச்சாகத்தான் இருக்கும்.

"இன்றைக்கு ஸ்டேஷனிலே கைகாட்டி பழுதாகிவிட்டது. எல்லா வண்டிகளையும் நிறுத்தி மெதுவாக விட வேண்டியதாயிற்று! அதனால் தான் வேளையோடு சாப்பிட வர முடியவில்லை" என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் நுழைவார் தியாகு.

"என்னடா இது! வண்டி இப்படி நின்று நின்று மெதுவாகப் போகிறதே என்று பார்த்தேன். கைகாட்டி பழுதாகிப் போன காரணம்தானா!"

இதே தோரணையில்தான் அமுதாவின் அம்மாவும் ஸ்டேஷன் மாஸ்டர் மனைவியாகப் பேசுவாள்.

தியாகுவுக்கு வாரத்தில் ஒருநாள் ஓய்வு உண்டல்லவா! அப்பொழுது யாரேனும் பக்கத்து ஸ்டேஷன் மாஸ்டர் பார்க்க வந்தால் போதும், அப்பொழுதும் ரயில் பேச்சுத்தான். "ஏன், சார்! அன்றைக்கு வண்டலூரிலே செங்கோட்டைக்குச் சாவி தவறி விட்டதாமே! என்ன ஆயிற்று!" என்றார் தியாகு.



"ஆகிறது என்ன! நாளைக்குத்தான் ஆபீசர்கள் விசாரணை நடத்தப் போகிறார்களாம்."

"அடே! அப்பொழுது யார் வேலையில் இருந்தார்களாம்!"

இம்மாதிரி பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு அமுதாவுக்குக் காது புளித்துப் போய்விட்டது. அடுத்த வீடுகளில் உள்ள குழந்தைகள் கூட 'ஜிக்கு புக்கு!' 'ஜிக்கு புக்கு!' என்று ரயில் விளையாட்டுத்தானே விளையாடுகின்றன.

அந்தச் சூழ்நிலை அமுதாவுக்கு அடியோடு வெறுப்பை அளித்தது. அதனால்தான் அவள் அவ்வளவு பிடிவாதம் பிடித்தாள்.

அதற்கப்புறம் ஓரிரண்டு வருஷங்கள் கலியாணப் பேச்சே இல்லாமலிருந்தது. அமுதாவுக்கு வயதாகிக் கொண்டு வருகிறதே என்று அவள் அம்மாவுக்கு அளவில்லாத வருத்தம். கடைசியில் பக்கத்து வீட்டுக்கு விருந்தாளியாக வந்த மாமி ஒருத்தி, டில்லியில் உள்ள ஒரு வரனைப்பற்றிக் கூறினாள். அவர் மத்திய அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகித்து வந்தார்.

அமுதா அதற்குச் சட்டென்று சம்மதித்து விட்டாள். டில்லியிலிருந்தபடியே அமுதாவின் போட்டோவைத் தருவித்துப் பார்த்து விட்டுச் சம்மதம் சொல்லி விட்டார் சங்கர். அம்மாதக் கடைசியிலேயே சம்பிரமமாக விவாகம் நடந்தது. அடுத்த நாளே சங்கர் அமுதாவைத் டில்லிக்குக் கூட்டிக் கொண்டும் போய்விட்டார்.

அமுதா படித்த பெண்ணாயிருந்ததால், சங்கருக்கு எதற்கும் மிகவும் சௌகரியமாயிருந்தது. அவருக்குத் தினம் பத்திரிகை பார்க்கக் கூட நேரமில்லை. அமுதாதான் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்து விட்டு விஷயத்தை அவருக்குச் சுருக்கமாகச் சொல்லுவாள்.

அவள் புகுந்த அதிர்ஷ்டம் சங்கருக்குச் சீக்கிரத்தில் பதவி உயர்வு கிடைத்தது. உயர்ந்த சம்பளத்தில் ரயில்வே இலாக்காவுக்கு மாற்றலானார். பொறி இயல் சம்பந்தமான யோக்யதாம்சம் அவர் ஒருவருக்கு மட்டுமேதான் இருந்தது. எனவே, அப்பொழுது ஏற்பட்ட காலி ஸ்தானத்தில் சங்கரைத்தான் இருப்புப் பாதைகளின் பிரதம பரிசோதகராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இதைத் திடு திப்பென்று சொல்லி அமுதாவை ஆச்சரியத்தி லாழ்த்த வேண்டுமென்று எண்ணினார் சங்கர். மறுநாள் இரவு, "புறப்படு! நம் ஊர்ப் பக்கம் போய் வருவோம்" என்று அமுதாவைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். அன்று ஸ்டேஷனில் அவருக்கு ஏகப்பட்ட மரியாதை. அவருக்கென்று தயாரா யிருந்த விசேஷப் பெட்டியில் அமுதாவை ஏற்றினார். தாமும் ஏறிக் கொண்டார். ரயில் புறப்பட்டது. "என்ன, இதில் ஏறிக் கொண்டு விட்டோமே!" என்றாள் அமுதா வழியில்.

சங்கர் கட கட வென்று சிரித்தார். "இன்றையிலிருந்து நான் இருப்புப் பாதைகளுக்கெல்லாம் பிரதம பரிசோதகன்! முதன் முதலில் நமது தக்ஷிண ரயில்வேயைப் பார்வையிடப் போகிறோம். அதற்குத்தான் இப்



சென்னை, அடையாறிலுள்ள புற்றுநோய் வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தின் புதிய கட்டிடத்தை யூனியன் நிதி மந்திரி ஸ்ரீ தேசமுக் ஜூன் 18-ந் தேதி யன்று திறந்து வைத்தார். இந்தக் கழகத்தின் கௌரவ டைரக்டர் டாக்டர் பி. அருணாசலம், "இது ஆஸ்பத்திரியல்ல. ஒரு ஆராய்ச்சிக் கழகம்தான். நாட்டிலுள்ள வைத்தியர்கள் தங்களிடம் வரும் நோயாளிகளிடை புற்று நோய் வரக்கூடிய சின்னங்களைக் கண்டால், கழகத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டு தீர்க்க முடியாத வியாதி என்று கருதப்படும் இந்நோயைத் தீர்ப்பதற்குத் தக்க வைத்திய உதவிகளும், ஆலோசனைகளும் பெறலாம்" என்றார். இத்தகைய கழகம் நமது ராஜ்யத்தில் இப்பொழுதுதான் முதன்முதலாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்திய சர்க்கார் நிதி மந்திரி ஸ்ரீ தேசமுக், டாக்டர் பி. அருணாசலம் முதலியவர்கள் புதுக் கழகத்திலுள்ள சஸ்திர சிகிச்சைச் சாலையைப் பார்வையிடுவதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

பொழுது போய்க் கொண்டிருக்கிறோம், தெரியுமா! அதற்குள் இத்தனைச் சட்டப் புத்தகங்களையும் ஒரு புரட்டு புரட்டி விட்டால் தேவலை. எப்பொழுதோ படித்தது!" என்றார்.

"என்ன! இருப்புப்பாதைகளுக்குப் பிரதம பரிசோதகரா!" என்று கேட்ட வண்ணம் அமுதா அப்புத்தகங்களைப் புரட்டினாள். என்ன கொடுமை! ஒரு காலத்தில் எதை அவள் அடியோடு வெறுத்தாளோ, அவையே அல்லவா அவள் எதிரில் வந்து நின்றன! எல்லாப் புத்தகங்களும் இருப்புப்பாதையைப் பற்றிய புத்தகங்களாகவே இருந்தன. அமுதாவின் தலை சுழன்றது. எனவே, அவள் சீக்கிரம் அங்கிருந்து எழுந்து படுத்துக் கொள்ளப் போய் விட்டாள்.

அடுத்த நாளுக்கு அடுத்த நாள் தக்ஷிண ரயில்வே பரிசோதனை. வண்டி வேகமாய்ப் போய்க்கொண் டிருந்தது. வழியில் ஒவ்வொரு ஸ்டேஷனும் ஒழுங்காய் வெள்ளையடித்துச் சுத்தமாய் வைத்திருந்ததைக் கண்ட சங்கர், "பார்த்தாயா, அமுதா! நான் பரிசோதனைக்காக வருகிறேன் என்பதற்காக வெள்ளையடித்து வைத்திருக்கிறார்கள்!" என்றார்.

அமுதாவுக்கு அநேகம் யோசனை. அதனால் ஒன்றுமே பதில் சொல்லத் தோன்றவில்லை. "நீதான் ஸ்டேஷன் மாஸ்டர் பெண்ணாயிற்றே! இந்த நாடகம் எல்லாம்தான் உனக்கு முன்னமேயே தெரிந்திருக்குமே!" என்றார் சங்கர்.

அடுத்த சந்திப்பில் ரயில் நின்றது. அங்கு அரை நாள் பரிசோதனை என்று திட்டமிட்டிருந்தார் சங்கர். அதனால் அவருடைய விசேஷப் பெட்டியை யவிழ்த்துச் சந்தடி யில்லாத ஒதுப்புறமான ஓர் இடத்தில் கொண்டு விட்டார்கள். சங்கர் தமக்குக் கீழ் உள்ள உத்தியோகஸ்தர்கள் புடை சூழ ஸ்டேஷனுக்குச் சென்று விட்டார். அமுதா மட்டுமே பெட்டியில் இருந்தாள். வெளியே தலையை நீட்டி ஏதோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.


அந்தப் பாதையை ஒட்டினாற்போல் இரும்பு வேலி; அதற்கப்பால் வரிசையாய் ரயில்வே சிப்பந்திகளுக்கான விடுதிகள். அப்பொழுது எதிர்த்தாற்போலிருந்த ஒரு வீட்டிலிருந்து ஸ்டேஷன் மாஸ்டர் வசந்தன் வேலைக்குப் போவதற்கென்று கனகச்சிதமாக உடை உடுத்திக் கொண்டு வெளியே வந்தான். பெட்டியில் அமுதாவைக் கண்டதும் அப்படியே திகைத்து நின்று விட்டான். அமுதாவும் அவனை அங்கு கண்டு திடுக்கிட்டுப் போனாள். இருவர் கண்களும் ஏக சமயத்தில் சந்தித்துக் கொண்டன. வசந்தனுடைய பார்வை அவளுடைய அடி உள்ளத்தின் ஆழத்தையே ஊடுருவித் துழாவியது. "ரயில்வே உத்தியோகஸ்தரையே மணக்கப் போவதில்லை என்று விரதம் பூண்டு இருந்தாயே! இப்பொழுது நீ யாருடைய மனைவியாம்!" என்று அவனுடைய ஆழ்ந்த பார்வை அவளைப் பார்த்துக் கேட்பதுபோலிருந்தது. அமுதா மிகவும் சிரமப்பட்டுத் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். தலை நிமிர்ந்து பார்க்க அவளுக்குத் துணிவு உண்டாகவில்லை.

அதற்கு யார் என்ன செய்கிறது! அவள் பண்ணின அதிர்ஷ்டம் அப்படி!


# 'கோடக்' பிலிமில்

## பிடிக்கப்படும் படங்கள் சிறந்த வைகளாகவே அமைகின்றன


ஜொலிக்கும் அதிப்பிரகாசத்தி லிருந்து ஆழ்ந்த நிழல்வரை...இவை களுக்கிடையே நிலவும் ஆயிரக் கணக்கான நிழல் வித்தியாசங் களையும் ... ஒவ்வொரு சிறு பொருளைக்கூட விட்டு விடாமல், நன்றாக பதிவு செய்வதற்கு 'கோடக்' பிலிமே வேண்டும்.




**வெரிக்ரோம்**— பகல் வெளிச்சத்தில் பதிவு செய்யும் எந்தப்படங்களுக்கும் மிகப்பொருத்தமானது.




**சூப்பர்-XX** துரிதமான செயல் காட்சிகளை (ஆக்ஷன் - பிக்சர்ஸ்) படம் பிடிப்பதற்கும் மங்கிய ஒளி வீழும் செயற்கை ஒளியிலும் படம் பிடிப்பதற்கும் இது உதவுகிறது.




**ப்ளஸ்-X** நிழல்களையும் அதேபோல் பிரகாசத்தையும் தெளிவாக பதிய வைத்து அழகான படங்களை தருகிறது. முக்கியமாக, பெரிய என்லார்ஜ்மெண்ட் செய்ய வேண்டிய படங்களுக்கு மிகவும் பொருந்தியது.

● போட்டோ உலகில் 'கோடக்' பிலிம் இணையற்றதென்று நிரூபித்துக்கொண்டு விட்டது. இன்றே இரண்டு ரோல்கள் ... ஒன்று உங்கள் காமிராவில் நிறைக்கவும் இன்னொன்று அதிகப்படியாக கையிருப்பிற்கும் — வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்

**கோடக் லிமிடெட்**
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பம்பாய் • கல்கத்தா
டில்லி • மதராஸ்

K. 9020



**நீங்கள் இன்று**

**உங்கள் பற்களை**


# மக்ளீன்

**செய்தீர்களா?**



**ஆம், அதன் இரகசியம் இதுதான் ...**

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடுநாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும் நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.







க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.




## 7. அசகாய சூரர்!

ஜகதீஷைக் கண்டதும் லால்ஜி ஸேட் எழுந்து நிற்பது போல் பாவனை செய்து அவனை வரவேற்றார். ஜகதீஷ் ஏதோ மந்திர வசப்பட்டவன் போல் அவருடைய வரவேற்புக்கு வணக்கம் தெரிவித்தானே ஒழிய, அவன் முகத்தில் மகிழ்ச்சி என்பதையே காண முடியவில்லை. அவன் முகத்தில் தாங்கவொண்ணாத வேதனைச் சாயைதான் படர்ந்திருந்தது. விஜயலக்ஷ்மி கைகளில் கன்னத்தை ஊன்றிய வண்ணம் பேசாமல் உட்கார்ந்திருந்தாள். ஜுகல் கிஷோர் சிரித்துக் கொண்டே, தனக்கும் ஜகதீஷுக்கும் உள்ள நீண்ட காலத் தொடர்பைச் சொல்லி விட்டுப் பேச ஆரம்பித்தான்.

“ஏன் ஜகதீஷ்! உனக்கு இப்பொழுதெல்லாம் அவகாசம் இருக்கிறதல்லவா?” என்று கேட்டான் ஜுகல் கிஷோர்.

“இருக்கிறது!”

“இருந்தால், நம் ஸேட்ஜிக்கு ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது. அதைக் கொஞ்சம் கவனியேன்!” என்றான் ஜுகல் கிஷோர்.

ஜகதீஷின் பதிலைக் கேட்க வேண்டும் என்ற ஆவலுடன் விஜயலக்ஷ்மி அவனையே கண் கொட்டாமல் பார்க்கலானாள்.

“கவனிப்பதற்கென்ன? கட்டாயம் கவனிக்கிறேன். என்னால் முடியக் கூடியதாக இருந்தால் கட்டாயம் செய்து வைக்கிறேன்!” என்றான் ஜகதீஷ்.

“ஸேட்ஜி அரசாங்க சபைக்கு அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்வதாக இருக்கிறார். உன் உதவியை நாடுகிறார். உன் உதவியில் அவருக்கு அபார நம்பிக்கை இருக்கிறது!”

“இந்தக் காரியத்துக்கு நான் சிறிதும் தகுந்தவன் அல்லவே!”

“அப்படித்தான் சொல்லுவீர்கள்! உங்களைப் போன்றவர்கள் சட்டென்று முடியும் என்று சொல்லி விடுவீர்களா? பத்திரிகை ஆசிரியர்கள் நினைத்தால் எதைத்தான் செய்ய முடியாது?” என்றார் லால்ஜி ஸேட்.

“ஆனால் நான் இப்பொழுது பத்திரிகை ஆசிரியனாக இல்லையே!”

“அதனால் என்ன? இப்பொழுது ஆசிரியராக இல்லாததனால் உங்களுக்கு அறிமுகமானவர்கள் குறைந்து விடுவார்களா?”

“என்னுடைய இந்த அறிமுகங்களையெல்லாம் நம்பிப் பிரயோஜனம் இல்லை. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையாக முடிந்து விடும். பேசாமல் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த மாதிரி வேலைகளையெல்லாம் ஜுகல்கிஷோரிடம் ஒப்படையுங்கள். அவர் கட்டாயம் உங்களுக்கு வெற்றி வாங்கித் தருவார். அவர் ஒருவர் இருந்து விட்டால் போதும், என் தேவை என்ன? யாருடைய தேவையுமே உங்களுக்கு இராது! அவர் அசகாய சூரர்!” என்றான் ஜகதீஷ்.

“நல்ல ஆள் ஐயா, நீங்கள்! இந்தச் சமயம் நீங்கள் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த வேலையை ஏற்றுக் கொண்டால் உங்களுக்குத்தானே ஐயா, லாபம்? அதற்காகச் சொல்ல வந்தால்......!” என்றார் லால்ஜி ஸேட்.


“உங்களுடைய இந்த உபகாரத்துக்கு மிக மிக நன்றி. ஆனால் நான் பிறர் கருணைக்குத் தவங்கிடந்து அதனால் பலன் பெறவோ, வாழவோ விரும்பவில்லை. நான் என்றைக்காவது உங்கள் தயவை நாடி வந்தால் அன்றைக்குப் பார்த்துக் கொள்ளுங்கள்!” என்று வெடுக்கென்று பதில் சொன்னான் ஜகதீஷ்.

அதைக் கேட்ட ஜுகல்கிஷோர் கடகடவென்று உரக்கச் சிரித்தான். பிறகு, “ஸேட்ஜி! இவரை விடுங்கள்! எடுத்த எடுப்பிலேயே இவர் அயர்ந்து விட்டார். இவரால் நம் காரியம் ஆகாது!” என்றான்.

ஜகதீஷ் திரும்பி ஜுகல்கிஷோரை ஒரு முறை பார்த்து இலேசாகச் சிரித்தான். ஜகதீஷின் முகத்தில் இயலாமையும் இளநகையும் கலந்து ஒளி வீசுவது போலத் தோன்றியது விஜய லக்ஷ்மிக்கு. அவ்வளவு நேரமும் பேசாமல் இருந்த அவளும் அவனை மிகவும் வேண்டிக் கொண்டாள். ஆனால் ஜகதீஷ் தன்னை அரசியல் சகதியிலிருந்து அகற்றியே வைத்துக் கொள்ள விரும்புவதாகத் திட்டமான முடிவு சொல்லி விட்டான்.

‘தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்’ என்று ஒரே வழியில் பிடிவாதமாகச் செல்லும் ஜகதீஷைப் போன்ற வாலிபனைத் தங்கள் காரியத்தில் விஜயலக்ஷ்மியும் லால்ஜி ஸேட்டும் எதற்காகச் சேர்த்துக் கொள்ள

விரும்புகிறார்கள்?' என்ற கேள்வி ஜுகல் கிஷோரின் எண்ணத் திரையில் எழுந்தது. அவன் அதற்குப் பதில் கண்டுபிடிக்க முயன்றான். சிரித்த முகத்துடன் அவன் பல கற்பனைகள் புரிந்தான். அவன் அநுபவம் நிறைந்த உள்ளத்துக்கு எத்தனையோ உண்மைக் காரணங்கள் வெளியாயின. ஆனால் ஜகதீஷ் ஏன் முடியாது என்று மறுதளிக்கிறான் என்ற ஒரே விஷயம் மட்டும் தான்



எத்தனை யோசித்தும் அவன் மூளைக்கு எட்டவில்லை. 'ஜகதீஷ் ஏன் இப்படி மாட்டேன் என்று சொல்லி மறுக்கிறான்?' என்ற கேள்வி அவன் மூளையைப் பருந்தாக வட்டமிட்டுத் துளைத்துக் கொண்டிருந்தது.

ஜுகல் கிஷோரும் ஜகதீஷும் சேர்ந்தாற்போலவே எழுந்தார்கள். அவர்களுக்கு விடை கொடுத்தனுப்ப எண்ணி எழுந்த விஜயலக்ஷ்மி, "சரி! நீங்கள்தான் எங்களுக்கு உதவி செய்ய முடியாது என்று சொல்லி நிர்த்தாட்சிண்யமாக மறுத்துவிட்டீர்கள். இருந்தாலும் இவ்வளவு சீக்கிரம் நாங்கள் எங்கள் உரிமையை விட்டுக் கொடுத்துவிட முடியுமா? கடைசிவரை உங்களைத் தொந்தரவு செய்யத்தான் செய்வோம்!" என்றான்.

அதைக் கேட்ட ஜகதீஷ் இளநகை புரிந்தான். அவன் அப்படி இளநகை புரிந்தது இனந் தெரியாத அந்த உரிமையை ஏற்றுக் கொண்டதாகவே தோன்றியது.

பெண்கள் சுதந்திரத்துக்குப் பரம விரோதியான லால்ஜிக்குத் தமது மனைவியின் அந்தப் பேச்சில் மரியாதைக்கு ஏதும் பங்கம் ஏற்பட்டு விட்டதாகத் தோன்றவில்லை. அவள் அப்படிப் பேசியது இழுக்கை விளைவிப்பதாகவும் தோன்றவில்லை. காரியம் ஆக வேண்டும் என்று ஏற்பட்டு விட்டால் யாருக்குமே தவறெல்லாம் கூடச் சரியாகத் தோன்றுவது இயல்புதானே?

பெரியவர்கள் சிறியவர்களிடம் கருணை பாவிப்பதென்றால் பெரும்பாலும் உபதேச முறையைத்தான் கையாள்கிறார்கள். இது நடைமுறை வாழ்க்கையில் நாம் கண்கூடாகக் காணும் விஷயம்.

லால்ஜியின் மனைவி விஜயலக்ஷ்மியைப் போலவே, ஜகதீஷின் மனைவி கோகிலாவும் அழகே உருவானவளாயிருந்தாள். காண்பவர்களின் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவரக்கூடிய வகையில் மிகப் பொலிவுடன் திகழ்ந்தாள். இந்த உண்மையை லால்ஜி ஸேட்டின் தாராளமே உருவமான பக்குவம் நிறைந்த உள்ளம் ஒரு தடவை, இரண்டு தடவை அல்ல; எத்தனையோ தடவை ஒப்புக் கொண்டு விட்டது. யாருக்குமே அழகு இருக்கும் இடத்தில் பார்வை செல்வது இயல்புதானே? கவர்ச்சியில் லயிக்கும் கண்களைக் கட்டுப்படுத்தி வைக்க முடியுமா?

ஜுகல் கிஷோர் படியிறங்கிய வண்ணம், "ஏன் அப்பா ஜகதீஷ்! நீ திருந்தியிருப்பாய் என்றல்லவா இன்றுவரை நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் நீ இன்னும் சரிவரத் திருந்திய பாடாகத் தோன்றவில்லையே!" என்றான்.

"ஆமாம், நீங்கள் எதை முகாந்தரமாகக் கொண்டு இப்படிக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"இதற்கு ஒரு முகாந்தரம் வேண்டுமா? உன் முகமேதான் சொல்லுகிறதே! உனக்கு

எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத முன்பின் அறிமுகம் இல்லாத பிறர்வீட்டுப் பெண் ஒருத்தியை உன் வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருக்கிறாயே! அதற்கு ஏதாவது காரணம் உண்டா? அல்லது அதில் ஏதோ ஒரு இன்பத்தையும் மனத் திருப்தியையும் காண்பதனால் அப்படிச் செய்திருக்கிறாயா?'' என்று மிகவும் வெள்ளையாகக் கேட்டு விட்டான் ஜுகல் கிஷோர்.



ஜுகல்கிஷோரின் அந்தக் கேள்வியைக் கேட்டதும் ஜகதீஷுக்குத் தலை சுழன்றது. கண்களில் பூச்சி பறந்து இருள் கவ்வியது. அந் நிலையிலிருந்து அவன் தன் நிலைக்கு வரச் சிறிது நேரம் பிடித்தது. அதிர்ச்சி அளிக்கும் கேள்வியைக் கேட்டால் யாருக்குமே அப்படிஆவது சகஜம்தானே?

"ஆனால் உனக்காக உயிரையே விட்டுக் கொண்டிருக்கிறாளே, ஒருத்தி! அவளுக்கும் கொஞ்சங்கூட மூளையே இல்லை என்றுதான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் இப்படி உன் ஆட்டத்துக்கெல்லாம் பதில் பேசாமல் பொம்மையாக இருப்பாளா?'' என்று ஜுகல் கிஷோர், தான் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்து விட்டுத்தான் மறு காரியம் பார்த்தான்.

"நல்லது கெட்டது எதுவும்யோசிக்காமல் எதற்காக இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? இம்மாதிரிப் பேச்செல்லாம் ஒருவரை எவ்வளவுதூரம் பாதிக்கும், தெரியுமா? இது போன்ற அநாவசியமான பேச்சுக்கள் பேசுவது உங்களுக்குச் சிறிதும் அழகில்லை. உலகத்தில் இரண்டொரு விஷயங்களைக் கன ஜாக்கிரதையாகவும் வெகு கவனமாகவும் பேச வேண்டும். தெரிந்ததா?'' என்றான் ஜகதீஷ்.

"இரண்டொன்று என்ன? எல்லா விஷயங்களிலுமே நான் வெகு நன்றாகக் கவனம் செலுத்துகிறவன். என்னைக் கேட்டால் நான் கவனம் செலுத்தாத விஷயமே கிடையாது என்றுகூடச் சொல்லுவேன். எந்த எந்த விஷயம் எவ்வளவு எவ்வளவு தூரம்

**பாரதி வாக்கு—4**

பலஹீன ஜந்துக்களுக்கு மனிதன் எது வரை அநியாயம் செய்கிறானோ அது வரை கலியுகம் இருக்கும். அநியாயம் நீங்கினால் கலியில்லை. உலகம் முழுதும் கலியில்லை. "உலகம் முழுதும் அநியாயத்தை விட்டு சமீப காலத்தில் நீங்கு மென்று நினைக்க ஏது இல்லை யாதலால் கிருதயுகம் வரப்போவதில்லை. நாம் மாத்திரம் ஏன் நியாயம் செய்ய வேண்டும்" என்று விபரீதமாக யோசித்து, எவனும் தான் செல்லும் அநியாய வழியிலே தொடர்ந்து செல்லக் கூடாது. எவன் ஒருவன் அநியாயத்தை விடுகிறானோ அவனுக்குக் கிருதயுகம் அந்த க்ஷணமே கைமேலே கிடைக்கும். இதில் சந்தேகம் இல்லை. ஒருவன் கலியை உடைத்து நொறுக்கினால், அவனைப் பார்த்துப் பத்துப் பேர் உடனே நொறுக்கிவிடுவார்கள். இங்ஙனம், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடியாக மனித ஜாதியில் சத்ய யுகம் பரவுதல் அடையும் காலம் ஏற்கெனவே ஆரம்பம் ஆகிவிட்டது.

நமக்கு நலன் பயக்கிறதோ, அவ்வளவு தூரம் அவற்றை நினைவு வைத்துக்கொள்ள வேண்டும், அவற்றில் நன்கு கவனம் செலுத்த வேண்டும் என்பதே என் அபிப்பிராயம். இது விஷயத்தில் நான் துளிக் கூட உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை!" என்றான் ஜுகல் கிஷோர்.

"மறுபடியும் பொய்யா?" என்று கடிந்து கொண்டான் ஜகதீஷ்.

"எனக்கு இப்பொழுது ரொம்பப் பசிக்கிறது. சாப்பாடு பண்ணி வைப்பதாயிருந்தால் சொல்லு. நான் சொல்வதில் துளிக் கூடப் பொய் இல்லை என்பதை நிரூபிக்கிறேன்!" என்றான் ஜுகல் கிஷோர்.

விருந்தோம்பல் விஷயத்தில் ஜகதீஷ் தன் நண்பர்களிடையே மிகவும் பிரசித்தி பெற்றிருந்தான். நண்பர்களை வரவேற்று உபசாரம் செய்து விருந்து செய்து வைப்பதில் ஜகதீஷுக்கு இணை ஜகதீஷ்தான். யார் எந்த நேரத்தில் வந்தாலும் சரி, கோகிலாவின் கைச் சமையலையோ சிற்றுண்டியையோ அருந்தாமல் விடு திரும்ப முடியாது. ஜகதீஷ் அத்தனை தூரம் வற்புறுத்தி அவர்களுக்குச் சாப்பாடு செய்து வைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான். தன் வீட்டுக்கு யாராவது விருந்தாளியாக வந்து விட்டால் ஜகதீஷுக்குச் சிறிதும் தலைகால் புரியாது. மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கிவிடுவான்.

ஜகதீஷ், ஜுகல் கிஷோர் இருவரும் வீட்டை அடைந்தார்கள். கோகிலா சமையல் வேலையை முடித்துக் கொண்டு ஜகதீஷின் வருகையை எதிர் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். அன்று காலை நிகழ்ச்சிக்குப் பின் கோகிலா எத்தனையோ தடவைகள் ஜகதீஷின் முகத்தைக் கவனித்து விட்டாள்.

ஜகதீஷின் முகத்தில் தெறித்து நிற்கும் காம்பீர்யம் என்ன கருத்தை வெளியிடுகிறது? தன்மீது ஏதாவது சந்தேகத்தை உண்டு பண்ணாமல் இருக்கிறதா?—இது போன்ற எண்ணங்கள் கோகிலாவின் கருத்தைக் குடைந்து எடுத்துக் கொண்டிருந்தன. எண்ணாத எண்ணங்கள் எல்லாம் எழுந்து கோகிலாவின் கண்களில் கண்ணீரைத் தேக்கின. நீர் மல்கி நின்ற கோகிலாவின் கண்களைக் கவனிக்க ராதா தவறவில்லை. பெண் உள்ளம் படைத்த அவள் மனத்திலே ஏற்கெனவே பல சிந்தனைகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் என்ன யோசித்தும் கோகிலாவின் கண்களில் கண்ணீர் கசிந்து நிற்பதன் காரணத்தை அவளால் சரிவரக் கண்டு பிடிக்க முடியவில்லை.

"அம்மா! நான் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் இங்கிருந்து போய் விடுவேன். அதற்குள் அவரும் விடுதலை பெற்று வந்து விடுவார்!" என்று ஏதோ பேச்சு வாக்கில் கோகிலாவிடம் சொல்லி வைத்தாள் ராதா.

"ஊஹூம்; கூடாது! அதெல்லாம் நீ அவ்வளவு சீக்கிரம் போகக் கூடாது. நான் உன்னை இலேசில் விட மாட்டேன். என்னுடன் நீ கொஞ்ச நாட்களாவது தங்கி விட்டுத் தான் போகவேண்டும். நீ இங்கே இருப்பது என் மனத்துக்கு எத்தனையோ திருப்தியை அளிக்கிறது!" என்றாள் கோகிலா.

ராதாவும் ஒரு பெண்தானே? அவளுக்குப் பெண்ணுள்ளத்தின் நிலைமை தெரியாதா? அவள் வீட்டில் அவளுக்கு முன்பின் அறிமுகமில்லாத ஒரு பெண் வந்து தங்கினால், அவள் மனத்தில் எத்தகைய சிந்தனைகள் எழும்? இதைக் கற்பனைக் கண்கொண்டு காணும் சக்தி அவளுக்கும் இருந்ததல்லவா? அந்த நிலையைக் கற்பனை செய்து பார்த்த ராதா யோசனையில் ஆழ்ந்தாள். ஆனால் கோகிலா அவளுடைய சிந்தனைக்கு அதிகமாக இடம் கொடுக்க வில்லை. "என்ன சொன்னாய்? விடுதலை பெற்று வருவாரா? உன் கணவர் எங்கே இருக்கிறார்? நீ சொல்வது ஒன்றும் எனக்குச் சரியாக விளங்க வில்லையே!" என்று கேட்டாள்.

ராதாவின் உதடுகள் துடித்தன. ஆனால் கண்களில் ஊற்றெடுத்துப் பெருகி நின்ற நீர் அவளைப் பேச வொட்டாமல் தடுத்து விட்டது. இருந்தாலும் சிறிது நேரத்தில் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டாள். "அவரா? அவர் சிறையில் இருக்கிறார்! இந்த மாதம் அவர் விடுதலையாக வேண்டும். ஊரில் விசாரித்த பொழுது

"இந்தச் செய்தி தெரிந்தது. அதனால்தான் நான் இங்கே புறப்பட்டு வந்தேன் !" என்றான்.

ராதாவின் கணவன் ஏன் சிறைப் பட்டான் என்னும் கேள்வியைக் கேட்டுக் கோகிலா அந்தப் பேச்சை வளர்த்தவில்லை; வளர்த்தவும் விரும்பவில்லை. காரணம் கேட்டு வீணில் பேச்சை வளர்த்துவானேன் என்ற எண்ணத்துடன் மௌனம் சாதித்து விட்டாள். சமையல் வேலையைக் கவனிக்கும் சாக்கில் அங்கிருந்து எழுந்தும் சென்று விட்டாள்.

சமையல் வேலையை முடித்துக் கொண்டு வந்து உட்கார்ந்த கோகிலாவுக்குச் சில வினாடிகளுக்குள்ளேயே காலடி ஓசை கேட்டது. அவளுடைய பழக்கப்பட்ட காதுகளுக்குக் கணவன்தான் வருகிறான் என்பதைப் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை. தன் வழக்கப்படி சட்டென்று எழுந்துபோய் வாசற்புறம் எட்டிப் பார்த்தாள். ஜகதீஷும் ஜுகல் கிஷோரும் படியேறி வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுதும் ஜகதீஷின் முகத்தில் துயரம் தோய்ந்த வண்ணம் தானிருந்தது.

"ஓகோ ! கிஷோர் அண்ணாவா ? வாருங்கள், வாருங்கள் ! வெகு நாட்களுக்கப்புறம் அல்லவா இந்தப் பக்கம் தலைகாட்டியிருக்கிறீர்கள் ! வரவே ஒழியவில்லை போலிருக்கிறது !" என்று மாடி வராந்தாவிலிருந்த வண்ணமே கோகிலா வெகு சௌஜன்யத்துடன் ஜுகல் கிஷோரை வரவேற்றாள்.

"இன்று உன் வீட்டுக்கு விருந்தாளியாகவே வந்து விட்டேன். உன் கைச் சமையலைச் சாப்பிட்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. இன்று நீ முடியாது என்று சொன்னாலும் கல்லடி மங்கனாக உட்கார்ந்து சாப்பிட்டு விட்டுப் போவது என்றே வந்திருக்கிறேன். என்ன, புரிந்ததா ?" என்று கேட்டுக் கொண்டே ஜகதீஷுடன் ஜுகல் கிஷோர் படியேறி வந்தான்.

"இது என்ன, உங்களுக்குப் பிறத்தியார் வீடா ? உங்கள் வீடு போலத்தானே ? வந்தால் வேண்டாம் என்று யாராவது சொல்வார்களா ? சற்று இருங்கள் ! இதோ போய் ஒரு நொடியில் இலை போட்டுச் சாப்பாட்டுக்கான ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் !" என்று சொன்ன கோகிலா கடைக் கண்ணால் கள்ளத்தனமாக ஒரு முறை ஜகதீசைப் பார்த்தாள். அடுத்த நிமிஷம் அவள் அங்கே நிற்கவில்லை. சாப்பிட இலை போடுவதற்காகச் சமையலறையை நோக்கி வேகமாகச் சென்று விட்டாள்.

ஜுகல்கிஷோர் ஊஞ்சலில் போய் உட்கார்ந்தவாறே ஒரு முறை குறுநகை புரிந்தான். ஜகதீஷ் மீது கள்ளத்தனமாகக் கோகிலா வீசிய பார்வையை ஜுகல்கிஷோர் கவனிக்கத் தவறவில்லை. தவறி விட்டால் அப்புறம் அவனை ஜுகல் கிஷோர் என்று எப்படிச் சொல்ல முடியும் ? அவன்தான் ஒவ்வொரு விஷயத்திலும் நுணுக்கமாகக் கருத்தைச் செலவிடுபவன் ஆயிற்றே ! அப்படி

யிருக்கும்பொழுது கோகிலாவின் கண்வீச்சை மட்டும் கவனிக்கத் தவறி விடுவானா?

"ஏன், ஜகதீஷ்! ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இவ்விருவரில் யாராவது ஒருவர் மட்டும் அறியாத அசடாக இருந்தால், ஒருவாறு சமாளித்துக் கொண்டு விடலாம். குடும்பமும் காமா சோமா என்று எப்படியோ நடந்து விடும். ஆனால் இரண்டு பேருமே அசடுகளாக இருந்து விட்டால் என்ன ஆகும்?" என்று திடுதிப் பென்று ஜகதீஷைப் பார்த்து ஒரு கேள்வியைப் போட்டான் ஜுகல் கிஷோர்.

"என்ன ஆகும்? குடும்பம் சரிவர அதிக நாட்கள் நடக்காது. வேறு என்ன?" என்றான் ஜகதீஷ்.

அந்தப் பதிலைக் கேட்ட ஜுகல் கிஷோர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான்.

ஜுகல்கிஷோர் அறியாதபொருள் இந்த அவனியில் கிடையாது. எதிலுமே அவனுக்கு ஒரு அலட்சியம்; எள்ளி நகையாடும் குணம்; ஏளனப் படுத்தும் சுபாவம். சிற்சில விஷயங்களைக் கேட்கும்பொழுதோ சொல்லும் பொழுதோ அவன் முகத்தில் நிறம் மாறும் பச்சோந்தியைப் போலப் பற்பல பாவங்கள் பிரதிபலித்து மறையும்.

மக்களிடையே அவன் பலே கைகாரன் என்று பெயர் பெற்றிருந்தான். அவனுடைய சாமர்த்தியத்தையும் தந்திரத்தையும் யாராலும் மெச்சாமல் இருக்க முடியாது. சுய காரியப் புலி என்றால் அவனைத்தான் சொல்ல வேண்டும். தன்னலத்தைச் சாதித்துக் கொள்வதில் அவன் வெகு நன்றாகத் தீர்ந்து தேர்ந்தவன். எந்தச் சந்தர்ப்பத்தையும் தனது தன்னலத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் அவனை யாருமே மிஞ்ச முடியாது. அவன்மீது யாருக்குமே சிறிதும் நம்பிக்கை கிடையாது. அவர்கள் அப்படி நம்பாமல் இருந்ததே அவனுக்குப் பெரும் நலன் தருவதாக அமைந்தது. அதன் பலனாக அநேக காரியங்களில் அவன் எல்லோருக்கும் முன்னால் நின்றான்.

அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் அல்ல என்பது உலகம் அறிந்த உண்மை. இருந்தாலும் அவன் உதவிக்கு அலாதி மதிப்பு இருந்து வந்தது. ஏனெனில் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதைச் செய்து முடிக்கும் திறன் அவனிடம் அபாரமாக இருந்தது. ஜுகல்கிஷோர் ஒரு காரியத்தில் இறங்குவது, அது முடியாமல் இருந்தது என்ற பேச்சே ஒரு பொழுதும் எழுந்தது கிடையாது. ஆனால் ஒன்று; அவனிடம் இலவச உதவி பெறுவது என்பது இயலாத காரியம். அவன் உதவியை நாடுபவர்கள் உதவிக்கு ஏற்ற உயர்ந்த ஊதியத்தைக் கொடுக்க முன் வந்தால்தான் அவனுடைய உதவியைப் பெற முடியும். அவர்கள் கொடுக்கும் ஊதியத்தைக் காட்டிலும் அதிகமாக இன்னொருவர் கொடுக்காத வரையில்

அவனுடைய உதவி அவர்களுக்கு இடைவிடாமல் கிடைத்துக் கொண்டிருக்கும். அப்படி யாராவது அவர்களைக் காட்டிலும் அதிகமாகப் பொருள் கொடுக்க முன்வந்து விட்டால், அவர்களுடைய காரியத்தை அப்படியே அரைகுறையாக அந்தரத்தில் தொங்க விட்டு விட்டுப் போய் விடுவான். அதனால் அவனுடைய உதவியை நாடுபவர்களுக்கு இன்னொரு பொறுப்பும் வேறு சுமந்திருந்தது. தாங்கள் கொடுப்பதைக் காட்டிலும் பிறர் அதிகமாகக் கொடுத்து அவனைக் கெடுக்க முன் வராமல் இருக்கிறார்களா என்பதையும் அவர்கள் கண் குத்திப் பாம்பாகக் கவனித்து வரவேண்டும். அவர்கள் அவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தால்தான் அவர்களுடைய காரியம் இடையூறின்றிக் கைகூடும்.

அவன் ஈடுபாடு கொள்ளாத விவகாரமே இந்த உலகத்தில் கிடையாது. எந்த விஷயத்திலும் அவனுக்குப் பரந்த அநுபவம் ஏற்பட்டிருந்தது. பொதுக் கூட்டம் கூட்ட வேண்டுமா? எதற்காகவாவது சந்தா, நன்கொடை முதலியவை வசூலிக்க வேண்டுமா? செய்தித் தாள்களுக்குக் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டுமா? என்ன செய்ய வேண்டும்? எதையும் அவன் கன லாகவமாகவும் வெகு நேர்த்தியாகவும் செய்து தந்து விடுவான். ஆரிய சமாஜிகளின் சார்பில் பொதுக் கூட்டம் போடுவதனால் தனக்கு அதிகப் பிரயோசனம் கிடைக்கக்கூடும் என்று தெரிந்து விட்டால், மூர்த்தி பூஜை செய்யும் சநாதனிகளைச் சட்டென்று கைகழுவி விடுவான். ஆனால் அதே கையோடு கையாகச் சிவன் கோவில் கட்டுவதற்கான திட்டம் வகுத்து யாராவது அந்தக் கைங்கரியத்தில் இறங்கினால், சிறிதும் சங்கடமோ சங்கோசமோ படாமல் தர்மத்தில் தீவிர ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர்களைக் கண்டு நன்கொடை வசூலித்து வரப் புறப்பட்டு விடுவான். யாராவது தன்னைப் பார்த்து, 'ஏன், அப்பா! ஆரியசமாஜிகளுடன் சேர்ந்து கொண்டு உருவ வழிபாட்டை எதிர்த்தாயே என்று கேட்டு விட்டால் என்ன செய்வது?' என்ற எண்ணமே அவனுடைய இருதயத்தில் இடம் பெறுவதில்லை.

வெளிநாட்டுப் பொருள்களை யாரும் வாங்கக்கூடாது. பஹிஷ்கரிக்க வேண்டும் என்று பெருங்கூட்டம் கூட்டிக் காரசாரமாகச் சொற்பொழிவு நிகழ்த்துவான். ஆனால் அவனே வெளிநாட்டுப் பொருள்களுக்குப் பெரிய ஏஜென்ஸி வைத்திருப்பான். அதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், அவன் உபயோகிக்கும் பொருள்களில் வெளிநாட்டுப் பொருள்களைத் தவிர உள்நாட்டுப் பொருள்களில் மருந்துக்குக் கூட ஒன்று இராது. யாராவது பிரபலஸ்தர்கள் மீது வழக்குத் தொடுக்க வேண்டுமென்றால் அவனைப் போல் ஆதரம் காட்டுபவர்கள் இந்த உலகத்தில் யாருமே இருக்க முடியாது. கூடமாட இருந்து நடத்திக் கொடுக்கக் கஜ்ஜை கட்டிக் கொண்டு வந்து சேர்ந்து விடுவான். அவன் கட்சியில் யார் சேருகிறார்களோ, அவர்களைப் பற்றிய புகழுரைகள் பத்திரிகைகளில் பத்தி பத்தியாகப் பிரசுரமாகத் தொடங்கிவிடும்.

பங்கு மார்க்கெட்டு, தரகு வியாபாரம், சூதாட்டம், காவாலிகள் கும்பல் போன்ற எத்தனையோ விஷயங்களுக்கு அவன் பலமுறை தலைவனாகித் தொண்டு புரிந்ததுண்டு. அவன் களவாணிகளுக்கு உளவாளி என்றும் எத்தனையோ கள்ளப் பொருள்கள் வைத்திருக்கிறான் என்றும் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அதுமட்டும் அல்ல; அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைத் தன் கைக்குள் அவன் போட்டுக் கொண்டிருப்பதாகக் கூட வதந்தி உலவி வந்தது. அதனால் அவனைக் கண்டாலே ஜனங்கள் கதிகலங்கிப் போய் நான் முந்தி, நீ முந்தி என்று முண்டியடித்துக் கொண்டு போய் அவன் உதவியை நாடுவதற்கும், அவன் தயவைப் பெறத் தவங் கிடப்பதற்கும் துடியாய்த் துடித்தார்கள் என்றால் அவனுக்குச் சமூகத்தில் இருந்த செல்வாக்கை என்னவென்று சொல்லுவது? சுருங்கச்சொல்லப் போனால், ஜூகல் கிஷோர் தற்காலத்திய உலகத்தின் கன்னங்கரிய மையிருளில் பளிச்சிடும் புதியதோர் ஜாஜ்வல்யமான நக்ஷத்திரமாகத் திகழ்ந்தான்.



"என்ன ஸார்! இப்படிப் பேசக் கூட முடியாமல் தாடி வளர்த்து விட்டீர்கள்?"
"என்னை எல்லோரும் அதிகப் பிரசங்கி என்று சொல்லுகிறார்கள். அதற்காக......"

ஆங்கில மொழியில் அவனுக்கு இருந்த அறிவும், மற்றத் துறைகளில் அவன் பெற்றிருந்த அநுபவங்களும் அவனை அசாதாரண ஆற்றல் பெற்றவனாகக் காட்டி மெருகு ஏற்றி வைத்திருந்தன. கல்லூரி வாழ்க்கையிலே அவன் ஏழெட்டு வருஷங்களைக் கழித்திருந்தான். அந்தக் காலத்திலேயே அவன் அநேகருடன் நெருங்கிப் பழகி அறிமுகமும் செய்து கொண்டிருந்தான்.

மற்ற மாணவர்கள் கொண்டு வந்திருக்கும் உணவை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துச் சாப்பிட்டு விடுவது, அவர்களைப் பயமுறுத்திப் பரிக்ஷையின் பொழுது விடைகள் எழுதி வாங்கிக் கொள்வது, தன்னிடமுள்ள மண்ணெண்ணெய் தீர்ந்து விட்டால் சிறிதும் அச்சம் இன்றிப் பேராசிரியரின் பங்களாவுக்குள் புகுந்து மண்ணெண்ணெய்த் தகரத்தை எடுத்து வந்துவிடுவது, தன்னுடைய 'ஸ்டவ்' உடைந்து விட்டால் ஆராய்ச்சிச் சாலையில் உள்ள ஸ்டவ்வை அப்படியே 'அபேஸ்' செய்துகொண்டு வந்துவிடுவது. இதுபோன்ற அற்பத்தனமான செயல்களில் அவனை மிஞ்ச அந்தக் கல்லூரியிலேயே யாரும் கிடையாது.

ஜகதீஷ் கல்லூரி வாழ்க்கையின் பொழுதே அவனுக்கு அறிமுகமானவன். ஜகதீஷைக் காட்டிலும் அவன் வயதில் எவ்வளவோ பெரியவன். இருந்தாலும் கல்லூரி வாழ்க்கையில் உள்ள ஒரு விசேஷம் என்னவென்றால், அறிமுகம் செய்து கொள்வதற்கும் பரஸ்பரம் நெருங்கிப் பழகுவதற்கும் வயது ஒரு குந்தகமாக நிற்பதில்லை.

கல்லூரியின் வருஷாந்திர விழாவுக்கென்று சேகரிக்கும் தொகையிலிருந்து தெரியாமல் அவன் திருடித் தின்று விடுகிறான் என்பதற்காக எத்தனையோ மாணவர்கள் அவன் மீது குற்றம் சாட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானமே கொண்டுவந்தார்கள். அதுமட்டுமா? அவனோடு ஒத்துழையாமை இயக்கம்கூடத் துவக்கி விட்டார்கள். அந்த ஒத்துழையாமை இயக்கத்தைச் சமாளிப்பதற்காக வேண்டி அவன் ஜகதீஷைப் போன்ற உற்சாகமே உருவான புதிய மாணவர்களைத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டான். பழைய மாணவர்களை ஒருபுறமாக ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புது மாணவர்களைக் கொண்டு ஒரு புதிய சங்கம் ஸ்தாபித்து வெகு நேர்த்தியாகவும் வெற்றிகரமாகவும் அதை முன்னுக்குக் கொண்டு வந்து விட்டான். அந்தக் காலத்தில் ஜகதீஷ் அவன் கட்சியில் இருந்து கொண்டு அவனுக்கு எத்தனையோ உதவிகள் புரிந்திருக்கிறான். அதன் காரணமாக அந்த நாள் முதற்கொண்டே அவனுக்கு ஜகதீஷிடம் அலாதிப் பற்றுதலும் பிடிப்பும் ஏற்பட்டு விட்டன.

ஜகதீஷ் டெபுடி கலெக்டராக இருந்த பொழுது, ஜுகல் கிஷோர் தனது நட்பை வெகு சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டு அவன் மூலம் எத்தனையோ குடியானவர்களுக்கு நிலம் வாங்கித் தந்து அவர்களிடமிருந்து பணம் பறித்துச் சாப்பிட்டு விட்டான். ஜுகல் கிஷோர் ஒருவனைத் தவிர வேறு யாரும் குடியானவர்களிடமிருந்து பணம் பறித்துச் சாப்பிட்டிருக்க முடியாது. வேறு யாராவது அப்படிச் செய்திருந்தால் அவர்களுக்கெதிராக அவதூறு வழக்குத் தொடர்ந்து சந்தி சிரிக்க வைத்திருப்பார்கள். அவன் விஷயத்தில் எந்தக் குடியானவனுமே மூச்சுப் பரியவில்லை. காரணம் என்ன? ஜுகல் கிஷோர் அவர்களுடைய காரியத்தைச் சிறிதும் மோசடி செய்யாமல் முடித்துக் கொடுத்தது தான். அவன் அப்படி முடித்துக் கொடுத்ததற்குக் காரணம் அவன் நண்பனான ஜகதீஷ் டெபுடி கலெக்டராயிருந்ததுதான். மேலதிகாரி என்ற முறையில் ஜகதீஷினால் இவ்விஷயத்தில் செய்ய முடியாத காரியம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒன்றும் இல்லையல்லவா? குடியானவர்களுக்கு என்ன? காரியம் ஆனால் சரி! அப்புறம் எதற்காகக் குறைகூறப் போகிறார்கள்?

ஜகதீஷ் உத்தியோகத்தை விட்டு விட்ட பிறகும்கூட ஜுகல் கிஷோருக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு எப்பொழுதும் போலச் சாதாரணமாக இருந்து கொண்டே இருந்தது. கெட்டவர்கள் என்று கருதப்படுபவர்களுடன் ஒரு தடவை நட்போ, தொடர்போ ஏற்பட்டு விட்டால், அது சட்டென்று முறிந்து விடுவதில்லை. அது எந்த விதத்திலாவது தொடர்ந்து இருந்து கொண்டே தானிருக்கும். ஜுகல் கிஷோரின் போக்கிரித்தனமான செய்கைகளினால் ஜகதீஷுக்கு எந்த விதமான பெருந் தீமையோ கஷ்டமோ நேர்ந்துவிட வில்லை. ஜகதீஷின் வீட்டில் கூடும் நண்பர்கள் கூட்டங்களில் சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் ஜுகல் கிஷோரும் வந்து கலந்து கொள்வது உண்டு. ஜுகல் கிஷோருடன் நட்புரிமை பாராட்டுவது நல்லதில் கொண்டு விடாது என்று எத்தனையோ நண்பர்கள் ஜகதீஷை எச்சரித்திருக்கிறார்கள். ஆனால் ஜகதீஷ் அவர்களுடைய அந்த வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டதில்லை. "அவன் போக்கிரி என்பதற்கு என்னிடம் எத்தகைய அத்தாட்சியும் இல்லையே! அப்படியே அவன் போக்கிரியாக இருந்தாலும் எனக்கு எதிராக அவன் எத்தகைய தீச்செயலும் செய்ய வில்லையே! அப்படியிருக்கும் பொழுது அவனுக்குக் கெட்டவன் என்று பட்டம் சூட்டி நீ என் வீட்டுக்கு வராதே என்று நான் எப்படித் தடுக்க முடியும்? எதற்கும் ஒரு முகாந்திரம் வேண்டும் அல்லவா?" என்று அவன் எதிர் வாதம் புரிந்தே தன்னைச் சமாளித்து வந்திருக்கிறான்.

அன்று அவர்கள் இருவரும் சேர்ந்தே வீட்டுக்கு வரும்படியான கட்டம் வந்து விட்டது. அப்பொழுதுதான் பேச்சுவாக்கில் ஜுகல் கிஷோர் ஜகதீஷைப் பார்த்து, "கணவனும் மனைவியும் அசடுகளாயிருந்தால் என்ன ஆகும்?" என்று கேட்டு வைத்

## ‘ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் விஷயமான ஒரு உண்மைக்கதை...!


# ‘என் நல் தருணம் எனக்கு ஒப்பற்ற உதவி அளித்தது’!

என் நண்பர் புதல்வர் என்னை இன்ஷூர் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினர். என் தொழில் வெகு நன்றாக இருந்தது. இன்ஷூர் செய்யவேண்டுமென்று எனக்கு தோன்றவில்லை. ஆனால் அவரிடம் கண்ட உற்சாகமும் இளமையும் என்னை அவருக்கு தூண்டுதல் அளிக்கும்படிச் செய்தன. அவரை உற்சாகப்படுத்துவதற்காகவும் என் நண்பருக்கு சந்தோஷமளிப்பதற்காகவும் ஒரு ன்யூ இந்திய பாலிஸி எடுத்துக்கொள்ள நான் ஒத்துக்கொண்டேன்.

சில வருடங்களுக்கு பின்னர், என் தொழில் தளர்ச்சி அடைந்தது. நான் தொடுவதெல்லாம் தோல்வியே போல் தோன்றிற்று. என் தொழிலுக்கு பெரும் கோட்டம் விளைந்துவிட்டது. என் பங்காளியும் என்னுடன் என் தொந்தரவுகளை பகிர்ந்துகொள்ள முடியாமல் மிக அசௌகரியமடைந்திருந்தார். நானே தொழிலை திருத்தி அமைக்கவேண்டியிருந்தது. அதற்கு அவசியமான பொருள் எங்கிருந்து வரும்? பொருளுக்கு ஒரே வழிதானிருந்தது. என் மனைவிக்கு களிப்பும் பெருமையும் அளித்துவந்த என் வீட்டை விற்கவேண்டும் நிலைமையிலிருந்தேன்.

அத்தருணத்தில் என் இளம் நண்பர் என் "ன்யூ இந்தியா" என்டௌமென்ட் பாலிஸி விரைவில் மச்சூர் ஆகிறது என்று தெரிவித்தார். எவ்வளவு அற்புதமான ஒத்தாசை! தகுந்த சமயத்தில் எனக்கு அவசியமான பொருள் கிடைத்துவிட்டது.

நான் ஒருவருக்கு உதவி செய்ததாக
நினைத்துக்கொண்டிருந்தேன்.
அது எனக்கே செய்துகொண்ட
இணையற்ற உதவியாக மாறிவிட்டது.



இன்று நீங்கள் எடுத்துக்கொள்ளும்
ஒரு இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி உங்களை
மிக ஆபத்தான கடுவில் காப்பாற்றி
விடலாம். பூர்ண தகவல்களுக்கு இன்றே
எழுதுங்கள்:

## ன்யூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

மகாத்மா காந்தி ரோட், பம்பாய். 1.

NI. 8092

தான். 'குடும்பம் அதிக நாட்கள் ஓடாது! என்று ஜகதீஷ் சொன்ன பதில் அவனை யோசனையில் ஆழ்த்திவிட்டது. அந்த யோசனை கலைந்து ஒரு முடிவுக்கு வர அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தது. "உன் பதில் சரியில்லை. கணவன் - மனைவி இருவரும் அசடாயிருந்தால் கூடக் குடும்பம் நடந்து விடும். ஆனால் இருவரில் யாராவது ஒருவர் கொஞ்சங் கெட்டிக்காரராக அமைந்து விட்டால் குடும்பம் வெற்றிகரமாகவே நடக்கும்!" என்றான்.

"அது சரி! இந்த விஷயத்தில் நாம் இவ்வளவு தூரம் வேதாந்த சர்ச்சை செய்ய வேண்டியது அவசியம்தானா என்று கேட்கிறேன்!" என்றான் ஜகதீஷ்.

"அதற்காகச் சொல்லவில்லை. உன் முகத்தைப் பார்க்கும்பொழுது இன்றைக்கு வீட்டில் ஏதோ புதிதாக நடந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அதற்காக நீயும் கோகிலாவும் நன்றாகச் சண்டை பிடித்திருப்பீர்களோ என்று எண்ணினேன். ஆனால் என் எண்ணம் சரியானதில்லை, தவறானது என்பது இங்கு வந்தபின்தான் தெரிந்தது!" என்றான் ஜுகல் கிஷோர்.

"அது எப்படித் தெரிந்தது?"

"எப்படியென்று கேட்கிறாய்? கோகிலா உன்னைப் பார்த்த பார்வையிலிருந்துதான் தெரிந்தது!"

"கோகிலா பார்த்த பார்வையி லிருந்தா? அவள் என்னை எப்படிப் பார்த்தாள்?"

"உனக்கும் அவளுக்கும் கல்யாணமாகி எத்தனையோ வருஷங்களாகி விட்ட பின்னரும் கூட இப்பொழுதுதான் கல்யாணம் ஆனவன்போல் அல்லவா பார்க்கிறான்! அவன் பார்வையில் தாண்டவமாடும் ஆச்சரியத்தைக் கொண்டுதான் நான் எண்ணியது தவறு என்பதைத் தெரிந்து கொண்டேன்!" என்றான் ஜுகல் கிஷோர்.

"அது சரி! அதற்காக இப்பொழுது என்ன வந்து விட்டது?"

"அதனால்தான் சிறிது நேரத்துக்கு முன் உங்கள் இரண்டு பேரையுமே அசடுகள் என்று முடிவு கட்டினேன். நீ அசடு என்பதுதான் எனக்கு முன்பே தெரிந்த விஷயம் ஆயிற்றே! இன்று கோகிலாவைப் பார்த்த பின் அவளையும் உன் கோஷ்டியில் சேர்த்து விட்டேன்! நான் செய்தது சரிதானே?" என்று கேட்டான் ஜுகல் கிஷோர்.

"அது இருக்கட்டும்! நாங்கள் இரண்டு பேரும் நன்றாகச் சண்டை பிடித்திருப்போமென்று எண்ணியதாகச் சொன்னீர்களே! அப்படி உங்களுக்குச் சந்தேகம் உண்டாவதற்கு என்ன காரணம்?" என்று ஆச்சரியம் தொனிக்கும் குரலில் கேட்டான் ஜகதீஷ்.

"அதற்குக் காரணம் வேறு சொல்ல வேண்டுமா? உலகம் முழுவதும் எதற்காகச் சண்டை போடுகிறதோ, அதற்காகத்தான்!"

"அப்படி யென்றால்......? நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்குச் சரியாக விளங்கவில்லையே!"


"விளங்கவில்லையா? என்ன, போ! கணவனுக்கு மனைவிமேல் சந்தேகம்; மனைவிக்குக் கணவன்மேல் சந்தேகம்! இப்படிச் சந்தேகம் ஏற்பட்டு விட்டால் அப்புறம் சண்டை வரவேண்டியதுதானே? இந்த உலகத்தில் எழுபத்தைந்து சத விகிதம் சண்டைகளுக்குக் காரணம் இது போன்ற சந்தேகங்கள்தான். இது தெரியுமோ உனக்கு?" என்றான் ஜுகல் கிஷோர்.

ஜகதீஷுக்கு அப்பொழுதுதான் கொஞ்சம் புரிந்தது. "ஆமாம், நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? எங்கள் கணவன், மனைவிக்குள் எதற்குச் சந்தேகம் வரவேண்டும்?" என்று கேட்டான்.

"நீ உன் வீட்டில் ஒரு சந்தேகாஸ்பதமான பெண்ணுக்கு அடைக்கலம் அளித்திருக்கிறாய். அதனால்தான்...!" என்று கூறி ஜகதீஷைப் பார்த்தான் ஜுகல் கிஷோர்.

அதைக் கேட்ட ஜகதீஷுக்குத் தூக்கி வாரிப் போட்டது "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"எனக்கு மட்டும் என்ன? இந்த நகரம் முழுவதுக்குமே தெரியுமே!" என்றான் ஜுகல் கிஷோர். (தொடரும்)




## 1. எப்படிக் கிடைத்தது?

கந்தன் ஒரு தொழிலாளி. அவன் கடலில் கட்டு மரத்தைப் பாய்ச்சிச் சென்று மீன்களை வலையில் பிடித்து வருவான். அவைகளை விற்று ஜீவனம் நடத்தி வந்தான். ஆம், அவன் ஒரு செம்படவன்.

ஒவ்வொரு சமயம் மீன்களுடன் பெரிய சங்குகள், சோழிகள் கிடைக்கும். இவைகளையெல்லாம் வேடிக்கை பார்க்க வரும் வெளிநாட்டு யாத்திரிகர்கள் ஐந்து ரூபாய், அல்லது பத்து ரூபாய் கொடுத்து அதிசயப் பொருளாகக் கருதி வாங்கிப் போவார்கள். அப்பொழுது கந்தனும் அவன் மனைவியும் தங்களுக்கு ஏதோ ஒரு புதையலே கிடைத்து விட்டாற் போல் மகிழ்ச்சியடைவார்கள்.

ஒரு சமயம் கந்தனுடைய வலையில் மிகவும் குறைவாக மீன்கள் அகப்பட்டன. இதைக் கண்டு அவன் மனம் மிகவும் சோர்வடைந்தது. ஆனால் வலையிலிருக்கும் மீன்களைக் கரையில் எடுத்துப் போட்ட போது, அதிலிருந்து பெரிய முத்து அகப்பட்டது. கரையில் அவன் வலையைச் சூழ்ந்து நின்றவர்கள் எல்லாருடைய கண்களும், அந்த முத்தைக் கண்டபோது அகலமாக விரிந்தன.

அப்படிச் சூழ்ந்து நின்றவர்களில் இரண்டு நவநாகரிக இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் இதைப் பார்த்து விட்டு, "ரொம்பப் பெரிய முத்து. இவ்வளவு பெரிய முத்து காண்பதே அரிது. ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்க்குக் கூட விலை போகலாம்" என்று பேசிக்கொண்டே அவ்விடத்தை விட்டுப் போனார்கள்.

இந்த மொழிகள் கந்தனுடைய காதுகளில் நன்றாக விழுந்தன.

கந்தனுக்குப் பெரிய முத்து கிடைத்திருக்கும் செய்தி அந்தச் செம்படவச் சேரி முழுதும் வெகு வேகமாகப் பரவி விட்டது. எல்லோரும் இந்த அதிசயப் பொருளை ஆவலுடன் பார்க்க வந்தனர்.

அன்றிரவு கந்தனுக்குத் தூக்கமே வரவில்லை. தன் மனைவி வள்ளியிடம், அந்த முத்து ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய்க்கு விலை போகும் என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டான். அந்த ரூபாயில் இந்தக் குடிசையைப் பிரித்து விட்டு ஒரு கல் கட்டிடமே கட்டிவிடப் போவதாகக் கூறினான். வள்ளிக்கு இரண்டு வடத்தில் தங்கச் சங்கிலியும் காதுக்குத் தோடும் வாங்கிப் போடப் போவதாகக் கூறினான். நிறையச் சேலைகள், தனக்குச் சரிகை வேட்டி, பட்டுச் சொக்காய் முதலியவை வாங்கிக் கொள்ளப் போவதாகக் கூறினான். இவ்வளவும் சொன்ன பிறகு, "வள்ளி, இத்தனை சாமான்கள் வாங்கிய பிறகும் கையில் பணம் மிஞ்சும். அதை என்ன பண்ணுவது? அதற்கு என்ன வாங்கலாம்?" என்றான்.

"எனக்கு ஒன்றும் தெரியவில்லை" என்று கூறினாள் அவன் மனைவி வள்ளி.

கந்தன் உடனே கையைச் சொடுக்கினான். ஆம், அவனுக்கு ஒரு யோசனை 'பளிச்' என்று தோன்றி விட்டது. "வள்ளி, ஆமாம், மிச்சமுள்ள அந்தப் பணம்

செலவாகும் வரையில் நான் கடலிலே போக மாட்டேன். மீன்பிடிக்கப் போக மாட்டேன். வீட்டில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்து சாப்பிடப் போகிறேன்" என்றான்.

இத்தனை நாழிகையும் கந்தன் பேசிக் கொண்டு வந்ததற்கு எதிர்ப்பேச்சுப் பேசாதிருந்த வள்ளி, "நீங்க என்ன வேண்டுமானாலும் செலவு செய்யுங்க! ஆனால் கடலிலே போக மாட்டேன் என்று மட்டும் சொல்லாதிங்க! உடம்பிலே பலமிருக்கிற மட்டும் குலத் தொழிலை விட்டு விடக் கூடாதுங்க!" என்றாள்.

இதைக் கேட்டபோது, "ஆமாம், நீ தான் ரொம்ப கண்டாய்! பெரிசா உபதேசம் பண்ண வந்துட்டா, உபதேசம்" என்று அவன் மேல் எரிந்து விழுந்தான்.

தன்னை இத்தனை நாளும் கந்தன் கடிந்து அறியாத வள்ளி இதைக் கேட்டுத் திடுக்கிட்டு, மௌனமா யிருந்தாள்.

சற்று நேரத்துக்கு எல்லாம் வள்ளி தூங்கி விட்டாள். கந்தனுக்குத் தூக்கம் வரவில்லை. தனக்குப் பொழுது விடிந்து ஆயிரமோ இரண்டாயிரமோ கிடைத்து விட்டால் அதை எப்படிச் செலவு செய்வது என்ற யோசனையிலேயே தூங்காமல் இரவுப் பொழுதைக் கழித்து விட்டான்.

கிழக்கே கடலும் வானமும் கூடும் இடத்திலே செவ்வானம் படர்ந்தது. அருணோதயமாகி விட்டது. கீச் மூச் சென்று பறவைகள் கத்திக் கொண்டும் சிறகுகள் அடித்துக் கொண்டும் இங்குமங்கும் பறக்கத் தொடங்கி விட்டன.

அந்தச் சேரியிலிருந்த மற்றச் செம்படவர்கள் எல்லாம் கட்டு மரத்தைக் கடலில் பாய்ச்சி மீன் பிடிக்கச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பரபரப்பு ஒலி கந்தன் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. இவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டு கந்தன் தன் பாயின் மீது உட்கார்ந்திருந்தான்.

"நீங்க இன்னிக்கு மீன் பிடிக்க போகவில்லையா?" என்று கேட்டாள் வள்ளி, பயந்து கொண்டே.

"இல்லை!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னான்.

இன்னும் அதிகமாகப் பேசினால் கந்தனுக்குக் கோபம்தான் வரும் என்பதைக் கண்டு கொண்டாள். எனவே மேற்கொண்டு அவனிடம் பேச்சுக் கொடுக்க அவள் விரும்ப வில்லை.

வழக்கம்போல் எழுந்திருந்து முகத்தைக் கழுவிக் கொண்டு ஆண்டவனைத் துதித்து விட்டு, கந்தனுக்கு கேழ்வரகுக் கூழைக் கரைத்துக் கொண்டு வந்து அவன் முன்

## பிரபல திருமணங்கள்



சுப்புரத்தினம் — முத்துசாமி

திருப்பூரை அடுத்த அமராபதிபாளையம் பிரபலஸ்தரும் திருப்பூரிலும் அமராபதிபாளையத்திலும் பல பொது சேவைகளில் ஈடுபட்டுவருபவருமான ஸ்ரீ ஆர். கே. கே. இராமசாமி செட்டியார் அவர்களின் சகோதரர் ஸ்ரீ ஆர். கே. ஆர். குமாரசாமி செட்டியார் புதல்வி சௌ. சுப்புரத்தினத்துக்கும் அன்னாரின் மைத்துனர் குடியாத்தத்தில் நூல் ஜவுளி வியாபாரம் செய்யும் ஸ்ரீ எம். வயிரப்ப செட்டியார் குமாரன் சிரஞ்சீவி முத்துசாமிக்கும் திருப்பூர், மங்களூர், காரைக்குடி, அருப்புக்கோட்டை முதலிய இடங்களில் கைத்தறி ஜவுளி வியாபாரம் செய்யும் ஸ்ரீ ராஜலிங்கம் செட்டியார் புதல்வி சௌ. சுசீலாவுக்கும் அன்னாரின் மைத்துனர் ஸ்ரீ வி. சிதம்பரம் செட்டியார் குமாரன் சிரஞ்சீவி வெகுப்பிரமணியத்துக்கும் ஜூன் 11உ இரவு திருமணங்கள் வெகு விமரிசையாக நடந்தேறின. மணமக்களை வாழ்த்தி பல இடங்களிலிருந்தும் வாழ்த்துத் தந்திகளும் வாழ்த்துப் பத்திரங்களும், பரிசுகளும் வந்தன. மறுநாள் காலை திருப்பூர் நகரசபைத் தலைவர் ஸ்ரீ கே. என். பழனிச்சாமி கவுண்டர். எம். எல். ஸி., அவர்கள் முன்னிலையில் திருச்சி வல்லபை பாட்டு, காரைக்குடி கமலா டான்ஸ், மதராஸ் கனகாம்புஜம் மிருதங்கம், இவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. வாழ்த்துச் செய்திகள் அனுப்பி எங்களை கௌரவித்த அனைவருக்கும் தனித் தனியே நன்றி கூற இயலாமையால் இதன் மூலம் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். வாழ்க மணமக்கள்!



சுசீலா — வெகுப்பிரமணியம்

னுல் வைத்தான். அதைக் குடித்து விட்டு, கையில் தனக்குக் கிடைத்த பெரிய முத்தை எடுத்துக் கொண்டு தன் குடிசையை விட்டு வெளியே புறப்பட்டான்.

*   *   *

கடற் கரையிலிருந்தது செம்படவர் குடியிருப்பு. அங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் பெரிய பட்டணம் இருந்தது. செல்வம் நிறைந்த பட்டணம். பல தேசத்து வியாபாரிகள் வந்து வர்த்தகம் புரியும் பட்டணம். மேற்கே அந்தப் பட்டணத்து வீதிகளில் எப்பொழுதும் கூட்டம் 'ஜே ஜே' என்றிருக்கும். அந்த வீதிகள் ஒன்றில் தங்கம், வைரம், முத்து வியாபாரிகள் இருந்தார்கள். அந்தத் தெருவில் நுழைந்தான்.

கந்தன் ஒவ்வொரு கடையாகப் பார்த்துக் கொண்டே சென்ருன். ஒரு கடையில் நுழைந்தான்.

நுழையும்போதே ஆடு திருடின கள்ளன் மாதிரி கந்தன் திரு திரு வென்று விழித்துக் கொண்டே நுழைந்தான். நகரத்துச் சல சலப்பையும் பரபரப்பையும் அவன் இதற்குமுன் கண்டறியாதவன். இப்பொழுது கண்டவுடன் அவனுக்கு ஒரே திகைப்பு. அந்தத் திகைப்பில் தான் அவன் ஆடு திருடிய கள்ளனைப் போல் அப்படித் திருதிரு என்று விழித்தான்.

தங்க வியாபாரி, இவன் நடை உடையும் விழிக்கும் மாதிரியையும் கண்டு, ஐயமுற்ருர். அவர் மனத்தில் ஏதோ ஒரு சந்தேகம் உதித்தது.

"யாரப்பா நீ! எங்கே வந்தாய்? உனக்கு என்ன வேணும்?" என்று அதட்டுவது போல் கேட்டார்.

கந்தன் தன் இடுப்பிலிருந்து மெள்ளத் தான் முதல் நாள் கடலிலிருந்து கண்டெடுத்த முத்தை வெளியே எடுத்துக் காண்பித்தான்.


வியாபாரி அதைக் கையில் வாங்கி ஆச்சரியத்தோடு மேலும் கீழும் பார்த்தார். அந்த முத்தைக் கண்டு வியந்தார்.


"ஆமாம், இது உனக்கு எப்படிக் கிடைத்தது? அல்லது எங்கே திருடிக் கொண்டு வந்தாய்?" என்று மிகவும் கடுமையான குரலில் கேட்டார்.

கந்தன் தலை கிறு கிறு என்று சுழலத் தொடங்கியது! "திருடிக் கொண்டா .." என்று அரை குறையாகச் சொன்னவன் மயக்கம் போட்டு அப்படியே சுவர் ஓரமாகச் சாய்ந்தான்.


கந்தன் எளிய சுபாவம் படைத்தவன். அபாண்டமான பழி பாவம் கேட்டுக்கூட அறியாதவன். தங்க வியாபாரி இப்படி அபாண்டமான பழியைச் சுமத்தியவுடன், தலை சுழன்றது; உடம்பு வெலவெலத்து விட்டது. மயக்கமடைந்து விட்டான். தங்க வியாபாரியின் கடையில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. (தொடரும்)

## கிடைத்து விட்டது!





# அதிர்ஷ்டக் குழந்தை



தில்லை வாசி

என் கணவர் சாப்பிட்டு விட்டுக் காரியாலயத்துக்குப் போயிருந்தார். நானும் சாப்பிட்டு, சமையல் அறையில் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டுத் தெருப் பக்கமாக வந்தேன்.

"அம்மா, தாயே! இந்தக் குழந்தைக்குக் கொஞ்சம் இரங்குங்கள்!" என்று யாரோ ஒருத்தி உரத்த குரலில் எதிர் வீட்டில் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் நடுத்தர வயதடைந்திருந்த மாது. அவள் நிறம் கறுப்பு. அவள் அருகில் அவளைப்போலக் கறுப்பாய் ஐந்து வயதில் ஒரு சிறுவன் இருந்தான். அவள் இடுப்பில் ஒரு ஆறேழு மாசத்துச் சிசு.

அவள் கைக்குழந்தைதான் என்னை அதிகம் கவர்ந்தது. அக்குழந்தை மிக அழகாக இருந்தது.

அவளையும், குழந்தையையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே, அப்படியே வாயிற்படியில் நின்று கொண்டிருந்தேன்.

அந்த வீட்டில் ஏதோ போட்டார்கள். வாங்கிக் கொண்டு, அடுத்த வீட்டை நோக்கி நடந்தாள். அதற்குள் நான் அவளைக் கூப்பிட்டேன்.

'நல்ல மகராஜி. வயிற்றுக்கு ஏதாவது கொடுக்கத்தான் கூப்பிடுகிறாள்' என்று அவள் எண்ணியிருக்க வேண்டும். மகிழ்ச்சி பொங்கும், மலர்ந்த முகத்துடன் என்னை நோக்கி, அந்தச் சிறுவனையும் அழைத்துக்கொண்டு நடந்து வந்தாள்.

அவளையும், குழந்தைகளையும் கூர்ந்து நோக்கினேன். அவள் இடுப்பில் இருந்த அந்தக் குழந்தையைப் பார்த்தேன்.

முகம் லட்சணமாக இருந்தது. குழந்தை கொழு கொழு என்று நல்ல வளர்த்தியாக இருந்தது. குழந்தையின் நிறம் கறுப்பு என்றும் சொல்ல முடியாது; சிவப்பு என்றும் சொல்ல முடியாது. கறுப்பும் சிவப்பும் கலந்த நல்ல கவர்ச்சியான நிறம். அந்தக் குழந்தையை நான் பூராவும் பார்த்துக்கொண்டு இருந்தால் போதும்; எடுத்து வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தால் போதும் நேரம் போவது தெரியாது போலிருந்தது.

அவளை வீட்டின் உள்ளே கூப்பிட்டு உட்கார வைத்தேன். வீட்டில் எஞ்சியிருந்த சாதத்தைக் கொண்டு வந்து ஒரு இலையில் படைத்தேன்.

நான் படைத்த உணவை, அவளும் அந்தச் சிறுவனுமாகச் சாப்பிட்டார்கள்.

"அம்மா, நான் சரியாகச் சாப்பிட்டு மூன்று நாளாகிறது. உங்கள் புண்ணியத்திலே இன்றைக்குத்தான் கொஞ்சம் திருப்தியாகச் சாப்பிட்டேன். நீங்கள் குழந்தை குட்டிகளோடு நல்லா யிருக்க வேணும்" என்று நன்றி தெரிவித்து என்னை வாழ்த்த ஆரம்பித்து விட்டாள்.

அவள் "குழந்தை குட்டிகள்" என்றதும் என் உள்ளத்தை வேதனை அரித்துத் தின்றது. அந்தப் பாக்கியத்தைத்தான் நான் பெறவில்லையே. மணவாழ்க்கையில் புகுந்து இருபது வருஷங்கள் எப்படியோ சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய் விட்டன. என்னிடம் தாயுள்ளம் பெண்களுக்கே உள்ள உணர்ச்சியுடனிருந்தது. அதை வளம்படுத்திச் செழிக்கச் செய்ய பச்சிளங் குழந்தைதானில்லை!

செல்வம் நிறையக் குவிந்து கிடக்கிறது. அவர் வழியிலும் என் வழியிலுமாக. என் கணவருக்கும் நல்ல சம்பளமுள்ள பெரிய உத்தியோகம். இத்தனையிருந்தும், ஆண்டு அனுபவித்து மகிழ ஒரு குழந்தைதான் இல்லை.

இப்படிப்பட்ட என்னைப் பார்த்துத்தான் அவள் "உங்கள் பிள்ளைகுட்டிகள் நல்லா யிருக்கணும்!" என்று வாழ்த்தினாள். தான் சொன்னது என் மனத்தை இவ்வளவு தூரம் கிளறி விட்டு விடும் என்பதைப் பாவம், அவள் எப்படி யறிவாள்! உறங்கிக் கிடந்த என் உள்ளத்து உணர்ச்சிகளை அவள் இன்று தட்டி எழுப்பி விட்டாள். ஆம், அவளுடைய சின்னஞ்சிறு குழந்தை பூரண சந்திரனைப் போன்று எனக்குக் காட்சி யளித்தது.

கண்களில் இலேசாகப் படர்ந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவளைப் பார்த்தேன். அவள் குழந்தையை ஆவலுடன் பார்த்தேன். அதைக் கையில் தாங்கி கொஞ்ச வேண்டும்போல் தோன்றியது. குழந்தையை வாங்கக் கையை நீட்டினேன்.

அவள் குழந்தையைக் கொடுத்தாள். வாங்கிக் கொண்டேன். குழந்தையைக் கட்டி யணைத்து, கொஞ்சிக் குலாவி, உச்சி மூகர்ந்து முத்தமிட்டேன். என் ஆசை தீர முத்தமிட்டேன்; அணைத்துக் கொண்டேன். குழந்தையைத் திரும்பவும் அவளிடம் கொடுக்க மனசு வரவில்லை. குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டே, "நீ யாரம்மா! உன் பெயர், ஊர் எல்லா விவரங்களையும் சொல்லு, கேட்போம்!" என்றேன்.

அவள் சொன்ன விவரம் இதுதான்:

அவள் பெயர் வள்ளி. கைத்தறி நெசவுத் தொழிலில் பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டு வந்திருந்த குடும்பத்தைச் சேர்ந்தவள். இருநூறு மைல்களுக்கு அப்பால் அவளுடைய சொந்த ஊர் இருந்தது. நெசவுத் தொழில் நசித்துக் கொண்டு வந்தது. ஜனங்கள் முன்போல கைத்தறிச் சேலை, வேட்டிகளை வாங்குவதில்லை. இந்த வியாபாரத்திலும் மந்தம் ஏற்பட்டது. நாகரிக மிகுந்த ஜனங்களின் மோகம் வேறு விதத்தில் மாறி விட்டது. கஷ்டத்திற்குத் தொழில் நடத்த யார் தான் விரும்புவார்கள்! பத்து, இருபது தறிகள் வைத்திருந்தவர்கள் எல்லாரும் தொழிலை நிறுத்த மனமில்லாமல், பெயருக்கு மட்டும் ஒரு தறி வைத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அவள் கணவர் கூலிக்கு நெய்து கொடுப்பவர். அவளும் நூல் சுற்றிக் கொடுப்பாள். இருவருக்குமே இப்பொழுது வேலை இல்லை. வேறு தொழில் செய்யவும் அவர்களால் இயலாது. செய்ய எண்ணினாலும் வேலை கிடைக்கவில்லை. அவளுக்கு நாலு குழந்தைகள். இரண்டு ஆண், இரண்டு பெண். கணவன், மனைவி குழந்தைகளுடன் ஊரைவிட்டேபிழைப்பை நாடி வெளியூருக்குக் கிளம்பி விட்டார்கள். கிளம்பி வந்து ஒரு மாதம்தானாகிறது. தறி வேலை கிடைக்குமா என்று எங்கெங்கோ அலைந்தும் பயன் இல்லை. வயிற்றுக்கு ஏதாவது சாப்பிட்டு, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். கடைசியில் பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவள் கணவன் இரண்டு பெரிய குழந்தைகளை அழைத்துக்கொண்டு வேறு பக்கமாகப் போயிருந்தார். சாயந்திர வேளையில் குளத்து மேட்டு மண்டபத்தில்தான் அவர்கள் ஒன்றாகச் சந்திப்பார்கள். இரவு கழிந்ததும், மறுபடியும் இதே பிழைப்புதான்.

அவள் கதையைக் கேட்டதும், அவளுடைய வறிய நிலையைக் கண்டு, என் உள்ளம் அவளுக்காகப் பரிதாபப்பட்டது. "ஐயோ, பாவம்! நன்றாய் இருந்த உங்களுக்கு இந்தக் கதி வர வேண்டுமா! இது காலத்தின் கொடுமைதான்! இயந்திர யமன் உங்கள் வாயில் மண்ணை வாரிப் போட்டு விட்டது. பணக்காரர்களின் மனம் இளகி, ஏழைகளுக்காக இரங்கி, கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால், கைத்தறி நெசவுத் தொழில் நசித்துப் போயிருக்காதே. ஜனங்கள் விரும்பும் துணிகளைக் குறைந்த விலையில் நிறைய கைத்தறிகளில் உற்பத்தி செய்து தரமுடியுமே. வாழையடி வாழையாக இரண்டாயிரம் வருஷங்களாக யிருந்துவரும் இந்தக் குடிசைத் தொழிலும் இப்படி க்ஷீணித்துப் போயிருக்காதே" என்று கூறி அவளுடன் சேர்ந்து நானும் ரொம்பவும் வருத்தப்பட்டேன்.

"அம்மா, உங்கள் தங்கமான மனசைப் போல் எல்லாருக்கும் இருந்துவிட்டால், ஏழைகளாகிய நாங்கள் ஏன் இப்படி இருக்கிறோம்!" என்றாள்.

சிறிது நேரம் நான் பேசாமல் மௌனமாக யிருந்தேன்.

"அம்மா, உங்களுக்கு எத்தனை குழந்தை குட்டிகள்!"



என்றாள் அவள் என்னைப் பார்த்து. "அதைக் கேட்காதே, எனக்குக் குழந்தைகளே பிறக்கவில்லை. இருபது வருஷங்களாக இப்படியேதான் இருக்கிறேன்" என்றாள். அப்பொழுது எனக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. அதை அடக்கிக் கொண்டு, "வள்ளி!" என்று நான் உணர்ச்சி வசப்பட்டு அவளைக் கூப்பிட்டேன்.


"என்னம்மா!" என்றாள் அவள்.

குழந்தையை முத்தமிட்டு மீண்டும் அவளிடம் கொடுத்தேன். "உன் குழந்தை என்னைக் கவர்ந்து விட்டது. அதுமட்டுமல்ல. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு அன்பையும் பாசத்தையும் என்னுள்ளே தோற்றுவித்து விட்டது. நீங்கள் கஷ்டப்பட நான் பார்க்க மாட்டேன். இரு. என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்" என்று வீட்டின் உள்ளே போய்த் திரும்பி வந்தேன்.

ஒரே திகைப்புடன், வள்ளி குழந்தையை அணைத்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

"இரண்டு படி அரிசி தருகிறேன்; எடுத்துக் கொள். பத்து ரூபாய் பணமும் இதோ இருக்கிறது; பெற்றுக் கொள். நாளைக் காலையில் உன் கணவனை அழைத்துக் கொண்டு வா. என் கணவரிடம் சொல்லி, உன் கணவனை எங்காவது வேலையில் அமர்த்தி வைக்கச் சொல்கிறேன். சௌகரியமாக இருக்கலாம்" என்று என் உள் உணர்ச்சிகளை அப்படியே கொட்டினேன்.

"அம்மா, உங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவது என்று எனக்குத் தெரியவில்லை, அம்மா. நீங்கள் சொல்கிறபடி கேட்கவும், உழைக்கவும் நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம். நான் நாளைக்கு வருகிறேன், அம்மா!" என்று அவள் கையெடுத்துக் கும்பிட்டு விட்டுப் போய் விட்டாள்.



அந்தக் குழந்தையினிடத்து என்ன மந்திர சக்திதான் இருந்ததோ — எனக்குத் தெரியாது. வயிற்றுப் பசியோடு என் வீடு தேடி யார் யாரோ வந்திருக்கிறார்கள். கூடுமான வரை இல்லையென்று சொல்லாமல், ஏதாவது போட்டு அனுப்பி யிருக்கிறேன். ஆனாலும் வள்ளிக்குக் கொடுத்தது போல் யாருக்கும் கொடுத்ததில்லை.

பொழுது சாய்ந்தது; கடிகாரம் ஆறு தடவைகள் மணியடித்து ஓய்ந்தது. என் கணவரும் ஆபீஸிலிருந்து வழக்கம்போலவே வீடு வந்து சேர்ந்தார்.

கை, கால், முகம் கழுவ அவரிடம் தண்ணீர் எடுத்துக் கொடுத்தேன். கடர்கடக் காப்பி கொண்டு வந்து கொடுத்தேன். என்றுமில்லாமல், அன்று என்னிடம் உற்சாகமும், உள்ளத்தில் ஒருவிதத் தெம்பும் மிகுந்து காணப்பட்டன. என் முகமும் மலர்ச்சியுடன்தா னிருந்தது. என்னிடம்

## சர்க்கார் ஆஸ்பத்திரிகள்

மே மாதக் "கல்கி" இதழ்களில் க்ஷயரோக ஆஸ்பத்திரிகளில் ஏழை நோயாளிகளுக்கு இடம் அளிப்பது பற்றி எழுதி யிருந்தது அத்தனையும் உண்மைதான். மூன்று வருஷங்களுக்கு முன்பு, என் நண்பர் ஒரு ஏழை நோயாளி, இப்படிப் பதிவு செய்தும் இடம் கிடைக்காமல் மூன்று மாத காலம் தள்ளாடி நடந்து கொண்டிருந்து விட்டு, ஒரு நாள் வீட்டில் இறந்தார். அப்பொழுது இடம் கிடைப்பது ஆள் சிபாரிசினாலும் அல்லது ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் டாக்டர் மூலமாகவும்தான். 'படுக்கை இல்லை' என்கிற பொய்ச் சொல் எப்பொழுதும் இருந்து கொண்டுதான் வருகிறது.

பர்மாவில் ஐ. எம். எஸ். அதிகாரிகள் இருந்த காலத்தில் நோயாளிகளுக்குச் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இடம் கிடைப்பது அபூர்வம். சர்க்கார் டாக்டர்கள் வீட்டில் அவர்களைத் தனியாகக் கலந்து பேசும் நேரங்களின் அட்டவணைப் பலகை வெளியில் தொங்கும். அந்த நேரங்களில் நோயாளிகள் அங்கு சென்று ரூ 15 மேஜையின் மேல் வைத்தால்தான் ஆஸ்பத்திரியில் உடனே படுக்கை காலியாகும். சர்க்கார் டாக்டர்கள் தனிப் பயிற்சி செய்யக்கூடாது என்கிற சட்டம், வெறும் தாளில் இருந்து கொண்டுதான் வருகிறது.

கோவில்பட்டி
15—6—54

பி. பாலராஜ்

தோன்றிய மாறுதல்களை என்னைப் பார்த்தவுடனேயே கண்டு கொண்டார் என் கணவர்.

"என்ன கமலா! உற்சாகம் ஒரேயடியாய்க் கரை புரண்டோடுகிறது. என்ன விஷயம்?" என்று ஆவலாகக் கேட்டார் அவர்.

வள்ளி வந்தது முதல், அவள் திரும்பிப்போனது வரை நடந்தது ஒவ்வொன்றையும் சொன்னேன். அவளுடைய அபூர்வக் குழந்தையைப் பற்றிச் சொன்னேன். "அந்தக் குழந்தையை என்னால் மறக்க முடியவில்லை. என் கண்ணிலேயே இருக்கிறது" என்றும் சொன்னேன்.

அவர் இலேசாகச் சிரித்தார். "விஷயம் இவ்வளவுதானா! என்னவோ ஏதோ என்று பயந்து போனேன். பெண்களின் குணம் எப்பொழுதுமே இப்படித்தான். அந்த வள்ளியும் அவள் கணவனும் நாளை வரட்டும். உன் அருமைக் குழந்தையும் வரட்டும். நம்மால் முடிந்த உதவியைச் செய்வோம்" என்றார் என் அன்புக் கணவர்.

** ** **

மறு நாள் காலையில் வள்ளி தன் கணவனுடனும், நான்கு குழந்தைகளுடனும் வந்து சேர்ந்தாள். நான் ஓடிப் போய் என் உள்ளங் கவர்ந்த அவள் கைக் குழந்தையை வாங்கி அணைத்துக் கொண்டேன். குழந்தையை என் கணவரிடம் கொண்டு போய்க் காண்பித்தேன். அவரும் அதைப் பார்த்து விட்டு அப்படியே ஆச்சரியப் பட்டுப் போனார்.

என் கையிலிருந்த குழந்தையை அவர் வாங்கிக் கொண்டார். கட்டியணைத்து முத்தமிட்டார். நான் ஒருத்திதான் குழந்தை ஆசையை மனத்திலுள்ளே வைத்து வெம்பி வாடிப் போகிறேன் என்று நினைத்தது போக, என்னுடைய 'அவரும்' குழந்தைக்காக ஏங்குகிறார் என்பதை அப்பொழுது தான் தெரிந்து கொண்டேன். குழந்தையைத் தூக்கி வைத்து மகிழ்ந்த அவரைப் பார்த்த எனக்கு அப்படித்தான் எண்ணத் தோன்றியது.

சிறிது நேரத்துக்குப் பிறகு குழந்தையை என்னிடம் கொடுத்து விட்டு, "வாருங்கள், இப்படி வந்து உட்காருங்கள்" என்று உட்கார வைத்தார். தாமும் உட்கார்ந்து கொண்டார்.

"உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"முருகன்" என்று வள்ளியின் கணவர் பணிவுடன் சொன்னார்.

முருகனுக்கு எங்கள் வீட்டில் கிடைத்த மரியாதையைக் கண்டு அவர் மலைத்து போனார்.

"நீங்கள் இன்று என் வீட்டில் சாப்பிட்டு விடுங்கள். யாரிடமாவது சொல்லி ஏற்பாடு செய்து உங்களுக்குக் கைத் தறி வேலையே கிடைக்கும்படி செய்கிறேன். அது கிடைக்கா விட்டால், எனக்குத் தெரிந்த கம்பெனி ஒன்று இருக்கிறது. அதில் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் வேலை வாங்கித் தருகிறேன். எங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் எங்காவது வீடு பார்த்துக் குடியிருந்து கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தை வைக்க முன் செலவுக்குப் பணம். இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்றார் என் கணவர்.

என் கணவர் கூறியதைக் கேட்டதும், முருகனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. வள்ளியும் தன் கணவனைப் போலவே மகிழ்ந்தாள்.

"ஐயா, தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்த தறிவேலையை விட வேண்டாம். அதனால்

ஆதாயம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் வேலை கிடைத்தால் அதில்தான் எனக்குத் திருப்தி. அப்படியில்லையென்றால், நீங்கள் சொல்கிறபடி கம்பெனியில் சேர்ந்து விடுங்கள். எப்படியாவது இந்தக் குழந்தைகள் பிழைக்கவாவது கூலி கிடைத்தால் போதும். உங்கள் உதவியை என் மூச்சு இருக்கும் வரையில் மறக்கமாட்டேன்" என்றார் முருகன். அவர் வார்த்தைகளில் நன்றி உணர்ச்சி பொங்கி நின்றது.

** ** **

அன்றையப் பொழுது போயிற்று. என் கணவர் வீடு திரும்பியபோது, நல்ல செய்தியுடன் தான் வந்தார். அவருக்கு மிகவும் வேண்டிய, அவர் வார்த்தையைத் தட்டாத, ஒரு பெரிய கைத்தறி முதலாளி இருந்தார்.

அவர் முருகனுக்கு இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வேலை தருவதாக வாக்களித்து விட்டதாகக் கூறினார்.

இந்தச் செய்தியைக் கேட்ட நான்தான் எல்லாரையும் விட அதிகச் சந்தோஷமடைந்தேன்.

வள்ளி, முருகன் இவர்கள் சந்தோஷத்தை வார்த்தைகளால் சொல்லி முடியாது.

முருகனும் கைத்தறி வேலைக்குப் போனார். நம்பிக்கை இழந்து, இருந்த வேலையையும் விட்டுப் பிழைக்க வழி தேடி, ஊரைவிட்டு நூற்றுக் கணக்கான மைல்கள் வந்திருந்த அவர்கள் குடும்பத்தில் மீண்டும் மகிழ்ச்சி மலர்ந்தது.

எனக்கு வள்ளி எப்படி ஒரு நல்ல துணை ஆகி விட்டாளோ, அதைப் போல என் கணவருக்கு முருகனும் ஒரு நல்ல துணை ஆகி விட்டார்.

வள்ளி எனக்கு வீட்டுக் காரியங்களில் ஒத்தாசையாக இருப்பாள். அடிக்கடி தன் குழந்தைகளுடன் என் வீட்டுக்கு வந்து வெகு நேரம் இருந்து விட்டுப் போவாள். நான் அந்தக் குழந்தையை— சொல்ல மறந்து விட்டேன், அதன் பெயர் பொன்னி — எடுத்து வைத்துக் கொஞ்சுவேன்.

பொன்னி அதிர்ஷ்டக் குழந்தைதான்! அவர்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்குந்தான். பொன்னி அவர்களுடைய வறுமையைப் போக்கி விட்டது போல், எங்களுடைய பிள்ளையில்லாக் குறையையும் நீக்கி விட்டாள். அப்படி ஒரு குறை என்னிடம் இருந்ததா என்று எண்ணும்படி செய்து விட்டாள் என் அருமைப் பொன்னி.

இப்பொழுது பொன்னி என் குழந்தை போலத்தான். இரண்டு வயதுப் பெண்ணாகி விட்டாள். தாயார் கூப்பிட்டாலும் போக மாட்டேன் என்கிறாள். அங்கு தலையைக் காட்டுவதும், இங்கு வந்து தங்கிவிடுவதுமாகவே இருக்கிறாள்.

வள்ளிக்கு, பொன்னி இங்கிருந்தால் என்ன! அங்கிருந்தால் என்ன! எல்லாம் ஒன்றுதான். எனக்கும் அப்படித்தான்.

என் கணவருக்குப் பொன்னி வந்ததிலிருந்து வாழ்க்கையில் புதியதோர் உற்சாகமும் விருப்பும் ஏற்பட்டு விட்டது. ஓய்வு கிடைத்த நேரமெல்லாம் பொன்னியுடன் விளையாடுவதும் அவள் மழலை மொழி கேட்டு மகிழ்வதிலும் நேரத்தைக் கழிக்கலானார்.

பொன்னி என் வீட்டுக்கு வந்த அதிர்ஷ்டமோ என்னமோ இப்பொழுது நான் இரண்டு குழந்தைக்குத் தாயாராக இருக்கிறேன். யார் என்ன சொன்னாலும் பொன்னி எனக்கு அதிர்ஷ்டக் குழந்தைதான். அவள் நீடூழி வாழட்டும்.

# சோஷலிஸமே தார்மிக வாழ்க்கை

எஸ். விஜயலக்ஷ்மி எம். ஏ., எம். லிட்.

உலகில் எல்லோரும் தங்களைச் சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக் கொள்ளவே விரும்புகின்றனர். சோஷலிஸ தத்துவத்தைப் பெரும்பாலான மக்கள் ஆதரிக்கின்றனர். பல ஆயிரக் கணக்கானவர்கள் தங்களைச் சோஷலிஸ்டுகள் என்று கூறிக் கொள்ளும் அளவுக்குச் சோஷலிஸத்தில் என்ன வசீகரத்தை நாம் காணுகின்றோம்!

நாம் வாழும் சமுதாயம் அநீதி நிறைந்தது. அநீதி நிறைந்த அமைப்பில் ஒரு சிலர் வசதியுடன், சலுகைகள் பல பெற்று வாழவும், லக்ஷக் கணக்கானவர்கள் வறுமையில் உழைத்து அழியவுமே வழி வகுக்கப்பட்டிருக்கிறது. நமது சட்டங்களும், நியாயஸ்தலங்களும், பாராளும் மன்றங்களும், சர்க்காரும், இவைகளை உருவாக்கிய அரசியல் அமைப்பும் வசதி பெற்றவர்களின் நல்வாழ்வுக்கு உத்திரவாத மளிக்கின்றன. அந்த முறையை மாற்றிச் சமுதாயத்தை நீதியும், நியாயமும் நிறைந்ததாகச் செய்ய வேண்டுமென்பது தான் சோஷலிஸ்டுகளின் நோக்கம்.

சமுதாயத்தை மாற்றி, புதிய வாழ்வு முறையை வகுக்க முயலும் ஒரு சித்தாந்தம் சோஷலிஸம். மனிதனுக்கு மனிதன் பரஸ்பரத் தொடர்பு கொண்டு வாழ்க்கை நடத்த மனிதனைத் தூண்டி அவன் உள்ளத்தைத் தொடும் லக்ஷ்யமே சோஷலிஸம். "சோஷலிஸ கருத்துக்கள் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதம் நடைமுறையில் அனுஷ்டிக்கக்கூடியவை. பத்து சத விகிதமே தத்வார்த்தமானது" என்கிறார் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்.

சோவியத் நாட்டைச் சோஷலிஸ நாடு என்று சொல்லுகின்றனர். பண்டித நேருஜியும் தாம் ஒரு சோஷலிஸ்டு என்று சொல்லிக் கொள்ளப் பிரியப்படுகின்றார். ஹிட்லரும், முஸோலினியும் தங்களைச் சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டு வந்தே மக்களின் பேராதரவைத் திரட்டிக் கடைசியில் சர்வாதிகாரியானார்கள்.



மைலாப்பூரில் ஸ்ரீ நரசிம்ம ஜயந்தியை யொட்டிப் பல நாட்டிய நாடகங்கள் நடைபெற்றன. 'உஷா பரிணயம்' என்னும் நாடகத்தில் பாணாசுரனுக வேஷந் தரித்து நடித்த ஸ்ரீ ஜி. சுவாமிநாதனை மேலே காணலாம்.

ஆனால் சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்ட ஸ்டாலின், ஹிட்லர், முஸோலினி இவர்களின் நாடுகளில், மனிதனுக்கு மனிதன் பரஸ்பர உறவும், நம்பிக்கையும் அழிந்து, பலாத்காரமும், ரகசிய இயக்கங்களும் அதிகரித்தன. இந்நாடுகளில் சோஷலிஸத்துக்கு அவசியமான ஜனநாயக சூழ்நிலை இருக்கவில்லை. மனிதனின் ஆக்கத் திறமையிலும், நல்லெண்ணத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள்தான் உண்மையான ஜனநாயக அமைப்பை ஆதரிப்பார்கள். சோவியத் ரஷ்யாவில் சோஷலிஸத்தின் பெயரால் நடப்பதை நாம் காணும்பொழுது, சோஷலிஸ தத்துவத்தைப் பற்றிச் சில சந்தேகங்கள் பலருக்கு ஏற்படுவது இயற்கைதான். இப் பிரச்னைகளை, சோஷலிஸ லட்சியத்தில் பற்றுள்ளவர்கள் கவனித்துப் புரிந்து கொள்ள வேண்டும். அவைகளை நன்கு புரிந்து கொண்டு பணியாற்றாவிடில் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் நாம் வெற்றிபெற முடியாது" என்று ஸ்ரீ ஜெயபிரகாஷ் நாராயணன் கூறுகிறார்.

சமுதாயத்தின் அடிப்படையில் ஒரு சில மாறுதல்களை ஏற்படுத்தி அவைகளின் மூலம் சூழ்நிலையை மாற்றிப் பல வருஷங்களாகத் தாங்கள் கனவு கண்டு வந்த லட்சிய சமுதாயத்தைச் சோவியத் ரஷ்யாவில் உருவாக்கியுள்ளனர்! பொருளாதாரத் துறையில் தொழில்களைத் தேசிய மயமாக்கினார்கள். நிலங்களைக் கூட்டுப் பண்ணைகளாக்கி, விவசாயிகளைச் சாதாரணக் கூலிகளாக்கி விவசாயத்தை நடத்துகின்றனர்.

இதுதான் சோஷலிஸமா! இல்லை! இது அரசாங்க முதலாளித்துவம்! அமெரிக்காவில் எப்படி உற்பத்தி முறை யந்திர மயமாக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வாறே சோவியத் நாட்டிலும் உற்பத்தி முறை யந்திர மயமாக்கப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளிலும் கூலிக்கு ஆட்களை வைத்துத் தான் தொழில்களை நடத்துகின்றனர். அமெரிக்காவில் தனி முதலாளிகள் தொழில்களை நடத்துகின்றனர். ரஷ்யாவில் அரசாங்கமே தொழில்களை நடத்துகிறது. உற்பத்தி முறையில் இரண்டு நாடுகளுக்குள்ளே எவ்வித வித்தியாசமுமில்லை. உற்பத்தி உறவுகளில்தான் வித்தியாசம். இரண்டு நாடுகளிலும் உழைப்பவர்கள் கூலியாட்களாகவே கருதப்படுகின்றனர். தொழிற்சாலைகளில் தொழிலாளர்களைச் சரிசம பங்குள்ள உற்பத்தியாளர்களாகக் கருதுவதில்லை. அரசாங்க முதலாளித்துவமே யன்றி இது சோஷலிஸமாகாது.

சோவியத் ரஷ்யாவில், சோஷலிஸ அடிப்படையில் சமுதாயத்தை நிர்மாணிக்கவோ, அல்லது சோஷலிஸ லட்சியத்துக்குப் புதியமெருகு கொடுக்கவோ இல்லை. கம்யூனிஸ்டுக் கட்சி அங்கே அதிகாரத்தைக் கைப்பற்றியதும், அதிகார வேட்டையின் காரணமாகக் கட்சியினுள் பல சச்சரவுகள் ஏற்பட்டன. அதிகார வேட்டையில் வெற்றி பெற மிகக் கீழ்த்தரமான முறைகளெல்லாம் கையாளப் பட்டன. கம்யூனிஸ்டு ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் நாடுகளிலும் இதே முறையைத் தான் கையாண்டு வருகின்றனர்.

சோவியத் ரஷ்யாவின் உதாரணம், உலக சோஷலிஸ்டு கட்சிகளுக்கு எச்சரிக்கையாக விளங்குகிறது. ஆகவே, லட்சியச் சிதைவு, தார்மிக எண்ணங்களின் வீழ்ச்சி இவைகளைப் பற்றிச் சோஷலிஸ்டுகள் சிந்திக்க வேண்டும்.

சோஷலிஸ லட்சியத்துக்கு அடிப்படையாக விளங்குகிற மார்க்ஸிய தத்துவத்தில் தார்மிகத்துக்கு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. மனித சுபாவத்துக்கே உரிய பலஹீனத்தாலும், மனிதனுடைய ஆசை, சுயநலம், மடத்தனம், பயம் போன்ற பல குணங்களாலும், தார்மிக வீழ்ச்சி ஏற்படுகின்றதென்பதும் உண்மை.

தார்மிக வீழ்ச்சியிலிருந்து மனிதன் தான் தப்புவதற்கு முயல வேண்டும். தனி மனிதனை மாற்றச் சிறிதும் பிரயத்தனப்படாமல் பொருளாதார, அரசியல், சமூக அடிப்படையில், சமுதாயத்தை மாத்திரம் மாற்ற எடுக்கப்படும் முயற்சிகள் வியர்த்தமே. திருத்தப்பட்ட சூழ்நிலையிலும், புதிய சமுதாயத்திலும், மாற்றப்படாத மனிதனின் தீய குணங்கள் கேட்டையே விளைவிக்கும்.

சூழ்நிலையை அறவே மறந்து மனிதனை மாற்றும் செயலில் பலர் முயன்றனர் என்பதை நாம் சரித்திரத்தில் காணுகின்றோம். உதாரணமாகச் சமுதாயத்தை மாற்ற மனிதனை மாற்ற வேண்டுமென்று புத்தர் அபிப்பிராயப் பட்டார். மனிதனின் எல்லை கடந்த ஆசையே உலகத்திலுள்ள துன்ப மனைத்துக்கும் காரணம். தனி மனிதனின் ஆசையை அகற்றி அவனைத் திருத்தினால், அவன் வாழும் சமுதாயத்திலும் துன்பம் இருக்காது என்பது புத்தரின் சித்தாந்தம். இது மிக மேன்மையான முயற்சி.

இன்று உலகில் சமுதாயத்தை மாற்ற விரும்பும் சோஷலிஸ்டுகள் மற்றொரு தவறைச் செய்து வருகின்றனர். "மனிதன் மாற வேண்டுமானால் அவன் வாழும் சமுதாயத்தையும், சூழ்நிலையையும் மாற்றி விட்டால் மனிதனை மாற்றி விடலாம். சூழ்நிலை மனிதனை மாற்ற வல்லது" என்று சொல்லுகின்றனர். புதிய சமுதாயத்தை உருவாக்க இதுவும் ஒருபட்ச முயற்சியாகும்.

மனிதனையும் மாற்றி அவன் வாழும் சமுதாயத்தையும் மாற்ற வேண்டுமென்று காந்திஜீ கூறினார். ஜெயப்பிரகாஷும் இன்று இதையே வற்புறுத்துகிறார். உண்மையான சோஷலிஸ்டுகள் மனிதனையும், சமுதாயத்தையும் மாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடல் வேண்டும். சமுதாயத்தை மாத்திரம் மாற்றி விட்டால், மற்ற எல்லாம் சரியாகப் போய் விடும் என்று நினைக்கும் தவறை இந்திய சோஷலிஸ்டுகள் செய்யவே கூடாது என்று ஜெயப்பிரகாஷ் எச்சரித்திருக்கிறார்.

சமுதாயத்தை மாற்றி அதில் வாழும் மனிதனை மாற்றவில்லையென்றால் புதிய சமுதாயத்திலும், கூடப் பழைய எண்ணங்களில் ஊறி வளர்ந்து போன மனிதன் தன் எண்ணங்களையும், ஆசைகளையும் பூர்த்தி செய்து கொள்ளக் கீழ்த்தரமான முறைகளைத் தொடர்ந்து கையாளுவான்.

தனி மனிதனை மாற்ற முயலாமல் சமுதாயத்தை மட்டும் மாற்ற முயலுவதும், அல்லது சமுதாயத்தை மட்டும் மாற்றாது தனி நபரை மட்டும் மாற்ற முயலுவதினாலும் எவ்வித புதுமையும் உதயமாகாது. அப்படி ஒரு பட்சமாகச் செய்யப்படும் மாற்றத்தினால் புதிய சமுதாயம் உதயமாவதில்லை. பழைய குறைபாடுகளுடன் புதிய குறை பல சேர்ந்த அமைப்பு முறைதான் உண்டாகிறது!

இவ்வாறு ஒரு முகமாக, பல நாடுகளில் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சிகளும் சமூகப் பொருளாதார ஆராய்ச்சிச் சோதனைகளும் தார்மிகச் சிதைவு என்ற புயலினால் பாதிக்கப்பட்டுக் கரையை அடையாத நடுக் கடலில் உடைந்து போன மரக்கலங்களாயின.

சோஷலிஸ சமுதாயத்தைச் சிருஷ்டிக்க மனிதனை மாற்றிச் சமுதாயத்தையும் மாற்ற வேண்டும். அதற்கு நாம் கையாளும் முறைகள் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும். நமது இறுதி லட்சியமாகிய சோஷலிஸ சமுதாயத்தை அடைய இன்று நாம் கடைப்பிடிக்கும் வழிமுறை அந்த லட்சியத்துடன் முரணாகாமல் அதனுடன் தொடர்பு கொண்டதாக இருத்தல் மிக அவசியம். அன்றாட நடவடிக்கைகள் நமது லட்சியத்துக்கு முரணாக இருக்கக் கூடாதென்ற சித்தாந்தத்தைக் காந்திஜீ சொல்லிலும் செயலிலும் செய்து காட்டினார். டாக்டர் லோஹியா, இதையே "உடனடிப் பரீட்சை" என்று சொல்லுகிறார்.

இன்றையச் சமுதாயத்தில் உழைப்பவன் உரிமையற்று, உணவற்று வாழ்கின்ற அநீதி அடியோடு அழிக்கப்பட்டு நீதியும் நியாயமும் நிரந்தரமாய் நிலவுகிற சமுதாயம் நிறுவப்பட வேண்டுமென்ற உன்னத உயரிய நோக்கத்தோடு தான் புரட்சியில் ஈடுபட்டார் லெனின். மக்கள் படும் இன்னல்களைக் கண்டு உள்ளம் கொதித்து, மனம் நொந்து, கருணையினால் தூண்டப்பட்டுத்தான் புரட்சியில் அவரைத் தொடர்ந்து எண்ணற்ற மக்கள் ஈடுபட்டனர்.

ஆனால் புதிய சமுதாயத்தை நிலைநாட்ட லெனினின் வழிவந்த ஸ்டாலின் கையாண்ட முறைகள் புதிய மனித குல நாகரிகத்தை உருவாக்கும் அஸ்திவாரமாகத் திகழவில்லை. அபிப்பிராய பேதத்துக்குச் சிறிதும் இடமில்லாமல் செய்து விட்ட சோவியத் நாட்டினர், லட்சியத்தை அடைய எந்த வழியைக் கையாண்டாலும் பாதகமில்லை; "எவ்வழியும் நல்வழியே" என்று அபிப்பிராயப்பட்டனர்.

ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தார். புரட்சியில் தோளோடு தோள் கொடுத்து நின்ற சக தோழர்கள் சோஷலிஸ சமுதாய நிர்மாணத்துக்குத் தடையாக இருக்கிறார்கள் என்று நினைத்தார். அவர்களது அபிப்பிராயத்துக்கும் தனக்கும் முரண்பாடிருப்பதைக் கண்டு, அபிப்பிராய பேதம் பரவினால் புது சமுதாய அமைப்புக்கு அபாயம் ஏற்படுமென்று அச்சப்பட்டு, அவர்களை அடியோடு அழித்து விட்டார். டிராட்ஸ்கி, ஜினோவிவ், காமினீவ், ரைகாவ் டாம்ஸ்கி, புக்காரின் போன்ற சகாக்களையும் ஸ்டாலின் குற்றம் சாட்டித் தீர்த்துக் கட்டி விட்டார். அவர்களைத் துரோகிகள் என்று கொலை செய்து விட்டார்.

இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? தான் அதிகாரத்திலிருக்க வேண்டுமென்ற ஆசையும், அதன் மூலமாகவே புது சமுதாயத்தை ஸ்தாபிக்க முடியுமென்ற எண்ணமும், அதற்குத் தடையாக உள்ளவர்களை எப்படியாவது ஒழித்துக் கட்டுவது அவசியமென்ற கருத்துமேயாகும். வழிமுறைகளைப் பற்றிக் கவலையில்லை. லட்சியத்தை எப்படியாவது பெற்றாக வேண்டுமென்ற கண்மூடித்தனமான ஆவேசமும் அதிகார ஆசையுமே அடிப்படையான காரணங்கள். அதனால் ஏற்படும் பலன் புது சமுதாயமல்ல! பொருளாதார முன்னேற்றம் வேண்டுமானாலும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மனித குலத்தின் மாண்பு நசித்துச் சீரழிந்து விடுகிறது.

இதனால் வர்க்க பேதமற்ற, சமத்துவ, சுதந்திர மக்களைக் கொண்ட புதிய சமுதாயத்தைச் சிருஷ்

டிக்கும் லட்சிய நோக்குடன் ஆரம்பித்த ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி அதை அடையப் பரிசுத்தமான வழி முறைகளைக் கையாளவில்லை. அவர்களுடைய வழி முறை, லட்சியத்துக்கு முற்றும் முரணானது! தார்மிகத்துக்கு அப்பாற்பட்டது! பரஸ்பர நம்பிக்கைக்குப் பதில் பலாத்காரமும், கொடுங்கோன்மையும் தலைதூக்கி நிற்கின்றன. ஒரே கட்சிக்குள் எத்தனை பிணக்குகள்; எத்தனை சண்டைகள்; எத்தனை சந்தேகங்கள்!

மனிதனும், சமூதாயமும் இரண்டும் மாறினால்தான் சோஷலிஸம் வளர முடியும். சோஷலிஸ இயக்கம், பற்பல அரசியல், பொருளாதார, சமூக சீர்திருத்த திட்டங்களுடன், தார்மிக தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் அவசியம். "ஜனநாயக சோஷலிஸத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த முதல் பிரச்னை தார்மிகத்தை யொட்டிய பிரச்னையே!" என்று இந்திய சோஷலிஸ இயக்கத்தை உருவாக்கும் உன்னத சிற்பி ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறுகிறார். "நன்கு உண்டு, உடுத்தி, உறங்குகின்ற மனித மிருகத்தைச் சிருஷ்டிப்பது சோஷலிஸ தத்துவத்தின் நோக்கமல்ல; இவைகளைச் சொந்த உழைப்பினால் பெற்று வாழும் மனிதன், உள்ளத்தாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்தவனாக வாழ வேண்டுமென்பதுதான் சோஷலிஸத்தின் நோக்கமாகும். ஆகவே சோஷலிஸம் வெறும் பொருளாதார தத்துவம் மாத்திரமல்ல; அதன் அடிப்படை தார்மிக வாழ்வு" என்கிறார் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன்!

# படித்துப் பாருங்கள்!

## பாஞ்சாலங் குறிச்சி வீர சரித்திரம்

(முதற் பாகம்)

சுதந்திரம் வேண்டும், சுயராஜ்யம் வேண்டும் என்னும் மாபெரும் உணர்ச்சிக்கு முதல் வித்திட்ட வீரன் வீரபாண்டியக் கட்ட பொம்மன் என்பதை யாவரும் அறிவர். அன்னிய ஆட்சியை அடலுடன் எதிர்த்து முதல் முழக்கம் செய்த அந்த வீரனின் வரலாற்றைச் சரித்திரச் சான்றுகளுடனும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும் புகழ் பெற்ற தமிழ்ப் பெரும் புலவரான ஸ்ரீ ஜெகவீர பாண்டியனார் எழுதியுள்ளார்.

இந்நூலைப் படித்தவர் எவரும் ஸ்ரீ ஜெகவீர பாண்டியனார் தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை வீரபாண்டியனுடைய வரலாற்று ஆராய்ச்சிக்கே செலவிட்டிருக்க வேண்டுமென்று எளிதில் அறிந்து கொள்ளலாம். தமிழ் நாட்டு மாவீரன் ஒருவனுடைய வரலாறு இவ்வளவு ஆராய்ச்சியுடனும் ஆதாரங்களுடனும் விரிவாக இதுவரையில் எழுதப் பட்டதில்லை யென்று கூறுதல் மிகையாகாது.

வீர பாண்டியக் கட்டப் பொம்மனின் வரலாறும், இந்நூலாசிரியரின் சுவையுள்ள தமிழ் நடையும் தமிழ்ப் பெருமக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டன என்பதற்கு இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருப்பதே தக்க சான்று. பிரசுரம்: திருவள்ளுவர் நிலையம், 127, மேலமாசி வீதி, மதுரை; விலை: ரூ. 5—0—0.

## வான நூல்

வையகத்தில் வாழும் மனிதர்களில் வானத்தை வியப்போடு நோக்காதவர்கள் இல்லை. வான வீதியில் பளிச்சிடும் விண் மீன்களையும், உல்லாசமாகப் பவனி வரும் வெண் மதியையும், கதிர் வீசிக் காயும் கதிரவனையும் பற்றிப் பாடாத கவிஞரே இல்லை. வையகத்தில் எத்தனையோ அதிசயப் பொருள்கள் இருப்பது போலவே, வானத்திலும் தொலை தூரத்தில் எத்தனையோ அதிசயப் பொருள்கள் உள்ளன. மண்ணில் வாழும் மனிதர்களுக்கும், மற்றுமுள்ள மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத இயற்கைச் சக்திகளைப் பெருக்கும் கிரகங்கள் வானத்திலேதான் இருக்கின்றன.

வானுலகங்களின் அதிசயங்களை இந்த வான நூல் நன்கு விளக்குகிறது. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் முதலிய கோள்களின் கதிகள், பூமிக்கும் மேற்படி கோள்களுக்கும் இடையேயுள்ள தூரம் எல்லாவற்றையும் பற்றி விரிவாக இந்நூலில் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. மீன்களின் கூட்டங்கள், விண்மீன்களின் இயல்புகள் முதலிய பிரிவுகளில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் எல்லோரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை.

ஆசிரியர்: அ. சுந்தரமூர்த்தி எம். ஏ.; பதிப்பாளர்: மா. க. மரகதம் அம்மாள் 7-ஏ, அகத்தீசுவரன் கோவில் தெற்கு மாடவீதி, நுங்கம்பாக்கம், சென்னை; விலை: ரூ 4—12—0.

## மாமன் மகள்

பட்டதாரி சுந்தரம் வேலையை இழந்ததும், புரட்சிவாதி யாகிவிட்டான். அதற்குத் தூண்டுகோலாகப் பல தீவிரப் புரட்சி மனப்பான்மையுள்ள நண்பர்கள் அவனுக்குத் துணையானார்கள். புரட்சித் திட்டத்தை அமுலாக்க, மிகப் பெரிய ஆலை முதலாளியும் மிராசுதாருமான நல்லப்பரிடம் சென்று வேலைக்கு அமருகிறான். அழகி வசந்தா நல்லப்பரின் மகள்; சுந்தரத்தின் பள்ளித் தோழி, ஏற்கெனவே அவர்களிடை ஏற்பட்டிருந்த நட்பு இப்பொழுது முதிர்ந்து வளரத் தொடங்கியது. சுந்தரத்தின் தாயார் மீனாட்சியம்மாள், தன் சகோதரன் மகளான ராஜேசுவரியை அவனுக்கு மணம் முடிக்க விரும்புகிறாள். சுந்தரம் தன் திருமணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே யிருக்கிறான். ஏழைச் சுந்தரம் தம் மகளுடன் நெருங்கிப் பழகுவதை விரும்பாத நல்லப்பர் அவனை வேலையை விட்டு விலக்கி விடுகிறார். பிறகு புரட்சிக்காரர்களால் பெரிய விபத்து நல்லப்பர் குடும்பத்துக்கு ஏற்பட்டது. இவ்விஷயம் அறிந்த சுந்தரம், ஓடோடியும் உதவிக்குச் சென்றான். நல்லப்பர் சுந்தரத்தை நல்ல முறையில் அச்சமயம் வரவேற்றாரா! சுந்தரத்தினால் அவரைத் தப்புவிக்க முடிந்ததா! கடைசியில் சுந்தரம் யாரை மணந்து கொண்டான்! இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் பதில், 'புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்க' என்பதுதான்.

79 காட்சிகளும் 459 பக்கங்களும் கொண்ட இம்மாபெரும் நாடகத்தை நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளையவர்கள் மிகச் சுவையுள்ள நூலாக இயற்றி யிருக்கிறார். கதைப் போக்கு, சம்பாஷணை, காட்சிகளின் விறுவிறுப்பான அமைப்புகள் யாவும் மேலே மேலே படிக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

பிரசுரம்; பழனியப்பா பிரதர்ஸ், 4, வெங்கடேச நாயக்கன் தெரு, வாலாஜா ரோடு, சென்னை-5; விலை: ரூ 7-0-0.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 30, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.



ஒவ்வொரு தினமும் நீங்கள் அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத் துக்குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை லைப்பாய் சோப்பினால் கழுவிக்களைந்து தினமும் உங்களைக்காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
லைப்பாயின் ''பாதுகாக்கும் நுரை'' உங்கள் ஆரோக்கி யத்தைக்காப்பாற்று கிறது.
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமி களிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY SOAP
LIFEBUOY SOAP
இந்தியாவில் தயாரித்தது.
L. 246-50 TM

REGISTERED No. M. 4392
*Registered as a newspaper in Ceylon*